# மலையாளக் கவிதை

முனைவர் சிற்பி பாலசுப்பிரமணியம்



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 113.

# மலையாளக் கவிதை

முனைவர். சிற்பி பாலசுப்பிரமணியம்
தமிழ்த்துறைத் தலைவர்
பாரதியார் பல்கலைக் கழகம்
கோயம்புத்தூர்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
டி.டி.டி.ஐ (அஞ்சல்), தரமணி, சென்னை-600 113.

பெருந்தலைவர் காமராசர்
அறக்கட்டளைச் சொற்பொழிவு-2
(13, 14-2-1991)

**Peruntalaivar Kamarajar Endowment Lecture No. 2**
**Endowment Lectures—Publication No. 25**

---


## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title | : | Malaiyalak Kavitai |
| Author | : | Dr. Sirpi Balasubramaniam<br>Prof. & Head, Dept. of Tamil<br>Bharathiar University<br>Coimbatore - 641 046 |
| Publishers<br>Copyri ht | : | International Institute of Tamil Studies<br>T.T.T.I (Post), Taramani,<br>Madras-600 113. |
| Publication No. | : | 158 |
| Language | : | Tamil |
| Date of Publication | : | December 1991 |
| Edition | : | First |
| Paper used | : | Nowgong 60 GSM |
| Size | : | 21×14 cms |
| Printing Types | : | 10 Point |
| No. of Copies | : | 1200 |
| No. of Pages | : | VI+96 |
| Price | : | Rs. 15/- |
| Printers | : | Niraimozhi Achagam<br>124, Velachery Road,<br>Chinnamalai, Madras-15. |
| Binding | : | Board Binding |
| Artist | : | Noble Graphics |
| Subject | : | A Study of Malayalam Poetry |


---

* அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பல்ல.

# பதிப்புரை

நிறுவனத்தின் பதினைந்து அறக்கட்டளைகளுள் ஒன்றான. 'பெருந்தலைவர் காமராசர் அறக்கட்டளை'யின் இரண்டாம் சொற்பொழிவாக, 'மலையாளக் கவிதை' எனும் இந்நூல் வெளிவருகிறது. 13, 14-2-1991 ஆகிய இருநாட்களில் இச்சொற் பொழிவினை, கோவை, பாரதியார் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் சிற்பி பாலசுப்பிரமணியம் நிகழ்த்தினார்.

ஒப்பியல் ஆய்வினை நிறுவனம் மேற்கொள அன்றைய இயக்குநர் முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன் விரும்பினார். அதன்படித் தெலுங்கு, மலையாள, கன்னட, பிராகிருத மொழிகளை அறிந்த தமிழறிஞரிடம் தமிழோடு இணைத்துக் காணும் ஒப்பிய லாய்வு வேண்டப்பட்டது. எனினும் கிடைத்தவை அவ்வம்மொழி பற்றிய கருத்துரைகளே. இவையும் ஓர் வகையில் ஒப்பியலுக்குத் துணை நிற்கின்றன.

அவ்வகையில் 'மலையாளக் கவிதை' நூல் வெளியிடப் படுகிறது. மலையாளக் கவிதை தோன்றி வளர்ந்த வரலாற்றைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் தமிழுலகிற்கு அளித்துள்ள கவிஞர் சிற்பி பாராட்டிற்குரியவர். 'தமிழ் மலையாளக் கவிதைகள்-ஒரு குறிப்பில் ஆசிரியர் தந்துள்ள தமிழ் பற்றிய சில கருத்துரைகள் மாறுபட்ட எண்ணங்களுக்கும் இடந்தருவன. மீளாய்விற்குரியன என்பதில் ஐயமில்லை. தமிழில் பிறமொழிகளுடனான ஒப்பியல் ஆய்விற்குத் தம் நூல்வழித் துணை நின்றுள்ள ஆசிரியருக்கு நிறுவனம் பாராட்டுதலுடன் நன்றியையும் தெரிவித்துக் கொளகிறது.

நிறுவனத்தில் இவ்வறக்கட்டளை நிறுவிய மதுரை, நாடார் மகாஜன சங்கத்தார், துணை நின்ற பிறர், சொற்பொழிவிற்கு வழிவகுத்த நிறுவன முன்னாள் இயக்குநர் முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன் அவர்கள்; நூலாக்கத்திற்குத் துணைநின்ற இயக்குநர் (பொறுப்பு) முனைவர் அன்னி தாமசு அவர்கள், சொல்லகராதி தயாரித்தளித்த ஆய்வு மாணவி நா. புனிதப் பொற்கொடி, நன்முறையில் அச்சிட்டுத்தந்துள்ள நிறைமொழி அச்சகத்தார் அனைவருக்கும் நிறுவனத்தின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்

ச. சிவகாமி

அறக்கட்டளைப் பொறுப்பாளர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை
4-12-91



# ஆசிரியர் அறிமுகம்

பெயர் : முனைவர் பொ. பாலசுப்பிரமணியம் (சிற்பி)

பிறப்பு : 29-7-1936

பணி : தமிழ்த்துறைத் தலைவர், பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.

படைப்பிலக்கியம், ஒப்பிலக்கியம், மரபிலக்கணம், பண்டைத் தமிழ்லக்கியம், தற்காலத் தமிழ், மொழிபெயர்ப்பு எனப் பல்துறை வல்லுநர். பல ஆய்வாளரை உருவாக்கியவர்.

நிலவுப் பூ (1963), சிரித்த முத்துக்கள் (1968), ஒலிப்பறவை (1971), சர்ப்ப யாகம் (1974), புன்னகை பூக்கும் பூனைகள் (1980), மௌன மயக்கங்கள் (1982), சூரிய நிழல் (1991) முதலான கவிதை நூல்களை யாததவர், இலக்கியச் சிந்தனை (1989), அசோக சக்கரமும் சிவப்பு நட்சத்திரமும் (1983), தேனீக் களும் மக்களும் (1984) முதலான நூல்களைத் தந்தவர். பல கட்டுரைகள் இதழ்களிலும் மலர்களிலும் வெளிவந்துள்ளன. இவரது படைப்புகள் ஆய்விற்கு மேற்கொள்ளப்பட்டுளளமையும் சுட்டத்தக்கது.

பல பல்கலைக் கழகங்களோடும், கல்லூரிகளோடும் நிறுவனங் களோடும் கல்விப்பணியால் தொடர்பு கொண்டுள்ளவர்; பல்கேரியா வில் நடந்த, 'உலக அமைதிக்கு எழுத்தாளர்' கருத்தரங்கில் கலந்து கொண்ட சிறப்புடையவர். பாரதிதாசன் விருதுபெற்ற இவர் (1991) தமது 'மௌன மயக்கங்கள் நூலுக்காகத் தமிழக அரசின் பரிசு பெற்றவர், இவரது பல கவிதைகள் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

# முன்னுரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மிகச் சிறப்பான முறையில் நிகழ்த்தி வரும் அறக்கட்டளைச் சொற்பொழிவு களில் ஒன்றை ஆற்ற என்னை அழைத்தது.

பெருந்தலைவர் காமராசர் திருப்பெயரால் நிறுவப் பெற்ற அறக்கட்டளையின் சார்பில் 'மலையாளக் கவிதை' குறித்து இரு சொற்பொழிவுகளை நிகழ்த்தினேன். வணக்கத்துக்குரிய பெருந்தகை சிலம்பொலி செல்லப்ப னார் அவர்கள் தலைமை தாங்கிப் பெருமைப்படுத்தினார்.

இரண்டு நாட்களிலும் வருகை தந்த பெருமக்கள் மிகுந்த ஆர்வம் காட்டி, வினாக்கள் தொடுத்து விளக்கம் கேட்டு மகிழ்ந்தார்கள்.

அண்மைக் காலத்தில் இந்திய மொழி இலக்கியங் களை அறிமுகம் செய்து கொள்ளும் முயற்சி தமிழ் நாட்டில் எழுந்திருந்தாலும் அண்டை மொழியான மலையாளத்தைப் பற்றிக்கூட நம் அறிமுகம் போது மானதாக இல்லை.

இச்சிறு நூல் ஓரளவு இக்குறையை நிறைவு செய்யும் என்பது என் நம்பிக்கை.

பல மலையாளத் திறனாய்வு நூல்கள், வரலாற்று நூல்கள், கவிதை நூல்களை நான் படித்த போதிலும் இந்நூலுக்கு வடிவமும், செறிவும் சேர்க்கும் பொருட்டு எம். லீலாவதி அவர்களின் 'மலையாள கவிதா சாகித்ய சரித்ரம்' என்ற நூலையே பெரிதும் பின்பற்றியுள்ளேன்.

என்னைச் சொற்பொழிவாற்ற அழைத்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் அந்நாள் இயக்குநர் மதிப்புக் குரிய சிலம்பொலி செல்லப்பனார் அவர்களுக்கும், இந்நாள் இயக்குநர் (பொறுப்பு) முனைவர் அன்னி தாமசு அவர் களுக்கும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனப் பேராசிரியர் கள், மாணவர்கள் அனைவருக்கும் நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகிறேன்.

கோவை  
24.6.91

முனைவர் சிற்பி பாலசுப்பிரமணியம்

# உள்ளுறை

பக்கம்

மலையாளக் கவிதையின் ஊற்றுக் கண்கள் 1—21
பின்புலம் 1, மலையாளமும் தமிழும் 3, சங்க இலக்கியங்கள் 4, காப்பியமும் பிறபடைப்புக்களும் 5, பாட்டு இலக்கியம் 6, நாட்டுப்புறப் பாடல்கள் 8, விடுகதைகள், பழமொழிகள் 12, பழைய மணிப்பிரவாளம் 13, பாட்டு இலக்கியம் - இரண்டாம் கட்டம் 16, இடைக்கால மணிப்பிரவாளம் 20.

மலையாளக் கவிதையின் அருவித்துள்ளல் 22—33
எழுத்தச்சன் 22, பூந்தானம் 25, கதகளியும் ஆட்டக்கதைகளும் 26, குஞ்சன் நம்பியார் 28, தேக்கமும் தெளிவும் 30, வெண்மணி இயக்கம் 31, கேரளவர்மா யுகம் 32, புனைவியலின் தொடக்கம் 33.

மலையாளக் கவிதையின் ஆற்றுப் பெருக்கு 34—88
அழுத கண்ணீர் 34, குமாரன் ஆசான் 36, வள்ளத்தோள் 40, உள்ளூர் 44, நாலப்பாடு 47, கே. கே. ராஜா, வெண்ணிக்குளம், ஜி சங்கரகுருப் 48, சங்கம் புழ 50, பி. குஞ்ஞிராமன் நாயர் 53, பாலாமணி அம்மா 54, பாலா நாராயணன் நாயர், இடசேரி கோவிந்தன் நாயர் 56, வைலோப்பிள்ளி 57 என். வி. கிருஷ்ண வாரியார் 58, எம். கோவிந்தன் 59, ஜி. குமாரபிள்ளை 60, ஒளப்ப மண்ண 61, அக்கித்தம் 62, பி. பாஸ்கரன் 63 வயலார் ராமவர்மா 63, ஓ. என். வி. குருப் 65, புனைவியல் தேக்கமும் புதுக்கவிதை ஆக்கமும 67, அய்யப்பப் பணிக்கர் 68, என். என். கக்காடு 72, விஷ்ணு நாராயணன் நம்பூதிரி 73, சுகதகுமாரி 74, ஆற்றூர் ரவிவர்மா 76, கடம்மனிட்ட இராமகிருஷ்ணன் 77, சச்சிதானந்தன் 81, செம்மனம் சாககோ 85, குஞ்ஞுண்ணி 87, வளரும் கவிதை 88.

தமிழ் மலையாளக் கவிதைகள்—ஒரு குறிப்பு 89—92

துணை நூல்கள் 93

சிறப்புச் சொல்லகராதி 94—96

சஹ்ய மலைகளின் உறுதியும்
சார்ந்துள்ள கடலின் கம்பீரமும்
கோகர்ணக் கோவிலில் நிலவும் பேரின்பமும்
கன்னியா குமரியின் ஆனந்தமும்
கங்கை போல் பெருகும்
பேரியாற்றின் தூய்மையும்
காய்க்கும் தெங்கிள நீரின் இனிமையும்
ஏலம் கிராம்பு சந்தனம்
ஏந்தி நிற்கும் நறுமணமும்
சமஸ்கிருதத்தின் உள்ளார்ந்த வலிமையும்
தமிழ் மொழியின் பேரெழிலும்
கலந்து சிறந்தது எனது தாய்மொழி
கர்வத்தில் மனமே! ஆடு கூத்தாடு!

—வள்ளத் தோள்

# மலையாளக் கவிதையின் ஊற்றுக் கண்கள்

**பின்புலம்**

தென்னிந்தியாவின் மேற்குப் பகுதியில் நீண்டு கிடக்கும் மேற்குத் தொடர்ச்சி மலைக்கும் அரபிக் கடலுக்கும் இடையே வடக்கே காசர்கோடும் தெற்கே பாரசாலைக்கும் நடுவில் அமைந்த ஒரு பச்சைப் பசுந்தோட்டம் கேரளம். இதுவே மலையாள மொழியின் தாயகம்.

அகிலும், சந்தனமும், தேக்கும், ஏலமும், மிளகும் வரலாற்றுக் காலந்தொட்டே உலகுக்கு வாரி வழங்கிய வாணிகத் தொடர்பு கேரளத்துக்கு உண்டு. தொடக்கத்தில் ஃபோனிசியர்கள் சாலமன்

அரசர், கிரேக்கர், ரோமானியர், அராபியர் ஆகியோரது கப்பல்கள் மலையாள மண்ணின் மணப் பொருட்கள் தேடி வந்து சென்றதை வரலாறு பேசும். ரோமானியர்களின் செல்வம் இதனால் செல வழிந்து போவதாகப் பிளினி (கி. பி. 23-70) என்னும் ஆசிரியன் நொந்து கொண்டான். முசிறி, உவரி என்னும் துறை முகங்கள் மேலை நாடுகளுக்கு மட்டுமல்லாது கீழை நாடுகளுக்கும் வணிக மையங்களாய்த் துலங்கின. வால்மீகி காவியத்திலும், கி. மு. 3-ஆம் நூற்றாண்டு அசோகர் கல்வெட்டுக்களிலும் கேரளம் குறிப் பிடப்படுகின்றது. பழமைக்கும் பழமையான வரலாறு கேரளத் துக்கு உண்டு.

கேரளத்தின் முதல் ஆட்சியாளர்களாகச் சேரர்கள் விளங் கினார்கள். கி. மு. 3-ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. 4-ஆம் நூற் றாண்டு வரை முதல் சேரப் பேரரசின் காலமாகவும் கி. பி. 7-ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. 12-ஆம் நூற்றாண்டுவரை இரண்டாம் சேரப் பேரரசின் காலமாகவும் கருதலாம். தமிழ் இலக்கிய வர லாற்றுடன் இணைத்துப் பார்க்கும்போது முதல் பேரரசின் காலம் சங்க காலமாகவும், இரண்டாம் பேரரசின் காலம் பக்தி இலக்கியக் காலமாகவும் அமைகின்றது.

முதல் சேரப் பேரரசின் காலத்தில் வஞ்சி (திருவஞ்சைக்களம்) கொல்லம் நகரங்களை உள்ளடக்கிய மையக் கேரளப்பகுதியைச் சேரர் ஆண்டனர் என்றும், வடக்கே ஏழில் மலைப் பகுதியிலும், தென்கோடிப் பகுதியிலும் சேரர்குடியினரல்லாத சிற்றரசர் ஆண்டனர் என்றும் கருதப்படுகிறது.

மேற்குறித்த மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் தென்னிந்தியப் பகுதிகளில் சிறிது சிறிதாக ஆரியக் குடியேற்றங்கள் தொடர்ந்தன. எனினும் கி. பி. 5-ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் கேரளத்துக்கு ஆரியக் குடியேற்றம் மிகுதியாயிற்று எனக் கிருஷ்ண சைதன்ய குறிப்பிடுகின்றார். கி. பி. 8-ஆம் நூற்றாண்டிலிருந்து இக்குடி யேற்றம் வெள்ளப் பெருக்காய்க் கேரளத்தில் புகுந்தது எனக் கே. எம். தரகன் தெரிவிக்கின்றார். இதனால் இனக்குழுச் சமு தாயமாகவும் நில வழித் தொழிலினராகவும் இருந்த சேரநாட்டு மக்களிடையே புதிய வாழ்க்கைமுறை உருவாகத் தொடங்கியது. பண்டைத் திராவிடத் தெய்வங்கள் உருமாற்றம் பெற்றன.

வைதிகச் சடங்குகளும், புரோகித ஆதிக்கமும் பெருகின. வருண முறைச் சாதியமைப்பு வேரூன்றி வலிமை பெற்றது. பிராமணர் களும் உயர் குடியினரும் நிலவுடைமையாளர்களாய் உயர்ந்தனர். இதனையொட்டியே பரசுராமன் கோடரியை வீசிப் பெற்றுத் தந்தது கேரள நிலம் என்ற கதையும் உருப்பெற்றது. இதன் விளைவுகளை மலையாள மொழியும் இலககியங்களும் பிரதி பலிக்கக் காண்கிறோம்.

## மலையாளமும் தமிழும்

திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மலையாளமும் தமிழும் எவ்வகை உறவுடையவை என்பதில் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன.

மலையாள அறிஞர் பலரும் மூல திராவிடம் அல்லது பழந் தமிழிலிருந்து அனைத்து திராவிட மொழிகளும் கிளைத்து வந் துள்ளன என்பதை ஒப்புக் கொள்கிற அதே சமயத்தில் பழந்தமிழ் வேறு, இன்றைய தமிழ் வேறுஎன்றும் தெரிவிக்கின்றனர். ஆற்றூர், கோதவர்மா, கே. எம். ஜார்ஜ், பி. கே. பரமேஸ்வரன் நாயர், கிருஷ்ண சைதன்ய, தரகன் அனைவரும் தமிழின் உடன்பிறப்பே மலையாளம், மகள் அல்ல என்று மறுக்கின்றனர். கேரள பாணி னியம் தந்த ஏ. ஆர். ராஜராஜவர்மா, எல். ராமசாமி அய்யர் ஆகியோர் மலை நாட்டுத் தமிழ் வட்டாரத் தன்மைகளால் மலை யாளம் ஆகியது என்பர்.

தமிழ் மொழிச் சாயலை மறுக்கும் முன்னையவர் வாதங் களைத் திறம்பட மறுத்து மலையாளப் பேராசிரியர் எம். லீலாவதி மலை நாட்டுத் தமிழே மலையாளமாக உருவாயிற்று என்பதை 'மலையாளக் கவிதா சாகித்ய சரித்திரம்' என்ற தம் நூலில் நிலை நாட்டியுள்ளார். மலை நாட்டார் மலையாளர் எனப் பிறரால் வழங்கப்பட்டிருக்க வேண்டுமெனவும் மலையாளர் பேசிய மொழி மலையாளம் எனப்பெயர் பெற்றிருக்க வேண்டுமெனவும் குறிப்பிடுகின்றார். மலை + அளம் (நாடு), மலை+ஆழம் என்று பொருள் கூறுவதும் அவரால் மறுககப்படுகிறது. எனவே மலை நாட்டு வட்டாரத் தமிழே மலையாள மொழியாயிற்று எனலாம்.

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் தெரசா மாதா கோவில் தொடர்பாக விடுத்த அரசாங்க அறிவிப்பில் தமிழ்மொழியே பயன் படுத்தப்பட்டுள்ளது. மலையாளப் பேச்சு மொழிக் கூறுகள் இதில் கலந்து காணப்படுவதால் இதன்பின் பத்தாம் நூற்றாண்டு முதல் மலையாளம் தனித்தன்மை பெற்றது எனலாம். வட்டார மணம் கலந்த மொழியும் மெல்ல மெல்லத் தனித்தன்மை பெற்று வரும்போது சமஸ்கிருத இலக்கண இலக்கிய ஆதிக்கத்திற்குட் பட்டுத் திரிபடைந்தது. இதனால்தான் கி. 14-ஆம் நூற்றாண்டு இலக்கணமான லீலாதிலகம் கேரள பாஷா என மலையாளத்தை யும் சோழபாஷா எனத் தமிழையும் வேறுபடுத்திக் கூறுகின்றது.

இவ்வாறே கேரளம் என்ற பெயர் பற்றியும் கருத்து வேறு பாடு நிலவுகிறது. நாளிகேரம் எனத் தென்னைக்கு அமைத்த பெயரிலிருந்து கேரளம் என்ற பெயர் வந்தது என்பர். ஆயினும் சேரலம் என்பதே கேரளமாகத் திரிந்தது என்பதே பொருந்துவ தாகும். கடலும் கரையும் சேர்வதால் சேரநாடு எனப் பெயர் பெற்றது என்பாரும் உண்டு.

இவையனைத்தும் தமிழ்-மலையாள நெருக்கத்தை மேலும் உறுதி செய்கின்றனவேயன்றிப் பெரும் மறுப்புக்களுக்கு இடம் தருவதில்லை.

## சங்க இலக்கியங்கள்

வரலாறும், கிடைத்துள்ள சான்றுகளும் சங்க இலக்கியங் களையே மலைநாட்டுத் தமிழாக இருந்த மலையாளத்தின் ஆதி இலக்கியங்களாக உறுதி செய்கின்றன.

எட்டுத் தொகை நூல்களிலும், பத்துப் பாட்டிலும் சேர நாடு, சேர வேந்தர், சேர நாட்டுப் புலவர், சேர நாட்டு மக்கள் பற்றிய செய்திகள் நிரம்பிக் கிடக்கின்றன. நூல்களிலும் வழக்கிலும் (சேர, சோழ, பாண்டியர்) சேரர் முன் வைக்கப்படுவதைச் செ. சதாசிவம் சுட்டிக் காட்டுகின்றார். தொல்காப்பியத்திலும்,

'போந்தை வேம்பே ஆரென வருஉம்
மாபெரும் தானையர்'

எனச் சேரரது அடையாளப் பூமாலை முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. தொல்காப்பியப் பாயிரத்துள் குறிக்கப் பெறும் அதங்கோட்டாசான் பண்டைய சேரநாட்டின் அதங்கோடு ஊரைச் சார்ந்தவர் எனப்படுகின்றார்.

சேர மன்னர் பதின்மரைப் போற்றும் எட்டுத் தொகை நூல்—பதிற்றுப்பத்து முழுவதும் சேரநாட்டு ஆட்சியையே சிறப்பிக்கின்றது. ஐங்குறுநூற்றைத் தொகுப்பித்தோன் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்னும் சேரமன்னன் என்பது குறிப்பிடத்தக்கது. பாலை பாடிய பெருங்கடுங்கோ சேர வேந்தன் என்பர்.

இவ்வாறு தெள்ளுதமிழ் இலக்கியமான சங்க இலக்கியம் மலையாளக் கவிதை வரலாற்றில் ஆதி இலக்கியமாகத் திகழ்கின்றது.

## காப்பியமும் பிற படைப்புக்களும்

சங்க காலத்தைத் தொடர்ந்து எழுந்த செந்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரம் சேரநாட்டு இலக்கியமாகவே மிளிர்கிறது. இளங்கோ அடிகள் தம் காப்பியத்தை மூவேந்தரது நாடுகளிலும் வழி நடத்தி வஞ்சிக் காண்டத்தில் கண்ணகி சேரன் நாட்டில் சிறப்புறுவதாகச் சித்திரிக்கின்றார்.

கி.பி. 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புறப்பொருள் வெண்பா மாலை என்னும் இலக்கண நூலும் சேரநாட்டைத் தாயகமாகக் கொண்ட ஐயனாரிதனாரால் படைக்கப்பட்டது.

பக்தி இயக்கம் கரை புரண்டோடிய நாயன்மார்கள், ஆழ்வார்கள் காலத்தில் இருபெருஞ் சமயச் சான்றோர்கள் கேரள நாடு தந்த செல்வங்களாகக் கிடைத்தனர். கழறிற்றறிவார் என்ற சிறப்புப் பெயர் பெற்ற சேரமான் பெருமாள் நாயனார் ஒருவர். மற்றவர் வைணவ ஆழ்வார்களில் ஒருவரான குலசேகராழ்வார். முன்னவர் பொன் வண்ணத்தந்தாதி, திருவாரூர் மும்மணிக் கோவை, திருக்கயிலாய ஞான உலா நூல்களைத் தந்தவர். குலசேகரர் 'பெருமாள் திருமொழி' தந்த பெருந்தகை. 'கொல்லி நகர்க்கிறை கூடற்கோமான் குலசேகரன் இன்னிசையில் மேவிச்

சொல்லிய இன்தமிழ் மாலை' எனக் குலசேகரர் பாசுரங்கள் பெருமை பெறுகின்றன.

இந்தத் தமிழ்ப் பாரம்பரியம் எவ்வாறு தொடர்ந்தது என்பதைப் 'பாட்டு' இலக்கிய மரபில் ஓரளவு காண முடிகிறது.

## பாட்டு இலக்கியம்

எதுகை மோனைகள் அமைந்த, வடமொழிப் பாவினம் இல்லாத, தமிழ் எழுத்துக்களே கொண்டதாக அமைவது பாட்டு எனப் பிற்கால லீலாதிலகம் இலக்கணம் கூறும். திருவிதாங் கோட்டு அரசரான ஸ்ரீவீரராம வர்மா (கி, பி. 1195-1208) என்னும் சீராம கவி இயற்றியதாகக் கருதப்படும் ராம சரிதம், 'பாட்டு' இலக்கியத்தின் மாபெரும் படைப்பாகும்.

164 படலங்களும் 1814 பாடல்களும் கொண்ட ராமசரிதம் இராமாயண யுத்த காண்டச் செய்திகளைப் பேசும் நூல்.

'ஊனமற்றெழும் ராமசரிதத்தில் ஒருதெல்
லூழியில் செறியவர்க் குரை செய்வான்'

இதனை எழுதியதாக ஆசிரியர் கூறுகின்றார். சிறியவர் எனப் பாமர மக்களையும் படைவீரர்களையும் கருத்தில் கொண்டு குறிப்பிட்டிருக்கலாம் என்பர். ஆசிரியர் வீரச்சுவையில் ஆர்வம் கொண்டதாலோ என்னவோ யுத்த காண்டத்தைப் பொருளாக எடுத்துக் கொண்டார்.

இதன் மொழி நடையைக் கேரள நாட்டின் அன்றைய வழக்கு நடை அல்ல என்றும் போலி இலக்கிய நடை என்றும் ஆற்றூர் கிருஷ்ணப் பிஷாரடி போன்றோர் விமர்சிக்கின்றனர். மற்றும் சிலர் செந்தமிழும் மலையாளமும் கலந்த கலப்பு நடை எனக் கூறுகின்றனர். நூலாசிரியர்,

'ஆதிதேவனில் அமிழ்ந்த மனகாம்புடைய சீராமன்
அன்பினோ டியம்பின தமிழ்க்கவி வல்லோர்
போதில் மாதி னிடமாவருடல் வீழ்வள்வு(ம்) பின்
போகி போக சயனன் சரணதா ம(டை)டவரே'

எனத் தன் நூலைத் தமிழ்க்கவி என்றே தெளிவு படுத்தியுள்ளார். இதனை ஏற்க மனமின்றி விமர்சகர்கள் கருத்துக் கூறியுள்ளதாகத் தோன்றுகின்றது. இன்றைய மலையாள மொழி நடையுடன் ஒப்பிட்டு மக்களது மொழியினின்றும் மாறுபட்ட செயற்கை நடை என்பதும் பொருந்தாது. காரணம் சமஸ்கிருதச் சேர்க்கையும் மணிப்பிரவாளத் தாக்கமும் பின் நூற்றாண்டுகளில் மிகுதியாகி விட்டன என்பதே ஆகும்.

எவ்வாறாயினும் ராமசரிதம் பின்னைய பல மலையாள நூல்களுக்கு வழிகாட்டும் ஒளி விளக்காகத் திகழ்ந்திருக்கின்றது. கண்ணச ராமாயணம், எழுத்தச்சனின் ராமாயணம் போன்ற நூல்களுக்குக் கற்பனைகளைக் காணிக்கையாகத் தந்துள்ளது. மணிப்பிரவாள அலைகளால் மலையாளம் தாக்கப்படாதிருந்திருக்குமாயின் தமிழில் கம்பராமாயணம் பெற்றுள்ள இடத்தை மலையாளத்தில் இந்த 'ஆதி காவியம்' பெற்றிருக்கும் என்பார் எம். லீலாவதி.

இதன் திராவிட ஓசைநயம் பிற்காலத்தில் கிளிப்பாட்டுக்கள், விருத்தங்களாக வடிவெடுத்த உண்மையையும் அவர் சுட்டிக்காட்டுகின்றார். கலிவிருத்தம், ஆசிரிய விருத்தம், கட்டளைக் கலித்துறை எனத்தக்க ராமசரிதப் பாடல்களே மலையாளத்தில் காகளி, மணிக்காஞ்சி, ஊனகாகளி, த்ருத காகளி, கேக முதலிய கவிதை வடிவங்களுக்கு முன்னோடிகள் எனப் பி. வி. கிருஷ்ணன்நாயர் தெளிவாக்கியுள்ளார்.

ராமசரிதம் போன்ற பாட்டு இலக்கியத்துக்கு மற்றொரு சிறந்த சான்றாக விளங்குவது திருநிழல் மாலை. திருஆரன்முளை அப்பனைப் பாடு பொருளாகக் கொண்ட இந்நூல் 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தாகலாம் என 1981-இல் இதனைப் பதிப்பித்த கோழிக்கோடு பல்கலைக் கழகப் பேராசிரியர் எம். எம். புருஷோத்தமன் நாயர் கருதுகின்றார். இதன் நடைக்கு ஓர் எடுத்துக்காட்டு, அந்தி நேர வர்ணனையாக விளங்கும் பின்வரும் பாடல்!

வானமாம் கழனி தன்னில் வன்தென்னல் கருவி பூட்டி
ஊனமில் மேகமென்னும் உண்மைசேர் கரடு நீக்கி

**தானெழில் அந்தியென்னும் தகும் புகழ் உழவன் வந்து**
**மீனெனும் வித்துக் கோரி விதைக்குன்ன பரிசைப் பாரீர்**

அந்தி என்னும் உழவன் வானத்து வயலில் தென்றல் ஏர் பூட்டி மேகக் கரடுகளை நீக்கி மீன்கள் என்ற விதைகளை விதைக்கிறான் என்பது பாடலின் கருத்து. பாட்டு இலக்கிய வகைக்கு இவ்விரு நூல்களும் மிகச் சிறந்த அடையாளச் சின்னங்களாகத் திகழ்வதையும், இவை தமிழ்ச் செல்வாக்குள்ள படைப்புக்களாய் அமைந்திருப்பதையும் உணர முடிகின்றது.

## நாட்டுப்புறப் பாடல்கள்

எளிய மக்களின் இதயக் குரலாக உலா வரும் நாட்டுப் புறப் பாடல்கள் (நாடோடிப் பாடல்கள்) எந்த மொழி இலக்கியத்துக்கும் மூல உலைக்களமாகும். பிறப்பு முதல் மரணம் வரையிலும் வாழ்வின் அனைத்து மூலைகளையும் வெளிச்சப்படுத்தும் இவ்வகைப் பாடல்கள் மலையாளத்திலும் ஏராளமாக உள்ளன.

காலக் கணிப்புக்களுக்குள் அடங்காத இப்பாடல்கள் முழுமையாகத் தொகுக்கப் பெறவில்லையாயினும் வாழ்வின் சாரங்களாக இவை திகழ்வதை ஓரளவு காணமுடியும். தாலாட்டுக்கள், பூப்பொலிப் பாடல்கள், திருமணப் பாடல்கள், வேளாண்பாட்டுக்கள், திருவிழாப் பாட்டுக்கள், புள்ளுவர் பாட்டுக்கள், களம் பாட்டுக்கள், பத்ரகாளிப் பாட்டுக்கள், களிப் பாட்டுக்கள் என இவை எத்தனை எத்தனையோ வகைகளில் மலர்ந்துள்ளன.

1. **கரயேண்ட மோளே**
**விளிக் கேண்ட மோளே**
**நின்னெக் கெட்டும் கல்யாணத்தினு**
**பந்த்ரண்டான சமஞ்ஞீ வரும் பின்னெ**
**பித்தளத் தாக்கோல் ஓடிவரும்**
**(அழாதே மகளே**
**அழையாதே மகளே**
**உன்னைக் கட்டும் கல்யாணத்துக்குப்**
**பன்னிரண்டானை சமைந்து வரும் பின்**
**பித்தளைச் சாவி ஓடிவரும்)**

**...தாலாட்டு**

2. தும்ப கொண்டம்பது தோணி சமச்சு
தோணித் தலைக்கலோர் ஆலு முளச்சு
ஆலின்ரெ பொத்திலோர் உண்ணி பிறன்னு
உண்ணிக்கு கொட்டானும் பாடானும்
துடியும் துடிக்கோலும்
வெள்ளாட்டம் மக்களும் கூடப் பிறன்னு
பூவே பொலி பூவே பொலி பூவே பொலி பூவே
(தும்பை கொண்டைம்பது தோணி செய்து
தோணியின் மேலோர் ஆலும் முளைத்தது
ஆலின் பொந்திலோர் பாப்பா பிறந்தது
பாப்பா கொட்டவும் பாடவுமாக
பம்பையும் பம்பைக் கோலும்
வேலைக்காரியும் பிள்ளையும் பிறந்தது
பூவே பொலி பூவே பொலி பூவே பொலிபூவே)
—பூப் பொலிப்பாட்டு

சமூக நடப்பியலைக் காட்டும் தன்மையுள்ள பாடல்களுக்கு மருமக்கள் தாய முறையின் துயரங்களைச் சொல்லும் பாடல் எடுத்துக்காட்டு.

அம்மாவன் வன்னில்ல பத்தாயம் துறன்னில்ல
எந்தென்ரெ மாவேலி ஓணம் வன்னு
அம்மாயி வன்னில்ல நெல்லொட்டும் வச்சில்ல
எந்தென்ரெ மாவேலி ஓணம் வன்னு

ஓணத்துக்கு வரும் மாவலிச் சக்கரவர்த்தியிடம் மாமன் வந்து களஞ்சியம் திறக்காமல், அத்தை வந்து நெல்லும் தராமல் ஓணம் வந்துவிட்டதே என்ன செய்யட்டும் என்று கேட்பது பாதிக்கப்பட்டவரின் கேள்வி.

வேளாண் தொழிலில் கங்காணிகளின் தொல்லையால் படும் துன்பத்தைச் சொல்லும் ஒரு பாடல்:

தம்புரான் தன்னுடெ கிண்ணாரம் கேட்டொண்டு
தேவா தேவட தேவா
நேரம் போய நேரத்தும் கொல்லாக் கொல கொல்
லுணியோ

அரத்தொண்டு கள்ளும் தன்னு கொல்லாக் கொல கொல்லுணியோ
அரமுறிக் கரிக்கும் தன்னு கொல்லாக் கொல கொல்லுணியோ

முதலாளி பேச்சைக் கேட்டு, தெய்வமே, நேரம் காலமில்லாமல் கொல்லுகிறானே, சிறிது கள்ளும், சிறு துண்டுத் தேங்காயும் தந்து வேலை வாங்கிக் கொல்லுகிறானே என்ற வேதனையைக் கூறுகிறது பாடல்.

இந்த நாட்டுப்புறப் பாடல்களின் மற்றொரு வெளிப்பாடாக அமைந்தவை வீரக்காதைகளான வடக்கன் பாட்டுக்கள், தெக்கன் பாட்டுக்கள் என்பவை. வீரரசப் பாடல்கள் என்றாலும் காதல் மணமும் கமழ்கின்றவை இவை. மக்கள் தங்கள் இதயங்களில் கோயில் கட்டிப் போற்றும் நாயக நாயகியரை இப்பாடல்களில் காண்கிறோம். வடக்கன் பாட்டுக்களில் ஒதேனன், ஆரோமல் சேவகர், உண்ணியார்ச்ச ஆகியோரின் சாகசங்கள் பேசப்படுகின்றன. புத்தூரன் வீட்டில் உண்ணியார்ச்ச தன் கணவனைக் கொன்ற சந்துவைப் பழிவாங்கும்படித் தன் இளம் புதல்வனை அனுப்பும் காட்சி இப்பாடல்களின் போக்குக்கு எடுத்துக் காட்டு.

நேரிட்டு வெட்டி மரிச்சதெங்கில்
வீட்டேய்க்கு நல்லொரு மானம் தன்னெ
வீராளிப் பட்டு விதானத்தோடே
ஆர்த்து விளிச்சு எடுப்பிக் கேண்டு
எல புல நன்னாய்க் கழிப்பிச் சேக்காம்
ஒளி வாளு கொண்டு மரிச்சதெங்கில்
பச்சோலைல் கட்டி வலிப்பேக்கேண்டு
புல கூடி ஞானும் குளிக்கயில்ல

மரணம் நேருக்கு நேர் போரில் வந்தால் மான மரணமென்றும், அம்மரணம் மரியாதைகளுக்கு உரியதென்றும், வேறு வகையில் இழிவான மரணம் வந்தால் ஓலையில் கட்டி இழுத்தெறிவதற்கு உரியதென்றும் தாய் மகனுக்குச் சொல்லும் கூற்றில் பழி வாங்கும் உணர்வு கொதிநிலை யடைகிறது. மகன், சந்துவின் தலையைக் கொய்து வரும்படிச் செய்த உரை அது.

இப்பாடல்கள் முந்நூறு ஆண்டுக்கு முற்பட்டவை என்று உள்ளூர் கூறுகின்றார். இவ்வாறே இசுலாமிய சமுதாயம் பாடி வந்த மாப்பிள்ளைப் பாட்டுக்களும், கிறித்தவர் பாடி வந்த சடங்குப் பாட்டுக்களும் நூற்றாண்டுகள் பழமை சென்ற நாடோடிப் பாடல் களாகும்.

தெக்கன் பாட்டுக்கள் தென் கேரளத்தில் வில், குடம், கோல் களைப் பயன்படுத்திப் பாடப்பட்ட ஒரு சேர்ந்திசைப் பாடல் தொகுதி. கன்னடியன் போர், உலகுடைப் பெருமாள் பாட்டு, அஞ்சு தம்புரான் பாட்டு, பஞ்சவன் காட்டு நீலிப் பாட்டு, இரவிக் குட்டிப் பிள்ளைப் போர், மாவாரதம் பாட்டு என அவை பல கதைப் பொருளைக் கொண்டவை. வடக்கன் பாட்டுக்கள் இக் கால மலையாளத்துக்கு நெருக்கமானவையாக அமைய தெக்கன் பாட்டுக்கள் பெரிதும் தமிழோடு தொடர்புடையனவாய் உள்ளன.

கன்னடிய அரசன் தன் மகளை மணக்க மறுத்த வள்ளியூர் குல சேகர ராஜாவுடன் போரிட்டு அவனைச் சிறைப் பிடிக்கிறான். குலசேகரன் தன்னைத் தானே மாய்த்துக் கொள்ள அரசன் மகள் பிணத்துக்கு மாலை சூட்டி நெருப்பில் விழுந்து மாய்கிறாள் என்பது கன்னடியன் போர்க் கதை.

தாமிர வருணித் தென்கரையில் தாவாரக் கரையதிலே
சந்தனமும் காரகிலும் தறித்து நல்ல கட்டை கூட்டி
வெந்தெழுந்த தீக்குழியில் மெல்லி நல்லாள் தான்நடந்தாள்
மாலைக் கழுத்தோடே மஞ்சணைப் பூச்சோடே

எனச் செல்லும் நடை தமிழகத்துக் கதைப்பாடல்களைப் போன்றே மோனையெழிலோடு பொலிகின்றது.

உலகுடைப் பெருமாள் பாட்டு மாமன்மார் ஐவரைக் கொன்ற பாண்டிய ராஜாவைப் பழிவாங்கும் மாலையம்மாள் மகன் உலகுடைப் பெருமாளைப் பற்றியது. திருவாங்கூர் மன்னருக் காகப் போரில் மடிந்த இரவிக் குட்டிப் பிள்ளையைப் புகழ்வது இரவிக் குட்டிப் பிள்ளைப் போர். தீய கனவு கண்டு கணவனைப் போருக்குப் போகாது தடுத்தபோது பிள்ளை சொல்லும் பதிலில் வீர உணர்வு கொந்தளிக்கின்றது.

இந்தப் படை போகாதிங்கிருந்தால்
இரவிகுலத்துக் கிழுக்கல்லவோ!
ஏழு கடல் அப்புறத்தில்
இரும்பறைக்குள் இருந்தாலும்
எமராஜா தூதர் வந்தால்
இல்லையென்றால் விடுவாரோ?
கல்லாலே கோட்டைகட்டி
கல்லறைக்குள் இருந்தாலும்
காலனுட ஆளு வந்தால்
கண்டில்லென்றால் விடுவாரோ?

வடமொழித் தாக்கம், மலையாள மொழியிலும், காவிய அமைப்பிலும் தன்னை உறுதிப்படுத்திக் கொண்ட போதும், இந்தப் பாட்டு இலக்கியத்தில் திராவிடச் சாயல் குடியிருக்கலாயிற்று. பல மலையாள இலக்கிய மேதைகளிடம் இருபதாம் நூற்றாண்டில் மீண்டும் புத்துயிர் கொள்வதற்காக எளியோர் பாடல்களில் அது தவமிருந்தது. இதனையே பி. கே. பரமேசுவரன்நாயர், ''மணிப்பிரவாள இலக்கியம் பிற்காலத்தில் சமஸ்கிருதத்தை 'அக்ர பீடத்'தில் வைத்து வழிபட்டபோது மலையாளத்தின் இயற்கையான தூய்மையைக் காத்ததும், நிலைபெறச் செய்ததும் சாதாரண மக்களிடையே பெருவழக்குப் பெற்றிருந்த இப்பாட்டு மரபேயாகும்'' எனத் தெளிவுறுத்தியுள்ளார்.

### விடுகதைகள், பழமொழிகள்

பச்சை மலையாளத்தின் கவிச்சுவையைப் பரிந்து காத்தோம்பியதில் விடுகதைகளுக்கும் பழமொழிகளுக்கும் முக்கியப் பங்கு உண்டு. விடுகதைகள் :

ஆனகேரா மல, ஆடு கேரா மல
ஆயிரம் காந்தாரி பூத்திறங்ஙி [1]

(நட்சத்திர வானம்)

ஆனய்க்கும் பாப்பானும்
நிலைக்காத்த வெள்ளத்தில்

1. ஆனை ஏறா மலை, ஆடு ஏறா மலை
ஆயிரம் பூக்கள் பூத்துதிரும்

காவச்சேரிக் குட்டிகள்க்கு
கழுத்தற்றம் வெள்ளம்[1] (தாமரைக் குளம்)
ஒரு குந்தத்தில் ஆயிரம் குந்தம்[2]
(ஓலைகள் நிறைந்த பனை)

பழமொழிகளும் அவ்வாறே அழகும் கவித்துவமும் நிரம்பி யவை.

'சுண்டங்ங கொடுத்து வழுதினங்ங வாங்கருதே' (சுண்டைக் காய் கொடுத்து கத்தரிக்காய் வாங்காதே-சிறிய வம்பு பெரிதாகும் என்பது கருத்து), 'அரசன் சொல்லு கல்லேப்பிளர்க்கும்', (அரசன் பேச்சு கல்லையும் உடைக்கும்), 'குதிர குருடாயாலும் தின்னுனதில் குறயில்ல' (குதிரை குருடானாலும் தீனியில் குறை வில்லை) என்பன போன்ற அனுபவச் சாரங்களில் ஒரு பழுத்த கவிக்குரல் கேட்க முடிகிறது.

## பழைய மணிப்பிரவாளம்

பிராமணர்களின் தொடர்ந்த வரவால் நம்பூதிரிமார்களின் எழுச்சியும் மேன்மையும் வளர்ந்தன. தீமைகள் பல சமுதாயத் துக்கு விளைந்தன என்றாலும் சமஸ்கிருதத்தின் வளமும் செழிப் பும் மலையாளத்தை ஆட்கொண்டு அதன் தோற்றத்தில் மாற்றங் களுக்கு வித்திட்டது. தொடக்க நாட்களில் ஒரு கலப்பு மொழி பல நிலைகளில் வளரத் தொடங்கியது. அம்மொழி மாணிக்கமும் பவளமும் கலந்தது போன்று சமஸ்கிருதமும் மலையாளமும் கலந்து அமைந்தமையால் மணிப்பிரவாளமெனப் பெயர் பெற்றது.

தமிழில் வைணவ உரைகள் மணிப்பிரவாள நடையில் அமைந் துள்ளன. என்றாலும் தனி இலக்கிய வகையாக அம்மொழி நடை வளரவில்லை. ஆனால் மலையாளத்தில் குறிப்பிடத்தக்க இலக் கியப் பாரம்பரியம் மணிப்பிரவாளத்தால் விளைந்தது.

தபதீ சம்வரணம், சுபத்ரா தனஞ்சயம் முதலிய வடமொழி நாடகங்களை இயற்றிய பாஸ்கர ரவிவர்மன் (கி.பி. 978-1036)

---

1. ஆனைக்கும் பாகனுக்கும் இறங்க முடியா வெள்ளம்
சிற்றூர்க் குழந்தைகட்குக் கழுத்தளவு மட்டும்
2. ஒரு வேலில் ஆயிரம் வேல்

சபையில் தோலன் என்பவன் இருந்ததாகவும் அவன் கூடியாட்டங்களில் விதூஷகன் பேசுவதற்காக மணிப்பிரவாள சுலோகங்கள் இயற்றியதாகவும் கூறுவர். இப்படி உற்பத்தியான மணிப்பிரவாள நடை இலக்கிய உருவாக்கத்துக்குப் பயன்படலாயிற்று.

மணிப்பிரவாள இலக்கியங்களில் மிகவும் பழமையானது வைசிக தந்த்ரம். அலங்கார நயங்களும், ஓசையழகும், வடமொழிச் சுவையும் கலந்த உத்தம மணிப்பிரவாளப் படைப்பு இது. உன்னதக் கவிதையன்றெனினும் சிற்றலைகளில் தவழும் படகு போன்றது எனலாம். கி.பி. 11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்நூல் கேரளச் சமுதாயத்தின் மேல்தட்டு வர்க்கத்தின் பொழுது போக்குகளைப் படம் பிடிக்கிறது. தேவரடியாராக வாழ்வைத் தொடங்கிக் கணிகையாகி விட்ட ஒரு பெண்ணின் அவலம் இங்குக் காட்சிக்கு வைக்கப்படுகிறது. தன் மகளுக்கு ஆடவரைக் கவர்வதற்கான தந்திரங்களைத் தாய்க் கணிகை கூறுவதாக அமைந்தது இந்நூல். தமிழ் விறலி விடு தூது இலக்கியத்தை நினைப் பூட்டுகிறது இதன் பாடு பொருள். மூதுமைக் கடல் முன்னால் இருப்பதை நினைப்பூட்டி விலை மாது, மகளுக்குக் 'காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள'க் கற்றுக் கொடுக்கிறாள்.

சமூகச் சூழலுக்கேற்பச் சிற்றரசர்களும், பிரபுக்களும் வாழ்ந்த வாழ்க்கையின் ஒரு கூறு அவர்களின் சிற்றின்பத் தேட்டம். அவர்களது காதல் நாயகிகளை வர்ணித்து மகிழ்வது மணிப்பிரவாளக் கவிதைகளின் போக்காயிற்று. இந்நெறியில் 'சம்பு' என்ற பிரபந்த வகைகள் பிறந்தன. கவிதையும், கவி நடையிலமைந்த உரை நடையும் கலந்த இலக்கியங்கள் 'சம்பு' எனப்பட்டன. உண்ணியச்சி சரிதம், உண்ணியாடி சரிதம், உண்ணிச் சிறுதேவி சரிதம் என்பன இவ்வகைப் படைப்புக்கள்.

தகடூரிலிருந்து வந்து திருநெல்லியில் வாழ்ந்தவள், அச்சியார் மகள் உண்ணியச்சி என்ற பேரழகி. இவளைக் காணவரும் ஒரு கந்தருவனுக்கு ஒருவன் வழி காட்டுவதையும், அழகியின் வீட்டில் ஆடவர் கூட்டம் வெள்ளமாய்க் காத்திருப்பதையும் வர்ணிப்பது உண்ணியச்சி சரிதம். இந்திரனே தேடி வந்த பேரழகி உண்ணிச் சிறுதேவியைப் பற்றியது உண்ணிச் சிறுதேவி சரிதம். இவை

கி. பி. 13ஆம் நூற்றாண்டின. சந்திரன் விரும்பி வரும் கன்னியின் வரலாறு உண்ணியாடி சரிதம் (14-ஆம்நூ) இவையெல்லாம் மனதை மயங்க வைக்கும் லாகிரிப் பொருள் போன்ற நூல்கள். என்றாலும் மொழியழகும் சிருங்கார ரசமும் கொண்டு கவர்ச்சி செய்யும் படைப்புக்கள்.

இவை போன்றே செறியச்சி, மல்லீ நிலா, கௌணோத்தர, உத்தர சந்திரிகா போன்ற, தலைவியர்களை மையமாகக்கொண்டு எழுந்த காவியங்களும் உண்டு. சாதுரியமான கவிதைகளென இவற்றைக் குறிப்பிடலாமேயன்றி உயர் இலக்கியங்களாகப் போற்றுதற்கில்லை.

இதே காலத்தில் தூது நூல்களும் தோன்றின. அவற்றில் சிறப்புக் குரியது உண்ணு நீலி சந்தேசம். 240 அடிகள் உள்ள இந்நூலின் நடையழகு தனிச்சுவை தருவது; தலைவியோடு உறங்கிக் கொண்டிருந்த தலைவனை ஒரு யக்ஷி தூக்கிச் செல் கிறது. தலைவன் நரசிம்ம மந்திரத்தை உச்சரிக்க அவனைத் திருவனந்தபுரத்தின் வானவெளியில் விட்டுச் செல்ல, கீழே விழுந்த அவனைக் காண்கிறான் கொல்லத்து இளவரசனாகிய நண்பன். அவனிடம் காதலிக்குத் தூது அனுப்புவது பாடற் பொருள். இந்நூல் கி. பி. 14-ஆம் நூற்றாண்டுப் படைப்பாகலாம்.

தூது செல்வோனுக்குக் கூறும் வழிகளைப் பற்றிய வருணனைகளில் அழகு கொஞ்சுகிறது. வழியில் வாழ்வோர் பற்றிய செய்திகளில் இனிமை ததும்புகிறது. இயற்கையும் மனிதர்களும் வண்ணச் சித்திரங்களாகத் தீட்டப்படுகின்றனர். இவ்வகை இலக்கியத்துள் இந்நூல் சிகரமாகத் திகழ்கிறது.

தூது என்ற வடிவம் இல்லாமலே உள்ளத்தை அள்ளும் ஓவியங்கள் கொண்டது அநந்தபுர வர்ணனம். 'உள்ளதை உள்ள படி' வர்ணித்துள்ள இந்நூலில் திருவனந்தபுரத்தின் தெருக்கள், சந்தைகள், கடற்கரை அனைத்தையும் இயல்பாகப் படம் பிடித்துள்ளார் ஆசிரியர். பித்தளைப் பாத்திரங்கள் பளபளக்கும் கடைகளும், செம்படவப் பெண்கள் திமிரோடு உலாவும் காட்சிகளும், பழைய கடனைக் கேட்கும் வணிகரின் பேச்சுக்களும் செறிந்த ஒரு தலைநகரம் நம் கண் முன் காட்சி தருகின்றது.

மணிப்பிரவாள வரிசையில் இன்னொரு குறிப்பிடத்தக்க நூல் சந்திரோற்சவம் ஐந்து சர்க்கங்கள் கொண்ட இந்நூலில் மேதினி வெண்ணிலா என்ற கணிகை நடத்தும் சந்திரோற்சவத்துக்குக் கேரளம் முழுவதிலுமிருந்து தேவதாசிகளும் அழகிகளும் வருகின்றனர். அங்கு நடக்கும் விழாவும் அழகிகள் வருணனையும் காவியப் பொருள்.

இந்த மணிப்பிரவாள இலக்கிய வரிசையில் வாழ்க்கையின் சுகத்தேட்டம் கற்பனை அலங்காரத்தோடு சொல்தேரில் பவனி வருகிறது என்று கூறலாம்.

## பாட்டு இலக்கியம்—இரண்டாம் கட்டம்

கி.பி. 15, 16 ஆம் நூற்றாண்டுக் காலத்தில் முந்தைய பாட்டு இலக்கியம், மேலும் மாறுதலுக்கு உள்ளாகிப் புதுவடிவம் பூண்டது.

மணிப்பிரவாளப் பரம்பரை பொருள், இன்பங்களில் திளைத்த போது பாட்டுப் பரம்பரை, அறம், வீடு பேற்றில் மகிழ்ந்தது என்று எம். லீலாவதி குறிப்பிடுவது கவனத்துக்குரியது.

நிரணம் கவிகள் இவ்விரண்டு பரம்பரைகளிலும் உள்ள கவிப் பாங்கை அழகுறக் கலந்து தந்தனர். நிரணம் கவிகள் என அறியப்பட்டவர்கள் மூவர்—மாதவப்பணிக்கர், சங்கரப் பணிக்கர், ராமப்பணிக்கர். ராமப்பணிக்கரின் (நிரணம் என்ற ஊரினர்) மாமன்மார் மற்ற இருவரும். இம்மூவருக்கும் முன்னோராக விளங்கிய கருணேசன் என்பவர் பெயரே மருவி கண்ணசன் என்றாகியதால் இவர்கள் கண்ணசன்மார் என்றும் அறியப்பட்டனர்.

மாதவப் பணிக்கரின் நூல் பகவத்கீதை மொழிபெயர்ப்புச் சுருக்கமாகும். மாநில மொழிகளில் கீதையைத் தந்த முதல்வர்களில் ஒருவராக இவரைக் கூறலாம். உபநிஷ தத்துவங்களை உட்கொண்டு பக்தியும் ஞானமும் கமழ இந்நூலை ஆக்கியுள்ளார் மாதவப்பணிக்கர். எழுநூறு சுலோகங்களை 320 பாட்டுகளில் பிஞ்சு மலையாளத்தில் கனமேற்றித் தந்திருக்கிறார் பணிக்கர். விலை மதிக்கமுடியாத ரத்தினத்தைத் துகிலில் பொதிந்துவைத்தாலும் அதன் மதிப்புக் குறையாது என்று தம் மொழிப்

பெயர்ப்பைக் குறித்து அவர் கூறுவது போலன்றி அவர் வெற்றியே பெற்றுள்ளார்.

சங்கரப் பணிக்கரின் பாரதமால பாரதச் சுருக்கமாகும். 1,25,000 சுலோகங்கள் கொண்ட மூலத்தை 1363 பாடல்களில் வடித்துத் தந்துள்ள ஆற்றலை வியந்து, எழுத்தச்சனுக்கு ஒரு முன் வரைவு (Design) அமைத்துத் தந்தவர் என்கிறார் என். கிருஷ்ண பிள்ளை. பாஞ்சாலி சுயம்வரக் காட்சியில் அருச்சுனன் இலக்கை வீழ்த்திய செய்தி கூறுவார்:

கருதிய லட்சியவும் எய்து முறிச்சு
 கருத்தொடு வங்கவள் மாலயும் இட்டு...
இட்டார் அமரர்கள் பூ விஜயம் மேல்
 இது தைன்யம்தான் என்றார் அரசர்கள்
கஷ்டா வஸ்தையி தென்றார் மறையவர்
 கடுகெதிர் பொருது துலஞ்ஞார் கௌரவர்
கெட்டார் துர்யோதன கர்ணாதிகள்
 கேதித ராயே போயார் தோற்றே
விட்டார் தேர் பாண்டவர்களுமுடனே
 விரையெப் போய் மாதாவினு சொன்னார்

வேகமும் விறுவிறுப்பும் உள்ள நடையையும் ஓட்டத்தையும் இங்குக் காணலாம்.

ராமப் பணிக்கர் 'ராமாயணம்', 'பாரதம்', 'பாகவதம்' முதலிய பல நூல்களைத் தந்து மூவரிலும் முதன்மை பெறுகிறார். முன் எடுத்துக்காட்டுகள் இவருக்கும் இல்லாத நிலையில் வால்மீகியின் 24000 சுலோகங்களை 3059 பாடல்களில் சுருக்கித் தந்துள்ளார். இவரது கவிதை நயத்துக்கு ஓர் எடுத்துக் காட்டு; கிஷ்கிந்தா காண்டத்தில் கார்காலக் காட்சி வர்ணனைப் பாடல்:

இடையாகின்ன முழா வொலியாலுடன்
 ஏவர்க்கும் பரிதாபம் களவான்
சுடரேறும் மின்னல் புணராகிய
 தூயவிளக்கு கொளுத்தி விசேஷால்
வடிவேலும் வரி வண்டுகள் பாட
 மயூராதிகள் மகிழ்வெய்தும் வண்ணம்

நடனாகிய கார்காலம் வன்னொரு
நாடகமாடும் பொலிவிது பாரா

இடியின் மேளம், மின்னல் விளக்கு, வண்டின் பாட்டு இவற்றின் பின்னணியில் மயில்கள் மகிழும் வண்ணம் கார்காலம் நாடகம் நடத்துகிறதாம். பிற்காலத்தில் எழுத்தச்சன் பெற்ற காவிய வெற்றிக்குத் தடம் அமைத்துக் கொடுத்த சிறப்பு ராமப் பணிக்கருக்கும் மற்ற கண்ணச கவிகளுக்கும் உண்டு. ராமப்பணிக்கரின் பிற நூல்கள் அத்துணைச் சிறப்புடையன அல்ல. எனினும் ராமாயணத்தால் அவர் என்றும் வாழ்வார். பணிக்கர்களின் காலம் 15,16ஆம் நூற்றாண்டுகள் எனக் கருதப்படுகிறது

ஏறத்தாழ இதே காலத்தில் எழுந்த பக்திப் பரவசமான காப்பியம் செறுசேரி நம்பூதிரியின் கிருஷ்ண காதை. மிக எளிமையானதும் உள்ளம் கவர்வதுமான உணர்ச்சிச் சித்திரங்களைக் கிருஷ்ண காதையில் காணலாம். இந்நூலைப் பிற்கால மணிப்பிரவாள நடைக்குஓர் அறைகூவல் என்று தெரிவிக்கின்றார் பி.கே. பரமேசுவரன் நாயர்.

போலித்தனமற்ற செயற்கைப் பூச்சில்லாத பச்சை மலையாள மொழி நடை, அளவான அணி நயங்கள், உணர்வுகளுக்கு முக்கியத்துவம் தரப்படும் மென்மையான பாங்கு, தண்டியின் காவிய இலக்கண வரம்புகளைக் கவனத்துடன் ஏற்கும் வர்ணனைகள் இனிய சொல்லோவியங்கள் இத்தனையும் செறிந்தது செருசேரியின் காவியம்.

கம்ச வதத்தின் பின் மதுரையில் குடியேறப் புறப்படும் கிருஷ்ணன் தந்தையிடம் (நந்த கோபனிடம்) விடை கேட்கிறான்

அச்சனாயுள்ளது நீயொழிச்சில்லெனிக்
கச்சுதன் தன்னுடெ பாதத் தாணே
பெற்று வளர்த்தொரு தாயயாய் நின்னதும்
மற்று மெனிக்கு மற்றாரு மல்ல
ஆற்றிலும் தீயிலும் வீழாதெ கண்டென்னெப்
போற்றி வளர்த்ததும் நிங்ஙளல்லோ
இங்ஙனெ யுள்ளஞான் என்னெ.மறக்கிலும்
நிங்ஙளெ யேதும் மறக்க யில்ல

(அப்பா என்பதும் நீயன்றி இல்லையே
அச்சுத னாம் இறை பாதத்தானை!
பெற்று வளர்த்திடும் தாயாக நின்றதும்
மற்றவர் யாரும் இல்லையன்றோ?
ஆற்றிலும் தீயிலும் வீழாமல் காத்தெனைப்
போற்றி வளர்த்ததும் நீங்களன்றோ?
இவ்வா றுள்ளநான் என்னை மறந்தாலும்
எவ்வா றுங்களை மறந்திருப்பேன்?)

இந்தப் பாசம் பொலியும் காட்சிகளைப் பற்றி உள்ளூர் கூறு கின்றார்: "அப்பாவுக்கேற்ற பிள்ளை; பிள்ளைக்கேற்ற அப்பா. பொருளுக்கேற்ற ஓசை; எல்லாம் தூய அழகு. அணியில்லாத எழில். வியப்புக்கு அப்பாற்பட்ட இனிமை."

கிருஷ்ணனின் குழலோசைக்கு இயற்கையே மயங்கி நிற்கும் கோலம் -புல்லும் வாயிலிருந்து நழுவ நிற்கும் மான்கள், பால் குடிக்க மறந்த கன்றுகள், கன்றுகளை நாவால் வருட மறந்த பசுக்கள். பசுக்களைக் கறக்கப் புல்லாங்குழலை நிறுத்தும்படி யசோதை தவிக்கிறாள்.

கிருஷ்ணன் கோவர்த்தனன் எடுக்கும் காட்சியைக் கண்ணும் மனதும் குளிர வர்ணிக்கின்றார்:

மாரிவரும் நேரம் நற்குடை ஏந்திட
யாரும் முன்வந்து தரவில்லையோ
குன்று சுமப்பதால் வெண்ணெய் சுமந்தவுன்
சின்னக்கை நொந்திட வில்லையோ சொல்
குன்று சுமந்திட வேண்டு மென்றோ
வெண்ணெய் சுமந்து பழகினாய் நீ?
வெண்ணெய் யென்றெண்ணி குன்றையும் கூடவே
மெல்லவுன் வாய்க்குள் போட்டிடாதே

தெய்வ குமாரனை இனிய மனித உறவுகளுக்குள் கட்டிப் போடும் நேர்த்தியான அனுபவத்தைக் கிருஷ்ண காதயில் காண் கிறோம். இவரது பாரத காத இந்த அளவு சிறப்புப் பெறவில்லை.

குறிப்பிடத்தக்க மற்றொரு பாட்டுக் காவியம் என ராமகதைப் பாட்டு நூலை இலக்கிய வரலாற்றாசிரியர் போற்றுகின்றனர்:

ஓவாடுதுறை அய்யப்பிள்ளை ஆசான் இயற்றிய இந்நூல் நாடோடித் தமிழ் நடையில் அமைந்தது.

## இடைக்கால மணிப்பிரவாளம்

இன்புறுத்துவதே நோக்கமாகக் கொண்டு வேடிக்கைப் பாடல் களும், சிருங்காரப் பாடல்களுமாக இருந்த முற்கால மணிப்பிர வாளம் நிலைமாறி புராணக் கதைகளைப் பாடு பொருளாக்கிக் கொண்டதை இடைக்காலத்தில் பார்க்கிறோம்.

எளிய மக்களை மனதில்கொண்டு இக்காலக்கட்டத்தில் சம்பு நூல்கள் இயற்றப்பட்டன. 15ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து 17ஆம் நூற்றாண்டு வரை இதன் ஆட்சிக்காலம் அமைந்தது. நூற்றுக்கணக்கான மணிப்பிரவாள நூல்கள் எழுந்த இக்காலப் பகுதியில் மறுக்க முடியாத பெருமைபெற்ற கவிஞர் இருவர். ஒருவர் புனம் என்ற கோழிக்கோடு சாமூதிரியின் அவைக்களப் புலவர். மற்றொருவர் மழமங்கலம் நம்பூதிரி.

புனம் இயற்றிய நூல்களில் இராமாயணச் சம்பு சிறப்பானது. இருபது பகுதிகளாக அமைந்த இந்நூலின் ஒவ்வொரு பகுதியும் தனிக்காவியமாகும் தகுதியுடையது. எல்லாப் பகுதிகளும் இனிக் கும் கரும்பு போன்றது இந்நூல். சொல்லாட்சி, கற்பனை வளம், உயிர்த்துடிப்பான வருணனை அனைத்தும் மேலோங்கியது. மணிப்பிரவாள இலக்கியத்துக்கு நெறியும் குறியும் கற்பித்த சிறப்பு இவருக்கு உண்டு.

இவரது கவிதை மாட்சிக்கு ஒரு சான்று: கணவனால் புறக் கணிக்கப்பட்ட சீதை புலம்பி அழுகிறாள். பழைய நினைவுகளைச் சொல்லி மறந்தீரோ, மறந்தீரோ என்று அலமருகிறாள். பிறகு கவிஞர் சொல்கிறார்.

இத்தம் ஜானகி கேழுந்நேரம்
பிருத்வி வலயமி தொன்னு குலுங்ஙி
சகல ஜனங்களும் ஒன்னு நடுங்ஙி
வன லக்ஷ்மிக்கும் கேத மிணங்ஙி
நதிகளில் வெள்ளம் ஜடிதி கலங்ஙி
தினகரன் அப்போள் உததியில் முங்ஙி
மாருத தேவனும் உடனே மங்ஙி

தருநிர குசும முதிர்த்து மயங்கி
ஹரிணிகள் முறவிளி ஜடிதி துடங்கி
(வலயம் — வேலி ; கேதம் — துக்கம்
ஜடிதி — விரைவாய் ; குசுமம் — பூ
ஹரிணி — பெண்மான் ; கேழும் — விம்மும்)

வேறுபல சம்புகளும் எழுந்தன. பாரத சம்பு, ராவண விஜயம் போன்றவை பேசத்தக்கவை. எனினும் நைஷத சம்புவின் படைப் பாளியான மழமங்கலம் நம்பூதிரி கொடிய விரகம், ராஜரத்னா வலீயம், பாணயுத்தம் முதலிய நூல்களையும் படைத்துப் பெருஞ் சிறப்புக்கு உரியவராகிறார். மழமங்கலம் புனம் நம்புதிரியை விடவும் போற்றற்குரியவராயினும் அத்துணைப்புகழ் பெறவில்லை. இரவின் வருகையை ஓரிடத்தில் நைஷதம் சொல்லும் அழகைப் பார்த்தால் இவரது புலமை புலனாகும். தமிழாக்கம் வருமாறு :

காட்டின் நடுவில் காட்டு மனிதர்கள்
கூட்டம் கூடிப் பாடும் நேரம்
மல்லிகைக் கொடிகள் மலர்களின் வரிசை
மெல்ல மெல்ல விரியும் நேரம்
பட்சிகள் விருட்சக் கிளையிலொதுங்கி
இணங்கி மயங்கி உறங்கும் நேரம்
காமுகர் கூட்டம் காதலியர் தம்
பூவெனும் மார்பில் அணையும் நேரம்
மயில்கள் தோகை சால விரித்துப்
பயிலுறு நடனம் நிறுத்தும் நேரம்

இடைக்கால மணிப்பிரவாளம் சில புதிய வளங்களை மலை யாள மொழிக்கு வழங்கியது. இப்படித்தான் பாட்டு இலக்கியம் இருக்கவேண்டுமென்ற லீலாதிலக இலக்கணத்தை மீறி நிரணம் கவிகள் பாட்டில் மணிப்பிரவாள நிறங்களைக் கலந்தனர். மணிப் பிரவாளத்துக்கு வகுத்த வேலிகளை மீறிச் சம்பு ஆசிரியர்கள் பாட்டிலக்கிய நயங்களைக் கலந்தனர். இலக்கணங்களை ஒவ் வொரு காலத்திலும் இலக்கியம் கரைமீறிய வெள்ளமாகத் தாவியும் தாண்டியும் தானே வளர்ந்திருக்கிறது!

வெட்டத்து நாட்டில்
நித்ய மங்கலக் குங்குமப்
பொட்டுப் போல் திகழ்
துஞ்சன் திருத்தலமே, வணக்கம்
இன்னிசை பாடியோர்
இளங்கிளிப் பேடு
மென் கால் வைத்து நடனமாடிய
பச்சிலை வனமே, வணக்கம்
புதுமலையாளம்
புனைந்தருள் குருபரன்
இதமுற வாழ்ந்த
புண்ணியக் கோயிலே, வணக்கம்

—வள்ளத்தோள்

# மலையாளக் கவிதையின் அருவித் துள்ளல்

**எழுத்தச்சன்**

மகாகவி பாரதியின் தோற்றத்தை வரலாற்றுப் பார்வையோடு குறிக்க வந்த பாவேந்தர்,

'தமிழகம் தமிழுக்குத் தரும்உயர்வளிக்கும்
தலைவனை எண்ணித் தவம் கிடக்கையில்
இலகு பாரதிப் புலவன் தோன்றினான்'

எனக் கூறுவார். அதுபோன்றே மக்கள் மொழியான மலையாளம் மலர்ச்சிக்காகக் காத்திருக்கையில் காலம் தந்த நன்கொடையாக எழுத்தச்சன் தோன்றினார்.

தத்துவம் வல்லவரிடம் கவித்துவம் இருப்பது அரிது; கவித்துவம் மிக்கவரிடம் தத்துவம் கனிவது அரிது. இவ்விரண்டும் சரிவிகிதமாய்க் கலந்த சங்கமம் எழுத்தச்சன். வெளிச்சத்தை அவாவி நின்ற சமுதாயத்துக்குரிய வெள்ளமாகப் பாய்ந்தவர் எழுத்தச்சன்.

16ஆம் நூற்றாண்டிற்குச் சற்று முன்னதாகவே கேரள சமுதாயம் வீழ்ச்சிகளின் விளைநிலமாகி விட்டது. பேரரசுகளின் மறைவுக்குப் பின் கேரளம் துண்டு துண்டாகப் பல சிற்றரசர்களால் ஆளப்பட்டு வந்தது. இவர்களுக்குள் எப்போதும் சண்டையும் சச்சரவும் மிகுந்திருந்தது. அதனால் ஆன்மீக வீழ்ச்சி, பொருளாதார வீழ்ச்சிகள் ஏற்பட்டுத் திக்குத் தெரியாத காடு போலாயிற்று கேரளம். அன்னியர்கள் நுழைவால் குழப்பமும் அச்சமும் நிலவியது. ஒழுக்கமும் ஒத்திசைவும் குன்றிப் போயின. உடைந்து பிளவுபட்டுக் கிடந்த கேரளத்தை ஒன்றுபடுத்துகிற ஒரு சக்தி தேவைப்பட்டது. இந்தச் சமுதாய தாகத்துக்குப் பக்தி வெள்ளமாய்ப் பாய்ந்தவர் துஞ்சத்து எழுத்தச்சன்.

நம்பிக்கையும் சத்தியமும் நங்கூரமிட்ட ஒரு புத்தம் புதுக் கவிதை' எழுத்தச்சனிடமிருந்து பெருகிக் கேரளத்தை அங்கிங்கு எனாதபடி எங்கும் நிறைந்த ஆத்மானுபூதியில் ஆழ்த்தியது. அகமும் புறமும் தகர்ந்து போயிருந்த சமுதாயத்துக்கு உரமும் திறமும் நல்கியது எழுத்தச்சனின் பேராற்றல். வல்லான் வகுத்ததே வாய்க்கால் என்றிருந்த தத்துவத்துக்கு மாற்று மருந்தாய் உள்ளத்தின் உண்மையொளியைத் தூண்டிவிட்டது எழுத்தச்சனின் கவிதை.

வெட்டத்து நாட்டில் திருக்கண்டியூரில் பிறந்தவர் எழுத்தச்சன். அந்தணர் குலம் சாராத ஒரு சாதியில் தோன்றியவர். தம் இறுதி நாட்களைச் சித்தூரில் ஒரு சிவன் கோயில் கட்டி அங்குச் சீடர்களோடு கழித்தார் என்பர். எழுத்தச்சனின் முக்கிய படைப்புக்களாகக் கருதப்படுபவை அத்யாத்ம ராமாயணம்-கிளிப்பாட்டும் பாரதமும் ஆகும்.

கிளியைப் பொருளாகக் கொண்ட பாடல்கள் தமிழிலும் சமஸ்கிருதத்திலும் உண்டென்றாலும் எழுத்தச்சன் கிளியைப் பேச வைக்கும் பாவனையில் கிளிபாட்டுப் பாடினார். அத்யாத்ம

ராமாயணம் ஒரு மொழிபெயர்ப்புப் படைப்பன்று. பழங்கதையைத் தன் அனுபவ உலையில் உருக்கி வார்த்தப் புதுச்சிற்பம். அனைத்து மக்களின் இதயத்திலும் இல்லத்திலும் இராமாயணம் எளிதாகக் குடியேறி விட்டது.

'தான் செய்யும் கர்மங்களைத் தான்தான் அனுபவித்தே தீர வேண்டும்', 'இன்பங்கள் வெறும் கண நேர மின்னல்கள்; விரைவில் அழியும் நினைவில் வை' என்பன போன்ற அனுபவ மொழிகள் கேரள மக்களிடையே பழமொழிகள் போல் பொன் மொழிகள்போல் பரவிப் போயின.

மகாபாரதம் முன்னைய ராமாயணப் படைப்பினும் உயர்ந்த தாக மதிக்கத்தக்கது. கர்ண பர்வத்தில் வரும் கண்ணனின் அழகைச் சித்திரமாக்கும் நேர்த்தி ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோற்றுப் பதம்.

நிரந்ந பீலிகள் நிரக்கவே குத்தி
நிறுகையில் கூட்டித் திறமொடு கெட்டி
கரிமுகிலொத்த சிகுர பாரவும்
மணிகள் மின்னிடும் மணிக்ரீடவும்
குனுகுனெச் சின்னும் குறுநிர தன்மேல்
நனுநனெப் பொடிஞ்ஞொரு பொடி பற்றித்
திலகவு மொட்டு வியர்ப்பினால் நனஞ்
ஞுலகு ஸ்ருஷ்டிச்சு பரிச்சு ஸம்ஹரிச்
சிளகுந்ந சில்லீ யுகள பங்கியும்

(மாமயி லிறகுகள் வாகாய்ச் செருகி
தூமயிர்க் கொண்டை திறமாய்க் கட்டி
கருமுகில் ஒத்த திருமுடிக் கோலமும்
வரிசையாய் மணிகள் மின்னும் மகுடமும்
பொடி பொடி யான சிறுமுடிமீதில்
குறு குறு வியர்வைத் துளிகளில் தூசி
நனைந்து திலகமும் ஈரம் படர
உலகு படைத்துக் காத்தழிக்கின்றதாய்
இலகு விழிகள்மேல் இமைகளின் அழகும்)

ஏறி, இறங்கி, உருண்டு, புரண்டு, விழுந்து பெருகும் அருவியைப் போல உணர்ச்சிப் பாவங்களுக்குக்கேற்ப எழுத்தச்சனின்

கவிதைப் பயணம் போகின்றது. அபிமன்யுவின் மரணத்தைக் கவிஞர் பின்வருமாறு விவரிக்கின்றார்.

ஞூரனாயுள்ள குமாரனபிமன்யு
போரில் மரிச்சது கேட்டு யுதிஷ்டிரன்
பாரில் மராமரம் வீணபோலே ததா
பார மழல் பூண்டு மோகிச்சு வீணவன்
பின்னே உணர்னு விலாபம் துடங்ஙினான்
உண்ணீ! சதிச்சோ குமாரா! மனோகரா!
என்னுடெ சொல்கேட்டு போயி மரிச்சென்னு
நின்னெ ஞானென்னினிக் காணுன்னு ஙந்தனா

தருமனின் புலம்பலில் வழியும் சோகம் உள்ளத்தை உலுக்கு கிறது.

சுருக்கமாகச் சொன்னால் அறமும் மறமும் மோதிக் கொண்ட காலத்தில் புதிய அறம்பாட வந்த அறிஞனாகத் திகழ்கிறார் எழுத்தச்சன்.

'வைசிக தந்திரத்திலிருந்து அத்யாத்ம ராமாயணத்துக்கும், சந்திரோற்சவத்திலிருந்து மகாபாரதத்துக்கும் செல்லும் பயணம் இரவிலிருந்து பகலுக்குப் போவதுபோல் உள்ளது' என்றும் 'மலை யாளம் ஒரு காவியத்தை நாடி நின்றபோது கிருஷ்ண காதயும் ஒரு கவிஞனுக்காகக் காத்திருந்தபோது எழுத்தச்சனும் தோன்றினர்' என்றும் உள்ளூர் மிக அழகாகக் கூறியுள்ள கருத்து இங்குச் சிந் திக்கத் தக்கது.

**பூந்தானம்**

எழுத்தச்சனின் படைப்புக்களால் ஏற்பட்ட எழுச்சி பல கவிஞர் களையும் தூண்டி விட்டது. ஒரு நூற்றாண்டின் பின்தோன்றிய கேரளவர்ம ராமாயணமும் சரி, பெயர் புலனாகாத ஆசிரியர்களால் எழுதப்பெற்ற கிருஷ்ணலீல, ராமாஸ்வமேதம், சித்ரகுப்த சரிதம், ஏகாதசி மகாத்மியம் என எண்ணற்ற பக்திக் காவியங்கள் தோன்ற லாயின. இந்த அலை அலையான அணி வகுப்புக்களில் மிகவும் உயர்ந்த அலைதான் பூந்தானம்.

பாஷா கர்ணாம்ருதம், குமார ஹரணம் பான, ஞானப்பான, நாராயண கீர்த்தனங்கள், கோவிந்த கீர்த்தனங்கள் எனப் பல

நூல்களின் ஆசிரியர் பூந்தானம். பூந்தானம் (1547-1640) பக்திப் பெருக்கான நூல்கள் படைத்த போதிலும் அதற்கேற்ற அழகான நடையைத் தேர்ந்தெடுப்பதில் கவனம் கொண்டிருந்தார். நாள் தோறும் பாராயணம் செய்து பாடிப்பரவசமடையத்தக்க எளிமை இவர் பாடல்களின் தனிச்சிறப்பு.

> **நரனாயிங்ஙனெ ஜனிச்சு பூமியில்**
> **நரக வாரிதி நடுவில் ஞான்**
> **நரகத் தீயினினென்னெ கரகேற்றீடணம்**
> **திருவைக்கம் வாழும் சிவசம்போ**

என்பது ஒரு கீர்த்தனைத் தொடக்கம்.

> **அம்பாடி தன்னிலோர் உண்ணியுண் டங்ஙனெ**
> **உண்ணிக்கோ ருண்ணிக் குழலுமுண் டங்ஙனெ**

என ஆயர்பாடிக் கண்ணன் கையில் சிறு குழலை அறிமுகம் செய்யும் இன்னொரு பாட்டு.

மக்களுக்குப் பக்தி நெறியைக் காட்டி அவர்களை உயர்த்துவதையே பூந்தானத்தின் பாடல்கள் நோக்கமாகக் கொண்டிருந்தன. அவரது ஞானம் அதிகாரம் பேராசைகளையும், அந்தஸ்து மமதைகளையும், கல்விச் செருக்கையும் இகழ்ந்து நின்றது.

> **வித்தை கொண்டறியத் தக்கது அறியாமல்**
> **வித்துவானென நடிக்கின்றார் சிலர்**
> **குங்குமத்தின் தகுதி அறியாது**
> **கூடச் சுமக்கும் கழுதைகள் போலே**

என்று கூசாமல் விமர்சித்துள்ளார் பூந்தானம். இவரது நூல்களில் ஞானப்பான, குமாராஹரணம்பான இரண்டும் சிறப்பானவை. கேரள நாட்டு மக்களிடையே ஒரு தென்றல் காற்றைப்போல் உலா வரும் இன்ப மயமான கீர்த்தனைச் செல்வம் தந்தவர் பூந்தானம்.

## கதகளியும் ஆட்டக்கதைகளும்

காவியங்களும் பாடல்களுமாக மலையாள மொழி களி நடம் புரிந்து கொண்டிருந்த இந்தக் காலக் கட்டத்தில் கண்ணுக்கு இன்ப மூட்டும் கலைகளும் வளரத் தொடங்கின. நாட்டுப்புற நாடகங்கள் இருந்த போதிலும் அவை வளர்ச்சி மையத்துக்கு வரவில்லை.

இந்நிலையில் பிராமணர்கள் கோவிலில் அறிமுகம் செய்த ஒரு வகை நடனக் கலை 'கூடியாட்டம்' எனப் பெயர் பெற்றது. பத்தாம் நூற்றாண்டு முதல் இவ்வாட்டம் இடம் பெற்றது என்பர். இதனைச் சார்ந்து கேலியும் கிண்டலும் உள்ளடக்கிய கூத்து வகை ஒன்று வளர்ந்த போதிலும் அதனால் இலக்கிய வளம் பெருகிய தாய்க் கூற முடியாது. ஆனால் பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஜெயதேவரின் அஷ்டபதியைக் கலந்து கூடியாட்டத்தை அமைத்த போது, சுயமான நாடக வடிவங்கள் வளர அது தூண்டுதலாயிற்று எனக் கே. எம். தரகன் குறிப்பிடுகின்றார்.

கி.பி. 1633இல் கோழிக்கோடு மானவேதராஜா கதகளியின் முன்னோடியான 'கிருஷ்ணனாட்டம்' என்ற கலையை உரு வாக்கினார். கொட்டாரக்கரை இளவரசர் 1670 வாக்கில் இம் மரபில் 'ராமனாட்டம்' நாட்டியத்தை அமைத்துத் தந்தார். ராம னாட்டம் அபிநயத்திலும், மலையாளப் பாடல்களைச் சேர்ப்பதி லும், முன்னேற்றம் காட்டியது.

இதனை மேலும் செழுமை செய்து சீராக்கிக் கதகளி என்ற வடி வத்துக்குக் கொண்டு வந்தவர் கோட்டயத்துத் தம்புரான். அவரே பாகவதம், கல்யாண சௌகந்திகம், கிர்மீர வதம், காலகேய வதம் என நான்கு ஆட்டக் கதைகள் எழுதினார். காட்சிக்கினிய ஆட்டக் கலையில் இலக்கிய எழிலையும் புகட்டுவதற்கு இவர் காரண மானார்.

பின்னணியில் பாடலும் இசைக் கருவிகளும் ஒலிக்க, கதகளி நடிகர்கள் அபிநயம் மூலம் தங்கள் உணர்ச்சிகளை வெளியிடுவர். மினுக்கு, கத்தி, பச்சை, தாடி, கரி என்ற ஐவகை ஒப்பனைகள் பாத்திரங்கள் பண்பிற்கேற்ப அமையும்.

கதகளி இலக்கியம் கோட்டயம் தம்புரான் காலத்துக்குப் பின் விரிவடைந்ததென்றாலும் இலக்கியத் தரத்தில் மாறுபாடுகள் இருந்தன. உண்ணாயி வாரியரின் நளசரிதம் ஆட்டக்கதை இலக்கியத்தில் ஒரு தனிச்சிகரமாக ஓங்கி நிற்கிறது, திருவனந்த புரத்தை ஆண்ட மார்த்தாண்ட வர்மா, கார்த்திகைத் திருநாள் ஆகியோர் காலத்தில் இவர் வாழ்ந்ததாகத் தெரிகிறது.

கதையமைப்பில் இயல்போட்டத்தையும் பாத்திரப் படைப்பில் தனித்தன்மையையும் வாரியர் கையாண்டார். சொல்லை அதன்

திறம் தெரிந்து சிக்கனமாகப் பயன்படுத்தியவர் என இவர் பாராட்டப் பெறுகின்றார். 'ஆட்டக் கதைகளின் வரிசையில் நள சரிதத்தைப் போல வாழ்க்கையின் அலைமோதல் நெடுகப் பிரதி பலிக்கிற மற்றொரு நூல் இல்லை' என்பார் பி.கே. பரமேசுவரன் நாயர்.

தர்மராஜா மன்னர், இட்டிராரிச்ச மேனோன் போன்றோரும் பல ஆட்டக் கதைகளைப் படைத்தனர், சுவாதித் திருநாள் மன்னர் காலத்தில் (1844-47) மீண்டும் கதகளி செல்வாக்குப் பெற்றது. இரயிம்மன் தம்பி என்பார் 'கீசகவதம்', 'தட்சயாகம்' முதலிய வற்றைப் படைத்தார். கிளிமானூர் வித்வான் கோயித் தம்பிரான் (1825-1857) இயற்றிய ராவண விஜயம் ஒரு புதிய பரிமாணத்தை யும் தந்தது, இராவணன் என்ற மனிதனின்மாட்சியை இவ் விலக்கியம் புலப்படுத்துகின்றது.

## குஞ்சன் நம்பியார்

நம்பியாரின் துள்ளல் இலக்கிய எழுச்சியை 'நிகரில்லாத ஒரு நாட்டியக் காவிய இயக்கம்' என வருணிக்கின்றார் லீலாவதி.

அரண்மனைகளிலும் பிரபுக்களின் சந்நிதானங்களிலும்தான் கதகளி ஆதரவுக்குரியதாக இருந்தது. அதனைப் புரிந்து கொள்ளவும் அறிவுமிக்கப் படிப்பாளிகள் தேவைப்பட்டனர். சாதாரண மக்களுக்கு எட்டாத தொலைவில் இருந்த இக்கலை யிலிருந்து தமக்குத் தேவையானவற்றை எடுத்துக் கொண்டு உயி ரோட்டமான மக்கள் பாடல்களின் பாணியை வகுத்து ஒரு புதிய படைப்பாக்கத்தைத் தந்தார் நம்பியார். அதுதான் துள்ளல் மன்னும் கவிதைக் கோலம்,

தூய மலையாள மொழியைத் தாம் பயன்படுத்துவதாகவும்,

கடுகடுத்திடும் கடினசம்ஸ்கிருத
விகட கவிகள் கூறினால்
கிடுகிடென்று மக்கள் யாவரும்
ஓடுவார் அது தாங்கிடார்

என்றும் அவரே குறிப்பிடுகின்றார்.

புராணக் கதைகள், அவற்றைக் கையாளுவதில் புதுமை, கேலியும் கிண்டலுமான சமூக விமர்சனம், எளிய நடை ஆகிய

வற்றால் மக்கள் இதயத்தில் குடியேறினார் நம்பியார். தன்கால மன்னர்கள், பிரபுக்கள், பிராமணர்களைத் தமது புராணங்களிலும் அடையாளம் காட்டினார் நம்பியார்.

கார்த்தவீரிய விஜயத்தில் வரும் அரசன் கேரள மன்னனாகவே காட்சி தருகிறான்.

**விளைவில் பாதி நமக்குத் தரணும்**
**மிளகு முழுவதும் தந்திட வேண்டும்**
**தெங்கு கமுகு யாவும் பலாவும்**
**எங்கு நமக்கென எழுதிட வேண்டும்**
**(கார்த்த வீரிய விஜயம்)**

பிரபுக்கள் கொள்ளையடிப்பதைச் சொல்கிறார் :

**சுங்கம் கேட்டும் அபராதம் விதித்தும்**
**இரக்க மில்லாமல் வீடுகள் பறித்தும்**
**மண்ணில் வாழும் குடிமக்களிடம்**
**துன்பங்கள் தந்து கொள்ளை யடித்தும்**
**கடை வீதிகளில் வாழ்வோ ரிடத்தில்**
**பிடித்தொரு வம்பில் பணங்கள் பறித்தும்...**
**(நளசரிதம்)**

வாழ்கிறார்களாம். நம்பூதிரிகளைப் பற்றிக் கேட்க வேண்டியதே இல்லை.

**காசிக் கப்பால் எனினும் இன்றொரு**
**காசு கிடைக்கும் என்றால் ஓடுவர்**
**எழுபத்தெட்டு வயது நிரம்பிய**
**கிழவன் பிராமணன் இதோ போகின்றான்**
**கடும்வெயில் பட்டுக் கொதிக்கும் வழுக்கையில்**
**ஒரு பிடி நெல்லும் மலராய் பொரியும்**
**(சத்யா சுயம்வரம்)**

வீரர்களாய் நடிக்கும் நாயர்களும், நம்பியாரின் கேலிக்கணை களுக்கு இரையாகின்றனர்.

**ஆயுதம் இன்றிக் காட்டில் வேட்டைக்குப்**
**போவதும் ஏனோ அய்யா நாயரே?**

வாயும் பிளந்து புலிவரும் நேரம்
ஆயுதம் இருந்தால் ஓடுதல் சிரமம்!

இதுபோன்று சோதி ..ர்களும் மருத்துவர்களும் பிறரும் நம்பியாரின் விமர்சனத்துக்கு உள்ளாகின்றனர்.

சாக்கியார் கூத்து, கதகளி, ஓட்டந்துள்ளல், கோலம் துள்ளல், பறையன் துள்ளல் எனப் பல கலைகளிலிருந்தும் ஒவ்வோர் அகப்பை எடுத்து, கேலியும் சிரிப்பும் தக்கவாறு கலந்து துள்ளல் இலக்கியம் என்ற மகத்தான படைப்பை நம்பியார் தந்துள்ளார்.

நம்பியார் நாற்பதுக்கு மேற்பட்ட துள்ளல் இலக்கியங்களைத் தந்துள்ளார். 21 ஓட்டந்துள்ளல், 11 சீதங்கன் துள்ளல், 9 பறையன் துள்ளல் நூல்களைச் சாகித்ய அகாடமி (கேரளம்) வெளியிட்டுள்ளது. அரை லட்சம் வரிகள் அவற்றில் உள்ளன. இவையன்றி வேறுநூல்களும் இவர் பெயரால் வழங்குகின்றன.

மலையாளத்தில் மக்கள் கவி என்று போற்றப்படுகிற பெருமைக்கு உரியவர் நம்பியார். இவருக்கு அடுத்து மக்கள் நெஞ்சங்களில் என்றும் குடியிருந்து வருபவர் எனச் சங்ஙம் புழையைக் குறிப்பிடுவர். ஒருவர் பொங்கும் சிரிப்பினாலும் மற்றவர் மல்கும் கண்ணீரினாலும் மக்களை உணர்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தினர் என்ற திறனாய்வாளர் கருத்து (லீலாவதி) நினைவில் நிறுத்துதற்குரியது.

## தேக்கமும் தெளிவும்

நம்பியார் காலத்துக்குப் பின் மலையாளக் கவிதை மீண்டும் தேக்கம் ஏற்பட்டது. ஒரு பேரொலி மறையும் போது காரிருள் சூழ்வது போன்ற நிலை உருவாயிற்று.

நாட்டின் அமைதியும் பல்வேறு வகையான அன்னியத் தாக்கங்களால் குலைந்தது. பழசிராஜா வடகேரளத்தில் 18-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் வேலுத்தம்பி தென்கேரளத்தில் 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் நிகழ்த்திய வெள்ளை ஆதிக்க எதிர்ப்புக்கள் முறியடிக்கப்பட்டன. இந்தப் பொழுதில் சமுதாயம் முழுவதும் நிச்சயமற்ற இருப்பு நிலை காணப்பட்டபோது இலக்கியமும் நிலை தடுமாறியது.

பழைய தடங்களை விட்டுப் புதிய பாதைகளைக் காண வேண்டிய கட்டாயமும், இலக்கியத்துக்கு ஏற்பட்டது. சுவாதித் திருநாள் அவையில் இந்த இரயிம்மன் தம்பி பற்றி முன்னர் குறிக்கப் பட்டது. அவர் இயற்றிய ஒரு தாலாட்டுப் பாடலைப் பற்றி இங்குச் சொல்ல வேண்டியது தேவை. காரணம் இன்று வரை தாய்மார்களின் பாசமலராக அப்பாடல் நிலவி வருவதுதான்.

**ஓமனத் திங்கள்க் கிடாவோ - நல்ல**
**கோமளத் தாமரப் பூவோ**
**பூவில் நிறஞ்ஞ மதுவோ - பரி**
**பூர்ணேந்து தன்றெ நிலாவோ**
**புத்தன் பவிழக் கொடியோ - செறு**
**தத்தகள் கொஞ்சும் மொழியோ**
**சாஞ்சாடி ஆடும் மயிலோ - மருது**
**பஞ்சமம் பாடும் குயிலோ**
**ஈச்வரன் தந்த நிதியோ - பர**
**மேச்வரி ஏந்தும் கிளியோ**

இப்பாடல் மொழிகளின் எல்லை தாண்டியும் இனிக்கின்றது. மெல்ல மெல்ல ஆங்கில ஆட்சியின் தாக்கங்கள் மலையாள மொழியின்மீது படியத் தொடங்கின. அது தேக்கத்தை உடைக்கத் தொடங்கியது.

## வெண்மணி இயக்கம்

19ஆம் நூற்றாண்டில் மீண்டும் தூய மலையாள நடையை நோக்கி ஒரு பேரலை எழுந்தது. வெண்மணி அச்சன் நம்பூதிரியும், மகன் நம்பூதிரியும் வடமொழிச் சார்பு குறைந்த ஒரு கவிதைக் குரலை வழங்கலாயினர். இதனால் வெண்மணியாரின் கவிதையில் புதுப் பொலிவு திகழ்ந்தது.

கவிதைக் கலையின் மறைவுகளைத் தொட்டு உணர்ந்தவர்களாக இவர்கள் விளங்கினர். கவிதையில் வருணனைகளோடு மெல்லிய நகைச்சுவையும் இடை கலந்து மணம் பரப்பிற்று. ஆனால் இவர்கள் கவிதையில் கட்டற்ற சிருங்காரமும் பொங்கி வழிவதாகக் குற்றம் சாட்டப் பெற்றது.

இரு கவிஞரிலும் மகன் நம்பூதிரியே மிகுதியாக எழுதினார். 'பூரப்பிரபந்தம்' இவரது புகழ்மிக்க நூல். பூரத் திருவிழா வர்ணனைகள் இப்பிரபந்தத்தின் பொருளாய் அமைந்தன. ஒரு காட்சி:

ராயர்களும் தெலுங்கரும் தமிழரும்
முத்த மொட்டச்சிமாரும்
பாயும் அழகால் காமனைத் தோற்பிக்கும்
நம்பூதிரிமாரும்
நாயர்களும் நல்லழகிகளும் நிறைந்து
மகிழ்ந்து குவிந்தார்

வர்ணனைகள் சித்திரங்களாய்த் திகழ்வதை நூல் எங்கும் காணலாம். அங்கும் இங்குமாய்ப் பெண்களின் அங்க அழகுகள் தலை தூக்குகின்றன.

இவர்கள் மரபில் எழுதியவர் கொடுங்கல்லூர் கொச்சுண்ணித் தம்புரான், கொடுங்கல்லூர் குஞ்ஞிக் குட்டன் தம்புரான், காத்துள் ளில் அச்சுத மேனோன், நடுவத்தச்சன், சீவொள்ளி நம்பூதிரி ஆகியோர்.

**கேரள வர்மா யுகம்**

வடக்கே வெண்மணி இயக்கம் படர்ந்து கொண்டிருந்த நேரத் தில் தெற்கே கவிதை இயக்கத்துக் கேரள வர்மா வலியகோயில் தம்புரான் (1845-1914) தலைமை தாங்கினார்.

மயூர சந்தேசம், தெய்வயோகம் ஆகிய நூல்களுடன் பல மொழி பெயர்ப்புக்களையும் செய்தார் தம்புரான். எனினும் அவ ருக்குப் புகழ் தேடித் தந்தவை சாகுந்தல மொழி பெயர்ப்பும், மயூர சந்தேசமும் ஆகும். சாகுந்தல மொழி பெயர்ப்பில் கரடு முரடுகள் உண்டு. எனினும் இந்நூல் பரவலாக அறியப்பட்டது.

செய்தித் தாள்களில் இலக்கிய விவாதங்கள் இக்காலத்தில் எழுந்ததுண்டு. இவ்வாறு எழுந்த சிக்கல்களில் 'தவிதீயாட்சரப் ராசம்' எனப்படும் எதுகை பற்றிய சண்டையும் ஒன்று. திராவிடப் பாவினம் எனப்படும் வடிவத்தில்தான் முன்னர் எதுகை முக்கியத் துவம் பெற்றது. பின்னர் அது வடமொழிக் கவிதைகளிலும் இடம், பெறலாயிற்று. எதுகை அவசியமெனக் கேரளவர்மா, நடுவத்தச்சன் குஞ்ஞிக்குட்டன் தம்புரான் ஆகியோரும் தேவையில்லையென ஏ. ஆர். ராஜராஜ வர்மா, புன்னசேரி நம்பி ஆகியோரும் கடுமை யாக வாதிட்டனர்.

இலக்கிய உலகம் இதனால் இரண்டு கட்சி ஆயிற்று. எதுகைச் சண்டையால் ஒரு பயனுமில்லை என்று ஒதுக்கிவிட முடியாது.

இதனால் வெறும் எதுகை மோனை மட்டுமே கவிதையாகிவிட முடியாது என்ற உண்மை வெளிப்பட்டது. பல மகாகவிகளும் எதுகை இன்றியே கவிதை பாடியிருப்பது வெளிச்சத்துக்கு வந்தது. ஏ.ஆர். ராஜராஜ வர்மா எதுகையின்றி மேகசந்தேச மொழி பெயர்ப்பை ஆக்கிக் காட்டினார். உருவிலிருந்து உணர்வுக்கு (ரூபத்திலிருந்து பாவத்துக்கு) இலக்கியத்தை அழைத்துச் செல்ல முயன்றார் ராஜராஜவர்மா.

கேரள வர்மா எதுகை அழகோடு மயூர சந்தேசம் இயற்றினார். அவரது கவிதைத் திறனுக்கு அடையாளமாய் அந்நூல் பேசப்படு கிறது. எதுகைச் சண்டையின் தொடர்ச்சியாய்ப் பல காவியங்கள் தோன்றின. அழகத்து பத்மநாபக் குறுப்பு (ராமச்சந்திர விலாசம்), உள்ளூர் (உமா கேரளம்), வள்ளத்தோள் (சித்ரயோகம்), கேசவ பிள்ளை (கேசவீயம்) ஆகியோர் பெருங்காப்பிய மரபைக் காக்க காவியங்கள் படைத்தனர். உமா கேரளத்தின் சில பகுதிகள் தவிர மற்றவற்றுக்கு இன்று சிறப்பு ஏதுமில்லை. ஆயினும் உயிர்த் துடிப்பான இலக்கியம் உருவாக இவை உரமாகப் பயன்பட்டன.

## புனைவியலின் தொடக்கம்

ஏ. ஆர். ராஜராஜ வர்மா தொடங்கிய இலக்கிய விவாதத் தால் பின் வரும் பயன்கள் விளைந்தன.

1. எதுகை கவிதைக்கு இன்றியமையாததல்ல. 2. ஓசை யழகை விடப் பொருள் அழகே உயர்ந்தது. 3. படைப்பின் சிறப் புக்குக் கதையமைப்பு, பாத்திர வார்ப்பு முதலியன இன்றியமையா தவை. 4. உருவ ஒழுங்கும் உணர்வின் கூர்மையும் கவிதைக்கு உரிய பண்புகள் ஆகும்.

இந்த அடிப்படைகள் எல்லாரிடமும் மேம்படவில்லை. கே. சி. கேசவப்பிள்ளை இவ்வியக்க முன்னோடியாக இருந்த போதிலும் அவரிடம் முழுமையாக இப்பண்புகள் காணப்பட வில்லை. ஆயினும் எல்லையற்ற வல்லமைகள் அவரிடம் பொதிந் திருந்தன. இளம் வயதிலேயே மரணமடைந்துவிட்ட அவரது 'ஆசன்ன மரண சிந்தா சதகம்' குறிப்பிடத்தக்க படைப்பு ஆகும். சிறிய வயதிலேயே ஏராளமான நூல்கள் செய்த இவரிடம் புனைவி- யலின் கூறுகள் தோன்றத் தொடங்கியிருந்தன. கேரளத்தின் தாகூராக இவர் உருவாகியிருக்கும் வாய்ப்பு மரணத்தால் கொள்ளை கொள்ளப்பட்டது.

குட்டமத்து, கே. பி. கறுப்பன், மூலூர் பத்மநாபப் பணிக்கர், வி. கிருஷ்ணன் தம்பி, ஜீ. பத்மநாப பிள்ளை, ஓடாட்டில் கேசவ மேனன் போன்றோர் சூரிய ஒளி வருமுன் மினுங்கிய சின்ன விண் மீன்கள் ஆவர். ஆங்கில மொழிபெயர்ப்புகளையும் இவர்களில் சிலர் ஆக்கித் தந்து புதிய தலைமுறைகளுக்கு ஒளிச் சைகை காட்டினார்கள்.

பாரதம் என்ற பேர்
கேட்டதும் ஓர் கர்வம்
பாய்ந்திட வேண்டும் நம்
உள்ளத்திலே ..
கேரளம் என்ற பேர்
கேட்டால் சுடு ரத்தம்
கிளர்ந்தெழ வேண்டும் நம்
நாளங்களில்...

—வள்ளத்தோள்

# மலையாளக் கவிதையின் ஆற்றுப் பெருக்கு

## அழுத கண்ணீர்

தமிழிலே ஒரு நாட்டுப்புறப் பாடல் குழந்தையின் அழுகையைப் பற்றிக் கூறும்...

'தம்பி அழுத கண்ணீர்
ஆறாய்ப் பெருகி
ஆனை குளித்தேறி
குளமாய்த் தேங்கி
குதிரை குளித்தேறி
வாய்க்காலாய் ஓடி
வழிப் போக்கர் வாய் கழுவி
இஞ்சிக்குப் பாய்ந்து
எலுமிச்சை வேரோடி

தாழைக்குப் பாய்கையிலே
தளும்பியதாம் கண்ணீரு."

உயர்வு நவிற்சியான கற்பனை இது. ஆனால் மலையாளப் புனைவியல் கவிதை முளைத்துத் தழைப்பதற்குக் கவிஞர் கொட்டிய கண்ணீரும் ஒரு காரணம் எனலாம்.

தன்னுணர்வுப் பாடல்களில் சிறப்பிடம் பெற்று, கையறு நிலைக் கவிதைகள் 1895க்கும் 1910க்கும் இடையில் குறிப்பிடத் தக்க அளவு தோன்றிப் புனைவியலுக்குத் தோரணம் அமைத்தன.

சி. எஸ். சுப்பிரமணிய போற்றியின் 'ஒரு விலாபம்' (1902), எம். எம். ராஜ ராஜ வர்மாவின் 'பிரிய விலாபம்' (1903), வி. சி. பாலகிருஷ்ணப் பணிக்கரின் 'ஒரு விலாபம்' (1908). ஆசானின் 'வீண பூ' (1907), வள்ளத்தோளின் 'பதிர விலாபம்' (1910) ஆகிய கவிதைகளுக்குள் சோகத்தின் கனம் நிரம்பிக் கிடக்கிறது.

நண்பரான அசுவதித் திருநாளின் மரணம் குறித்தெழுந்தது 'பிரிய விலாபம்', தன் குழந்தையின் மறைவை மையமாகக் கொண்டது போற்றியின் 'ஒரு 'விலாபம்'. இவ்வாறே வாழ்வின் துயர இழைகளால் நெசவு செய்யப்பட்டவை பிற இரங்கற் பாக்கள். எனினும் 1895-இல் ஏ. ஆர். ராஜ ராஜ வர்மாவின் 'மலய விலாசம்' வெளிவந்தபோது மலையாளக் கவிதையின் புதுயுகத் துக்குப் பொட்டு வைக்கப்பட்டுவிட்டது எனலாம். சென்னையிலிருந்து ரயிலில் வந்து கொண்டிருந்த அவர் மனதில் மலைகளும் காடுகளும் ஏற்படுத்திய உணர்வின் அலைகளாக இந்நூல் அமைந்தது.

காலரா நோயினால் மரணமடைந்த மனைவியின் பிரிவைத் துன்ப இழைகளாகப் பின்னி 'ஒரு விலாபம்' படைத்த வி. சி. பாலகிருஷ்ணப் பணிக்கர் (1888-1915) இங்குத் தனித்துக் குறிப் பிடத்தக்க கவிஞர். மலையாளக் கவிதை உலகில் ஒரு மின்னல் கீற்றாய் ஒளிவீசி மறைந்தவர் பணிக்கர்.

'திரண்டு பொங்கும் துயரக்கடலில் முங்கிற்று
ஒரு பானைபோல் அடிவானம்'

என்று அவரது 'ஒரு விலாபம்' தொடங்கும்போதே துக்கம் அணை யுடைத்துக் கொள்கிறது.

26 வயதில் மரணமுற்ற இக்கவிஞர் விசுவரூபம், ஒரு நிச, சாம்ராஜ்ய காத எனப் பல நூல்களைப் படைத்தவர். சின்ன வயதிலேயே ஒரு ஞானியைப்போல் சிந்தித்தவர். மலையாளப் புனைவியல் கவிதையின் விடிவெள்ளி கணநேரம் ஒளி வீசி மறைந்துபோயிற்று.

ஃ ஃ ஃ

செவ்வியலும் புதுச்செவ்வியலும் அரசோச்சிக் கொண்டிருந்த காலம் விடைபெறலாயிற்று.

மற்ற மாநிலங்களைப் போலவே கேரள மண்ணில் மலையாளக் கவிதையின் புத்தெழுச்சி பவனிவரத் தொடங்கியது. இதற்குக் காரணமான கவிஞர்கள் குமாரன் ஆசான், வள்ளத்தோள், உள்ளூர் பரமேசுவர அய்யர் ஆவர்.

இவர்களைக் 'கவித்ரயம்' எனக் கேரளம் வாழ்த்தி வணங்குகின்றது. நாம் அவர்களை 'மும்மணிகள்' என அழைக்கலாம். மூவரிலும் முதன்மையானவர் குமாரன் ஆசான்.

## குமாரன் ஆசான் (1873-1924)

ஒரு சாதி, ஒரு மதம், ஒரு கடவுள் என்ற கோட்பாட்டை முன் வைத்து, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காக நாராயணகுரு (1856-1928) கேரளத்தில் திகழ்ந்தார். அவரது சீடராக விளங்கி இலக்கிய உலகின் ஒரு சிகரமாகவும் ஓங்கியவர் குமாரன் ஆசான்.

ஏழெட்டு வயதிலேயே இளம் குமரன் வடமொழியில் வல்லுநராகி 14 வயதில் பள்ளி ஆசிரியராகி ஆசானாக உயர்ந்தார். நாராயண குருவிடம் வேதாந்தம் பயின்றார். இன்னும் அவர் வடமொழியில் தேர்ச்சி பெறுவதற்காக, குரு அவரைப் பங்களூருக்கு அனுப்பினார். அங்குக் கல்வி முற்றுப் பெறாமல் சென்னையில் படித்தார். பின்னர் கல்கத்தாவில் சிலகாலம் பயின்றார். வங்கத்தில் ஆங்கில மொழிப் புலமையும் அதனால் கீட்ஸ், ஷெல்லி முதலிய கவிஞர்களைப் பற்றிய அறிவும் கிடைத்தது. தாகூர் விவேகானந்தர் போன்ற வங்க மேதைகளின் சிந்தனைகளும் அவரிடம் படிந்தன. தோத்திரப் பாடல்கள் பல புனைந்து வந்தார்.

1904இல் ஸ்ரீ நாராயண தர்மபரிபாலன யோகம் என்ற அமைப்பு தொடங்கப்பட்டபோது அதன் செயலாளராக 1920 வரை பணியாற்றினார். 1922இல் சட்டமன்ற உறுப்பினராகவும் விளங்கினார். 1917இல் குருவின் அனுமதியோடு தம் 44ஆம் வயதில் திருமணம் செய்து கொண்டார். 1924இல் ஒரு படகு விபத்தில் காலமானார்.

1907இல் ஆசானின் 'வீண பூவு' (உதிர்ந்த மலர்) என்ற புகழ் மிக்க கவிதை வெளியாயிற்று. காட்டுத் தீயைப்போல் அக்கவிதை உடனே கேரள மக்களின் உள்ளங்களில் படர்ந்து பற்றிக் கொண்டது.

'ஆ, புஷ்பமே எத்தனை உன்னத நிலையில் இருந்தாய் நீ ஒரு ராணியைப் போலே...' என்று தொடங்கும் இக்கவிதை பட்டுப் பூச்சிகள் கண்டு பரவசப்பட்டிருந்த அதன் எழிலை நினைவு கூர்கிறது. ஒரு வண்டைக் காதலித்த அதன் மகிமையை எண்ணிப் பார்க்கிறது.

இப்போது அது தரையில் கிடக்கிறது. சிலந்திகள் அதற்கு மரணக்கோடி நெசவு செய்யவும், பனி அதற்கு இறுதி மாலை சூட்டவும் இரங்கத்தக்க நிலையில் கிடக்கிறது.

கவிஞர் ஆழ்ந்து சிந்திக்கிறார். இப்படியும் ஒரு மரணமா என்று அவர் மனம் அலைபாய்கிறது. ஆயினும் எத்தனை சிறந்திருந்தாலும் சாவும் அழிவும் தவிர்க்க முடியாதுதானே என்று அமைதி செய்ய முயல்கிறது. ஒருவேளை இப்பூ வானத்துக் கற்பகத் தருவில் மீண்டும் மலர்ந்து தேவ கன்னிகளின் கூந்தலை அலங்கரிக்குமோ என்றும் எண்ணுகிறார். ஆயினும்... என்று கவலையுறும் மனம் வாழ்வு வெறும் கனவோ என்று வினவிப்பார்க்கிறது. இதுதான் 'வீண பூ'வின் கவிதைச் சாரம்.

உணர்ச்சியலைகளை மீட்டும் இக்கவிதை இதுவரை மலையாளக் கவிதை நடந்து வந்த பாதையில் ஒரு வரவேற்கத் தக்க திருப்பமாய் அமைந்தது.

தொடர்ந்து 'நளினி' (1911), 'லீல' என இரண்டு காதல் காவியங்களைப் படைத்தார். பெருங்காப்பியங்களால் அலுத்துப் போன கவிதையில் புது ராகங்களைக் கலந்தன இக்காவியங்கள்.

இவை காவியம் அமைப்பதில் புதிய பாணியை அமைத்துத் தந்தன. பரிசுத்தமான அன்பின் பெருக்கும் ஒரு தத்துவச் சாயலும் இவற்றில் அமைந்தன.

இளம் வயதுக் காதலன் ஊரைவிட்டுப் போய் விடுகிறான். நளினிக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டதால் அவள் காதலனைத் தேடி வீட்டை விட்டுச் செல்கிறாள். ஒரு தவமகளிடம் சிலகாலம் தங்கி இருந்தபின் காதலனை இமயச்சாரலில் சந்திக்கிறாள். அவன் அவளது தவநெறியே நல்லது என்று சொல்ல, அவள்

'என் ஒரே செல்வம் தாங்கள்; உயிரும் நீங்களே!
என் இன்பமும் சொர்க்கமும் நீங்களே
என் இறைவா - உங்கள் திருவடிகளே
என் வீடு - இல்லையெனில் நானும் இல்லை'

என்று மொழிகிறாள். கருணை கொண்ட அவன் அவளுக்கு மந்திரோபதேசம் செய்கிறான். அதனைச் செவியில் கேட்ட ஆனந்த அனுபூதியில் அவள் உயிர் பிரிகிறது. இதுதான் 'நளினி' காவியக் கதை.

'லீல' கதையும் ஏறத்தாழ இதுபோன்றதே. ஆனால் காதலர் இருவரும் மரணமுறுகின்றனர். இங்கு ஆசான் கையாளும் உத்தி —கதையை இடையிலே தொடங்கி முன் நிகழ்ச்சிகளைக் கூறும் முறையாகும். ஆங்கிலப் புனைவியல் கவிஞரான கீட்சின் 'இசபெல்லா', லாங்ஃபெல்லோவின் 'இவாஞ்சலின்' ஆகியவற்றுக்கு இக்காவியங்களை இணை கூறலாமெனத் திறனாய்வாளர் கூறுவர்.

1919 இல் கவிஞர் 'சிந்தாவிஷ்டயாய சீத' என்ற கவிதையைத் தந்தார். இரண்டாம் முறை காட்டுக்கு அனுப்பப்பட்ட சீதையின் நினைவுகளில் நாயகனான இராமன் விமர்சிக்கப்படுகிறான். உலகத்தின் கருத்துக்காகத் தன்னை அவன் பலி கொடுத்து விட்டதாக அவள் பேசுகிறாள் இறுதியில்,

'மிகவும் துன்பமே நீதியைக் காப்பது
மன்னர் பாடு சிரமம்தான்
அவர்களுக்குச் சுதந்தரம் ஏது?'

என்று இராமன் அரச நீதி காத்ததைக் கசப்போடு சொல்லுகிறாள். எனினும் தன் கடுமொழிகளைப் பொறுத்துக் கொள்ளுமாறு வேண்டு

கிறாள். இந்தக் கவிதையில் சோதனைக்குள்ளாக்கப்படும் பெண்ணினத்தின் தார்மீகக் கோபம் சீதையின் பேச்சாக வெளிப்படுகின்றது.

1922இல் 'துரவஸ்த', 'சண்டால பிட்சுகி' இரண்டும் வெளிவந்தன. சாதியொழிப்புப் போரின் நாயகனான கவிஞர் ஒரு தாழ்த்தப்பட்ட குல இளைஞனை மணக்க முன்வரும் நம்பூதிரிப் பெண்ணை முதல் நூலிலும், தாழ்த்தப்பட்ட குலப்பெண்ணைப் பௌத்த சமயத்தில் ஏற்றுக்கொள்ள வைத்து சாதியெதிர்ப்பைப் புத்தர் வாக்கில் பேசவைக்கும் போக்கை இரண்டாவது நூலிலும் காணலாம். சாதி என்ற வேலி செயற்கையானது எனத் தெளிவுறுத்துகின்றன இந்நூல்கள்.

'எத்தனை சேரர்கள் எத்தனை சங்கரர்
எத்தனை துஞ்சன் குஞ்சன்மார்கள்
கல்நெஞ்ச சாதியால் கருவில் சிதைந்தார்'*

என்று வெடிக்கிறது ஆசான்கவிதை (துரவஸ்த).

கடைசியாக வெளிவந்த 'கருணை' என்ற காவியம் கணிகை வாசவதத்தைக்கு மரணப்பொழுதில் உபகுப்தர் ஆறுதல் கூறும் சரித்திரத்தைக் கூறுவது.

'உலக நேசம் இல்லாதவர்களே!
மனிதராகப் பிறந்து விட்டீர்களே'

என்று கடிந்து கூறி, அனைத்துயிர்க்கும் அன்பு மந்திரம் கூறுவது 'கருணை'.

ஆசானின் திருமணம் விமர்சனத்துக்கு உள்ளானபோது அவர் பாடிய கவிதை 'ஒரு கிராம விருட்சத்துக்குயில்'. உண்மைத் தொண்டு தூற்றுதல்களைப் பொருட்படுத்தாது என்று பேசுகின்றார். இவையன்றி ஆர்னால்டின் 'ஆசியஜோதி' தழுவிய ஸ்ரீ புத்தசரிதம், பல தன்னுணர்ச்சிப்பாக்கள் ஆகியவற்றையும் ஆசான் தந்துள்ளார்.

---

* மொ. பெ. கோபிநாதன்

'மாற்றுங்கள் சட்டங்களை
இலையெனில்
உங்களை மாற்றும் சட்டங்கள்'

என்று புரட்சிச் சிந்தனைகளைப் பொறித்தவர் ஆசான்.

அன்புக்காக ஆயிரம் முறை சாகலாம் என்று மனித சமுதாயத்தை நேசித்த கானகந்தருவன் ஆசான். சுருங்கச் சொன்னால், சமூக உணர்வும், தத்துவப்பாங்கும் உரிமைச் சிந்தனையும் கலந்து பொழிந்த காலமுகில் என ஆசானைக் கூறலாம்.

**வள்ளத்தோள் (1878 - 1957)**

ஆங்கிலக் கல்வியறிவு இல்லாமல் வடமொழி, ஆயுர்வேதம் ஆகியவைகளை வீட்டுக் கல்வியாகப் படித்த வள்ளத்தோள் நெடுங்காலம் பழமரபுக் கவிதைகளின் படைப்பாளியாகவே விளங்கினார்.

அவருடைய 31ஆம் வயதில் இரு செவிப் புலன்களையும் இழந்தபோது (1910) இவர் பாடிய 'பதிர விலாபம்' (செவிடனின் புலம்பல்) தான் இவரது முதல் தன்னுணர்ச்சிப் பாடல்

இவரது கவிதை மடைமாற்றம் பெற்றது. 'பந்தனஸ்தனாய அநிருத்தன்' காவியத்தில் (1914). வாணாசுரனின் மகளான உஷை அநிருத்தனைத் தன் அறைக்கே அழைத்துவந்து விடுகிறாள். அவனை வாணாசுரன் சிறையில் இடுகிறான். புதுமைப் பெண்ணாகவும் புரட்சிப் பெண்ணாகவும் வருகிற உஷை காதலனைச் சிறையில் சந்திக்க அனுமதி கேட்கிறாள். அரசனை மீறி அனுமதி தர யோசிக்கும் அமைச்சரை மனம் மாற்றிக் காதலனைச் சிறையில் சந்திக்கிறாள் வல்லமை மிக்க உஷை. காதலனிடம் உஷை சொல்கிறாள் :

'கடுஞ்சிறை வாசம் தங்கட்கு விதித்த தெண்ணில்
படுகொலை செயலாம் இங்கு காரணமான என்னை
வடுவிலா மனத்தோடுங்கள் திருவடிக் கீழிருந்து
கொடுஞ்சாவும் ஏற்பேன் நெஞ்சில் கொஞ்சமும்
துன்பமில்லை'

இந்தக் கவிதை படைப்பதற்கு முன் சித்ரயோகம் (1913) காவிய எழுதிக் குமாரன் ஆசானின் கடுமையான விமர்சனத்துக்கு

உள்ளானார் வள்ளத்தோள். 1914இல் அநிருத்தன் வெளிவந்த பின் அணி அணியாய்க் கவிதைகள் வெளிவந்தன. அவை 'சாகித்ய மஞ்சரி' என்னும் பத்துப் பாகங்களாகத் தொகுக்கப் பட்டுள்ளன.

புராணப் பின்னணியிலானாலும், நடப்பியல் வாழ்விலானாலும் வள்ளத்தோளின் செறிவான நடையிலும், புதுமையான பார்வையிலும் செழுமை பெற்ற கவிதைகள் என அவற்றைக் குறிப்பிடலாம். சாகித்ய மஞ்சரி முதல் பாகத்தில் 'ஒரு சித்ரம்' என்றொரு கவிதை. யசோதை பால் கறந்து கொண்டிருக்கப் பால் பாத்திரமும் கையுமாய் நிற்கிற மோகனக் கண்ணன்.

''அன்னைக்கு மட்டுமோ? யாராயினும் முத்தம்
கன்னத்தில் வைத்திடத் தோன்று மன்றோ?
ஆறேழு நாட்களோர் குன்றினைத் தூக்கியே
ஓர் விரல் கொண்டு குடை பிடிப்பான்
பாருங்கள் ஓர்படிப் பால் கொள்ளும் பாத்திரம்
பாரமென் றிருகையால் பிடித்து நின்றான்''

இப்படி மழலைக் கண்ணனைப் படம்பிடிக்கும் வள்ளத்தோள் மற்றொரு கவிதையில் காளிங்க நர்த்தனம் செய்யும் கண்ணனைக் காட்டுகின்றார். (கர்ம பூமியுடெ பிஞ்சு கால்) கவிதை இப்படி முடிகிறது:

''அழிவின் வடிவாம் கொடுமையே!
நீ உன் தலைகளை எத்தனை விரித்தாலும்
இப்புண்ணிய பூமியின் பிஞ்சுக்கால் ஒன்றுபோதும்
அவைகளை மிதித்துக் கீழே தள்ள''

இந்த முடிவு கண்ணனை நினைவூட்டாது தேசத்தை மூடிய அன்னிய ஆட்சியென்னும் காளிங்க நாகத்தை மிதித்தழிக்கும் சுதந்திரப் போரை உருவகமாக்குகின்றது.

புராணங்களை,

''பட்டு மெத்தையினும் கலைமகள் விரும்புமாறு
இட்ட மெல்லிய தர்ப்பைப் பாய் விரிப்புக்கள்''

என்று பெருமையோடு மேம்படுத்தும் கவிஞர் மகாத்மாகாந்தியை அந்தப் பாரம்பரியத்தின் வாரிசாகவே காண்கிறார். 'என்ற குருநாதன்' என்ற கவிதை பேசுகிறது:

"உலகமே உன் குடும்பம்; உனக்கு இச்செடிகளும்
புல்லும் புழுவும் கூட உறவினர்கள் தான்
தியாகமே செல்வம்; தாழ்வே உன் உயர்வு
யோக விதை நீ! வெல்கின்றாய் குருநாதனே!

விண்மீன் தொடுத்த மாலையா? அதுவும் நன்று
வீசும் சேற்றில் புரள்வதா? அதுவும் நன்று
தொட முடியாத வானம்
வீண் அலங்கார மில்லாத வானம்
அது போன்றான் என் குருநாதன்

சீதைக்கு மாதாவான பூமிதான் உண்மை. இந்த
மாதிரி கர்மயோகி ஒருவனைத் தருதல் கூடும்......
கங்கை யாறோடும் நாட்டில் மட்டுமே இம்
மங்கலம் பூக்கும் கற்பக மாமரம் முளைக்கக் கூடும்"

இப்படித் தேசபக்தியையும் தெய்வச் சிந்தனைகளையும் இணைக்கும் அழகை வள்ளத்தோளிடம் காணலாம். மனதை ஈர்த்துத் தன்மயப்படுத்துதலில் வள்ளத்தோள் ஈடிணையற்றவர். கிளிக்கொஞ்சல் என்றொரு கவிதை. மிதிலையில் மழலைப் பருவச் சீதை வளர்கிறாள். ஒருநாள் வால்மீகி ஆசிரமத்துக் கிளிகள் இரண்டு அங்கு வருகின்றன. அவை சீதையை இராமன் திருமணம் செய்துகொள்வான் என்று பேசுகின்றன. வெட்கத்தோடு ஓடிய சிறுமி சீதை அம்மாவிடம், 'அம்மா, அம்மா நான் இராமனைக் கட்டிக்கொள்ளமாட்டேன். உன்னைத்தான் கட்டிக் கொள்வேன்' என்கிறாள். களங்கமற்ற குழந்தை உள்ளப் படப் பிடிப்பு இது.

இவ்வாறே 'அச்சனும் மகளும்' என்ற கவிதை ஆசிரமத்தில் துஷ்யந்தனைப் பிரிந்த சகுந்தலையும் தந்தை விசுவாமித்திரனும் சந்தித்துக்கொள்வதை வர்ணிக்கிறது. தன் பேரனை யாரென்று அறியாமல் எடுத்து அணைத்துக்கொள்ளும் முனிவரைக் கவிஞர் கேட்கிறார்: 'தவத்தின் ஏகாந்தத்தில் பெற்ற சச்சிதானந்த இன்பம் பெரியதா? அல்லது இந்தக் குழந்தையை எடுக்கிறபோது ஏற்பட்ட இன்பம் பெரியதா?' என்று. மகள் சகுந்தலை பின்னர் கேட்கப் போகிற கேள்வி இதைவிடப் பொருள் செறிந்ததாய் வளர்கிறது இக்கவிதை.

இந்தப் புராணப் பின்னணியிலேயே சமுதாயச் சிக்கல்களைச் சுட்டிக்காட்டும் திறனும் வள்ளத்தோளுக்கு உண்டு. சீதை என்று பெயர் சூடிய ஓர் இளம் கணிகையர் குலத்துப் பெண், சீதையைப் பற்றிப் படித்துக் கற்புடையவளாக விளங்க ஆசைப்படுகிறாள். இந்தக் 'கொச்சு சீத' (இளம் சீதை) குடும்பத் தொழிலுக்கு ஆட்பட மறுத்த செய்தியை ஒரு கடிதக் கவிதையில் வள்ளத்தோள் கூறி இவ்வாறு முடிக்கிறார்.

'அடடா பாரத பூமியின் பழமையும் மகிமையும்தான் என்ன
கொடும் போர்க்களத்திலும் பற்றின்மையின் முழக்கம்
வேடன் குடிசையிலும் வேதியர் செல்வம்
வேசித் தெருவிலும் கற்பின் நறுமணம்!

அசல் புராணச் சித்திரங்களோடு கற்பனையும் கலந்து கணபதி, சிஷ்யனும் மகனும் போன்ற கவிதைகளைப் படைத்த வள்ளத்தோள் கிழிந்த தலையணையும், கிருஷ்ணப்பருந்தும், போன்ற எளிய பொருள்கள் தரும் சிந்தனைகளையும் கவிதை யாக்கினார்.

'மக்தலனா மறியம்' என்னும் சிறு காவியத்தில் ஏசுநாதரால் ஆட்கொள்ளப்பட்ட விலைமகளின் கதையை ஒரு சிறந்த படைப்பாக வழங்கி இருக்கின்றார். மக்தலனா தெருவில் வரும் காட்சியை வள்ளத்தோள் இப்படிக் கூறுகிறார்.

''நட்சத்திரங்களே பூமியை உற்றுற்று
நாடி அசையாது பார்ப்பது ஏன்?
வெட்டும் விண்மீன் ஒன்று விண்ணிலிருந்தே
வீழ்ந்த துண்டோ இந்த பூமியிலே?
உண்மைதான் விண்மீனே உருவம் எடுத்தாற்போல்
ஒருத்தி வருகிறாள் வீதியிலே!''

தேசியக் கொடி வானில் பறக்கும் கோல அழகைக் கூறும் இன்னொரு கவிதை இப்படி விரிகிறது.

''இதுபோதாது இதுபோதாது
இன்னும் இன்னும் உயரட்டும்
எமது பாரத தேவி அன்னையின்
மங்கலமான மணிக்கொடிகள்!

நாமே நூற்ற நூலினாலே
நாமே நெய்த துணியினால்
ஆமிது கொடிய அநியாயத்தின்
சடலத்திற்குப் போர்வையாம்''

சாதிக்கொடுமைகளுக்குச் சாட்டைச் சொடுக்காக அமைந்த கவிதைகளும் பல. 'சுத்தரில் சுத்தன்' என்ற கவிதையில் உயர் சாதிக்காரன் வீடு தீப்பற்றிக் கொள்வதையும், அதனை அணைக்க முற்பட்ட தாழ்த்தப்பட்டோரை வீட்டுக்காரன் கடிந்து பேசுவதையும் இழித்துப் பேசுகின்றார். உயர் சாதியான் சொல்லுகின்றான்:

''சாம்பலாய்ப் போனால் போகட்டும் என்வீடு
என்கிணறு தொட்டு யாரும்
அசுத்தமாக்காதீர்!''

வறுமைக்கும் கொடுமைக்கும் உருகிப் போகிற கவிதைகளும் அவரிடம் உண்டு. 'மாப்பு' (மன்னிப்பு) என்ற கவிதையில் சொரனூர் ரயில் நிலையத்தில் இறந்துகொண்டிருக்கும் ஒரு மனிதனைப் பற்றிய சித்திரம் அது.

' சாவு சாதாரணமாய் நிகழ்வதாயினும்
பசியால் உயிரைக்
காவு கொள்வது இந்நாட்டில் மட்டுமே''

ஆயிரம் தந்திகளை உடைய வீணைபோல் வள்ளத்தோளின் கவிதைகள் நாதம் பொழிகின்றன. இந்த மாமேதை 27 வயதில் வால்மீகி ராமாயணத்தை மொழிபெயர்த்தார். 75ஆம் வயதில் ரிக்வேதம் மொழிபெயர்க்கத் தொடங்கினார். இந்த இரண்டு எல்லைகட்கிடையே எழுத்துக்களோடு வளர்ந்தார், வாழ்ந்தார், வென்றார்.

## உள்ளூர் (1877-1949)

பல உயர்ந்த அரசுப் பொறுப்புக்களில் இருந்த அனுபவம், பட்டப் படிப்பு, வடமொழி-தமிழ் அறிவு அனைத்தும் பெற்றவர் உள்ளூர் பரமேசுவர அய்யர்.

'உமா கேரளம்'-மலையாள இலக்கிய வரலாற்றை உள்ளடக்கிய மகாகாவியமாக இவரால் படைக்கப்பட்டது தொடக்கக் காலத்தில்,

அருணோதயம், தாராஹாரம், கிரணாவலி, ரத்னமால முதலிய பத்துக்கும் மேற்பட்ட தொகுப்புக்கள் இவருடையவை. கர்ண பூஷணம், பிங்கள முதலிய சிறுகாவியங்களிலும் இவரது கைத்திறன் புலனாகின்றது.

கவிதைகளைக் குறிக்கோளோடும், சரியான கற்பனைகளோடும் திருத்தமாக எழுதவேண்டும் என்ற கட்டுக்கோப்புடன் எழுதியவர். எதையும் பரந்து விரிந்த பாங்கில் எழுதுவது இவர் பாணியானதால் கலைக்கூறு பல சமயங்களில் குறைந்து போயிற்று. ஆயினும் எந்தப் பொருளையும் முழுமையாகச் செய்வதற்கு முற்பட்டவர் இவர்.

''அடியேனுக் கின்னும் பிறவி யுண்டாகில் என்
அடிமுதல் முடிவரை யாவுமாய்
உன்னிடம் தாயே பிறக்க அருள்கொடு''

என்று வேண்டும் தேசபக்தி இவரிடம் உண்டு.

உள்ளூரின் கவிதைகள் அனைத்தும் மறைந்தாலும் கர்ணனின் காவியத்தால் அவர் வாழ்வார் என்று கவிதைச் சுவைஞர் கூறுவர். கர்ணனைப் பேழையில் வைத்து அனுப்பும் காட்சியில், நதிநீர்

''வெண் நுரை வைரக்கல் வளையல் அணிந்த
தன் அலைக் கைகளால் தாங்கித் தாங்கி
என் இளம் பிஞ்சின் மெய்யொளி யாலே
பொன் நிறம் ஏறுமப் பேழையினை''த்

தள்ளிச் செல்வதாகப் பேசுவார் கர்ணனின் கொடை என்ற குணம் பலமா, பலவீனமா என்று கேட்பார் போல

'வெண் மதிக் குள்ள கருமையோ? அன்றெனில்
கண்மணிக் குள்ளதோர் வெண்மையோ?'

என மொழிவார்.

பொன்மொழிக் கவிதைகளைக் கொண்டதாக விளங்கும் அவரது நூல் தீபாவலி. எடுத்துக்காட்டு :

''கையில் ஒற்றைப் புத்தகம் வைத்திருப்பவன்
மெய்யில் சக்கரவர்த்தியின் மேலானவன்''

''சினம் வேண்டாம் எவரிடத்தும் சினப்பதென முடிவெடுத்தால்
சினத்தோடு சினப்பதுதான் சிறப்பான சினமாகும்''

பல பல வரலாறுகளையும் கவிதையாக்கியுள்ள உள்ளூர், புறநானூற்றில் தண்ணீர் அருந்தாது உயிர் துறந்த கணைக்கால் இரும்பொறைப் பற்றியும் கவிதை படைத்துள்ளார். அக் கவிதையில்,

'அரை நொடிப்பொழுது அடிமையானவன்
பிறகு சுதந்தரம் பெறுவதும் அரிது'
என எடுத்துக் கூறுவார்.

பாரதப் பண்பாடே உலகின் துன்பம் தீர்க்கும் மருந்து என்ற நம்பிக்கை உள்ளூருக்கு அமைந்திருந்தது.

''பாரின் துயரநோய் தீர்ப்பதற்கு-இப்
பாட்டியின் மூலிகை ஒன்றுபோதும்''

என்று இதனை உணர்த்துகின்றார். 'பிரேம சங்கீதம்' என்னும் புகழ்பெற்ற கவிதை வரிகள் நினைவில் நிறுத்தத் தக்கவை. அன்பின் அருட்பாட்டு அது.

''விளக்குக் கைவசம் உள்ளவனுக்கு உலகம் வெளிச்ச மயம்
வெள்ளை மனது கொண்டவனுக்கு எல்லாம் அமுதமயம்
காண்பவன் இல்லைஎன்றால் உலகில் காணப் பொருளே இல்லை
ஆண்டவன் படைப்பில் ஒன்றுக்கொன்று அணையா உயிரில்லை
இயற்கைப் பொருள்கள் எல்லாவற்றிலும் ஈர்ப்பே குணமாகும்
எல்லா உயிர்க்கும் அடிப்படையானது அன்பின் மணமாகும்
குனிபவன் உயர்வான், நட்டவன்தின்பான், கொடுப்பவன் பெற்றிடுவான்
இனிய சொர்க்கம் புனைவதும் நாமே நரகமும் அவ்வாறே!''

மற்றொரு தொகுப்பில் குடிகாரனின் நிலையைக் கவிஞர் அவன் பேச்சுப் பாணியிலேயே கூறும் வரிகள் நகையுணர்வைத் தருவன.

''எங்கேடி... எங்கெங்கேடி...
எங்கெங்கெங்கெங்கேடி பாட்டில்
இப்பவே வேணும் பாட்டில் பாப்பாட்டில் பாட்டில் டில்''

வேடிக்கையாகப் பாட்டில் கேட்பவனிடம் அவன் குழந்தையை அம்மா கொடுக்கக் குடிகாரன் அதன் கழுத்தை நெரித்து விடுகிற கொடுமையை ஒரு கவிதை கூறும்.

உள்ளூரின் கவிதைகளில் ஆழங்களைத் தேடுவதை விட அகலத்தைத் காண்பது எளிது. விரிந்து பரந்த பொருட் பரப்பைச் சுவை சொட்டும் நடையில் சொல்லிய உள்ளூர் புனைவியல் யுகத்தில் அதன் ஒளியைப் பூசியவாறு செவ்வியல் உட்கருக்களை மிகுதியாகக் கையாண்ட கவிஞர் என்று கூறலாம். அவருக்குக் கருத்துப் பஞ்சம் ஏதும் இருக்கவில்லை. ஆனால் அவர் கவிதை களுக்குப் பூட்டிய அணிகள் உண்மையான அழகைக் காண முடியாது தடுக்கும் சுமைகளாகிப் போயின எனலாம்.

மும்மணிகளான இவர்களைப் பின்பற்றி எழுதிய கவிஞர் பலர். வடக்கும்கூர் ராஜராஜவர்ம, ஆற்றூர் கிருஷ்ணப் பிஷாரடி, பி. வி. கிருஷ்ண வாரியர், பள்ளத்துராமன், கே. எம். பணிக்கர் போன்ற பலரைக் குறிப்பிடலாம்.

ஆயினும் வள்ளத்தோளின் முறையான வாரிசுகள் எனக் குற்றிப்புறத்து கேசவன் நாயர், குற்றிப்புறத்து கிட்டுண்ணி நாயர், வள்ளத்தோள் கோபால மேனன், நாலப்பாடு நாராயண மேனன் ஆகியோரைக் கூறுவது பொருத்தமானதாக இருக்கும்.

**நாலப்பாடு**

நாலப்பாடு நாராயண மேனனின் (1887-1955) 'கண்ணுநீர்த் துள்ளி' (கண்ணீர்த்துளி) அவரது மனைவியின் மரணத்தால் ஏற் பட்ட சோகத்தை அடக்கி அடக்கி வெளியிடும் உருக்கமான படைப்பு.

''நானிங்கு என் சிந்தனையெல்லாம்
கண்ணீரில் நனைத்து ஒரு கோட்டை கட்டினேன்
கொடியில் அதை யாரோ இடித்தழித்தார்கள்
பிரபஞ்சமே நீ எப்போதும் இப்படித்தான்''

அழுகையைத் தடுக்கத் தடுக்க அது பொங்கியெழுகிற அவலம் இக்கவிதையாகிறது.

"உருக்குகிறான் விழிநீரில் இட்டு
முழுகவைக்கிறான் இந்தப் புவன சிற்பி
மனித இதயமாம் பொன்னை ஏதோ
ஆபரண மாக்கும் நோக்கத்தோடு"

என்ற கூற்றில் துக்கங்களிலிருந்து ஒரு தொடக்கம் இருப்பதாக ஆறுதலும் கொள்கிறார் கவிஞர்.

கே.கே ராஜா

நாலப்பாட்டின் கவிதைகளில் மூழ்கி எழுந்தவர் கே.கே.ராஜா. பிறந்த நிமிடத்தின் அழுகை பற்றிக் கவிஞர் கூறுகின்றார்.

"ஆளை அடையாளம் தெரியாமல்
பிறந்தநாளில் அழுதேன் சிறிது நேரம்
அன்றைக் கழுத அழுகை எனக்குள்ளே
இன்னமும் உண்டு அதற்கு ஓசைதான் இல்லை"

வெண்ணிக்குளம் (1902-1930)

பதினேழாம் வயது முதல் எழுதத் தொடங்கிய இவரது 'மாணிக்க வீணை' கேரள சாகித்ய அகாடமி விருது பெற்றது. இவரது 'அம்ம இல்லாத்த கங்க' தாயற்ற பெண்ணின் தவிப்பைச் சித்திரமாக்குவது.

"அழையாதே அழையாதே நண்பா
விண்ணுக்கு என்னை—
மண்ணிது என் பெற்ற தாய்
மற்றெங்கும் சொந்தமில்லை எனக்கு"

என்று பாடும் இவர் கவிக்குரல் வள்ளத்தோளை நினைவூட்டுவதாகும்.

ஜி சங்கர குருப் (1901-1978)

மலையாளக் கவிதைக்கு ஞானபீடப் பரிசை முதன்முதலில் தேடிக்கொடுத்தவர் குருப்.

மும்மணிகளுக்குப் பின் குறிப்பிடத்தக்க சிறப்புமிக்க' கவிஞர் இவர். 'சாகித்ய கௌதுகம்' -4 பாகங்களாக வெளியிட்டுள்ளார். தாகூரின் செல்வாக்கு இவர் கவிதையில் மிகுதியும் உண்டு.

'ஓடக்குழல்' என்ற கவிதையில் தம்மையே புல்லாங்குழலாக்கு கின்ற கற்பனை தாகூரிடம் பெற்றதாகும்.

இயற்கையோடு பூரித்துக் கலக்கின்ற இன்பம் குரூப்பின் கவிதைகளில் புனைவியல் அலைகளை எழுப்புகின்றது. அந்தி நேரத்து விண்மீனோடு கவிஞர் உரையாடுகின்றார்.

யார் நீ இன்பத்தின் உயிர்ப்பே!
இவ்வுலக நெற்றியின் எழிலான திலகம் போல்
வருணன் திசைக்கொரு காதணிபோல்
வாடாத பூவைப் போல் திகழ்கிறாய் நீ...
..............................................................
உன்னிலும் என்னிலும் ஒளிவிடும் ஜோதி
ஒரே பொறியிலிருந்தே வந்ததாய் இருக்கும்
வானத்தில் நீ சுடர் விடும்போது
மண்ணிலுள்ள என் ஆத்மாவும் ஒளிர்கிறதே
அதனால் இருவருளும்
வேறு மூலங்கள் இருக்க முடியுமா?

'ஜி' என்று அழைக்கப்படும் இக்கவிஞரின் 'நாளெ' என்ற கவிதை ஒரு புரட்சியின் அறை கூவலைக் குறியீடாகச் சொல்கிறது.

''பிறவிப் பயனாகக் கிடைத்த அந்தஸ்து
புண்ணியப் பேரென்று
கருவம் கொள்ளும் உச்சி நட்சத்திரமே!
வெளுத்துப்போ, நடுங்கு, அஞ்சு
பார் பின்னால்
வீர ஜோதி வெளிச்சமாய் 'நாளை' ''

இங்கு நட்சத்திரம் முதலாளி வர்க்கத்தையும், 'நாளை' புரட்சியை யும், குறிப்பிடுகின்றன. மார்க்சியத்தை விடக் காந்தீயமே கவிஞ ருக்கு ஏற்றதாய் அமைந்தது. தம் வாழ்வுத் துன்பங்களைக் குறித்துக் கவிஞர் கூறுகின்றார்:

வாழ்வு எனக்குச் சூளையாய் எரிந்தபோது
பூமிக்கு அந்த வெளிச்சத்தால்
வெண்மை பூசினேன்''

அறச் சினம் தளும்பும் கவிதைகளும் 'ஜி'யின் படைப்புக்களில் உண்டு. வெள்ளிக் கிண்ணத்தில் பூனைக்குப் பால் கொடுக்கும் 'கொச்சம்ம', பிச்சைக்காரனைப் போ போ என்று விரட்டுகிறாள். அப்போது பிச்சைக்காரனின் நிலையைக் கூறுகிறார் 'ஜி'.

''நிமிர்ந்தவன் பார்த்தான் அந்தப் பார்வையின்
நெருப்புச் சூட்டில் வேகவில்லையோ தெய்வம்
நெடிதாய்ப் பெருமூச்சுவிட்டான் அம்மூச்சில்
கிழிந்திட வில்லையோ தருமத்தின்கொடி''

Mysticism எனப்படும் அனுபூதி நிலையும், குறியீடும் சங்கர குருப்பின் சிறப்புப் பண்புகளாகும். 'நிமிஷம்' என்ற கவிதையில் ஒவ்வொரு நிமிடத்தையும் அகண்ட தத்துவத்தின் அணுத் துகள் களாகப் பார்க்கிறார்.

''எத்தனை சிறுதுளி இந்த நிமிடம்
ஒன்றுபோய் ஒன்று வருவதன்முன்
அண்ட பேரண்டங்கள் முன்னோடி முன்னோடி
மண்டு வேகத்தினில் பாய்கிறது''

இவ்வாறு சிந்தனைப் பிரளயமாக எண்ணும் கவிஞர் காலத்தை ஒரு பாம்பாகவும், அப்பாம்பு விண்வெளியில் கிடக்கும் கிரக முட்டைகளை ஒவ்வொன்றாய்க் குடித்து உயிரற்ற தாக்கி விடுகிறது என்றும் மனதுக்கெட்டாத உருவகங்கள் புனை கின்ற நேர்த்தி வியப்புக்குரியது.

'ஜி'யின் கவிதைகள் ஒரு மலர்க் கூடையைப் போலப் பல்வேறு வண்ணங்களைத் தொகுத்த களஞ்சியமாகத் திகழ்கின்றன.

## சங்ஙம் புழ (1911 - 1948)

மலையாளக் கவிதையில் எப்போதும் மின்னுகின்ற கோபுரக் கலசம்போல் விளங்குபவர் சங்ஙம்புழ. காலம் மாறுகிறது - கவி தைப் பணிகள் மாறுகின்றன; கவிஞருக்குத் தரப்படுகிற பாராட் டுக்கள் இடம் பெயர்கின்றன. ஆனால்,

"Men may come & Men may go
But I go-on for ever"

என்ற கூற்றுக்கு இலக்காக ஒவ்வொரு தலைமுறையிலும் சுவைஞரைப் பெற்றிருக்கும் கவிஞர் சங்கம்புழ.

சங்கம்புழ கிருஷ்ண பிள்ளையைப் பற்றிப் பேசுவதற்கு முன் இந்தக் கவிதைப் போக்குக்கு வழி வகுத்த அவரது நண்பர் இடைப் பள்ளி ராகவன் பிள்ளை (1909-1936) பற்றியும் குறிப்பிட வேண்டும்.

கற்பனை உலகமும் உண்மை உலகமும் இந்த இரு கவிஞரிடமும் மோதலையும் அதன் விளைவான வேதனையையும் ஏற்படுத்தின. வாழ்வின் அலைகளோடு போராடாமல் மூழ்கிப் போவதே இவர்களுக்கு இயன்றதாக இருந்தது. மரண நேசிப்பு இருவருக்கும் பொதுப்பண்பாக அமைந்தது.

தம் 27ஆம் வயதில் தற்கொலை செய்து கொண்டார் இடைப்பள்ளி ராகவன் பிள்ளை. துஷாகாரம், நவசௌரபம், மணிநாதம், ஹ்ருதயஸ்மிதம் முதலியன இவரது கவிதைத் தொகுப்புக்கள்.

''மணி முழக்கம்! மரணகாளதன்
மணி முழக்கம்! இனிதாய் வருகிறேன்
அனுப்பி வைக்க வருகின்ற தோழரே
அந்திமத்தில் விடை கேட்கலாயினேன்
..................................................
வருகிறேன் இதோ சிதைந்தழிந்தவன்
அழுவதற்கெனப் பிறந்த காதலன்''

என்னும் தீனக்குரல் மக்களை உருக்கிற்று. காதல் தோல்வியால் ஏற்பட்ட தற்கொலை இடைப்பள்ளியின் கவிதைகள்மேல் காதலை வளர்த்தது.

''வாழ்வின் இதமிகு வைகறைப் பொழுதுகள்
மறைந்தன; போயின மீண்டினி வாரா''

(மொ பெ. கோபிநாதன்)

என்ற தொனியே கவிதைகள் முழுதும் எதிரொலிக்கின்றது.

சங்கம்புழையைப் பொறுத்த மட்டிலும் இடைப்பள்ளி எட்டாத உயரங்களிலும் சஞ்சரித்தவர். டாக்டர் லீலாவதி குறிப்பிடுவது

போல, 'இறந்த பின்னும் அவரது தலை பாடிக்கொண்டே இருக்கிறது.'

''நீ மறஞ்ஞாலும் திரையடிக்கும்
நீலக் குயிலே நின்கான மென்னும்''

என்று அவர் பாடிப்போன வரிகள் அவருக்கே பொருந்துகின்றன.

சங்ஙம்புழையின் கவிதைகள் பற்றி எத்தகைய விமர்சனங்கள் எழுந்த போதிலும், அவரது முரண்பாடுகள் குறித்துக் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்ட போதிலும் வண்ணமயமான ஒலிச் சேர்க்கைகளும், நிராசையும் ஆதங்கமும் ததும்பி வழியும் உணர்ச்சிக் கொந்தளிப்பும் அவரது கவிதைகளைத் தனிமனித வழிபாட்டிற்குரியதாக ஆக்கிவிட்டன.

தம் நண்பரின் தற்கொலையை மையமாக்கிக் கவிஞர் எழுதிய 'ரமணன்' என்னும் காவியம் இதுவரை விற்பனையில் பெற்ற வெற்றியை வேறெந்த நூலும் பெறவில்லை.

''என் சிறகுகளின் மேல்
எனக்குச் சொந்தமில்லாத தங்க இறகுகள்
ஏதும் எனக்குத் தேவையில்லை''

''இனி நான் அழமாட்டேன்
அலறும் என் தீப்பொறிகள்
அநியாயங்களைச் சுடும்
அநீதி வேகும்...''

என்றெல்லாம் உணர்ச்சிச் சீற்றம் அவர் கொண்டது, தன்னம்பிக்கைக் குறைவின் அடையாளமே. எனினும் சங்ஙம்புழையின் படைப்புக்களில் விவரிக்க முடியாத ஒரு மெருகு திகழ்ந்து கொண்டே இருக்கிறது.

1934இல் சங்ஙம்புழையின் முதல் தொகுப்பான 'பாஷ்பாஞ்சலி' (கண்ணீரஞ்சலி) வெளியாயிற்று.

''எரியும் என் ஆத்மாவில் பட்டதெல்லாம்
சுடுகின்ற பெருமூச்சுக்களாக இருந்தன''

''காதலாளே களங்கமற்றவளே
இரவில் உன்பக்கம் வருவேன்

அறைவாசல் நீ அடைத்திருந்தாலும்
அகத்தில் நுழைந் தருகில் வருவேன்
அதரம் சிறிதும் அசையாமல் நான்
அழைத்து உன்னை எழுப்புவேன்
நிகரற்றவளே
நீயுமறியாமல் உன்னுடன் கலந்து
நீங்கி நான் போவேன்''

இத்தகைய வரிகளில் தன்னை மறந்து ஈடுபடாதவர் மிக மிகக் குறைவு.

''வஞ்சனை உலகத்தில் நான்
வாய்மையான இதயம் பெற்றிருந்ததுதான்
எனது தோல்வி''

என்ற வேதனையையும் மக்கள் பங்கிட்டுக் கொண்டனர்.

பிசாசின்ரெ பக்தன், ஆராதகன், மோகினி, திலோத்தம, ரமணன், நிர்வ்ருதி, ரக்தபுஷ்பங்கள், ஸ்பந்திக்குள்ள அஸ்தி மாடம் முதலிய 43 நூல்களைத் தந்துள்ளார் சங்ஙம்புழ.

ஒரு புரட்சி இழையும் சங்ஙம்புழ கவிதையில் ஓடிக்கொண்டிருக்கக் காணலாம். 'வாழக்குல' என்ற புகழ்பெற்ற கவிதை இதற்கு எடுத்துக்காட்டு; ஏழை அரிசனப் பணியாள் ஆவலோடு நட்ட வாழை, காய்க்க ஆரம்பித்தபோது குழந்தைகளுக்கு ஏற்பட்ட ஆசைக் கனவுகளும், முதலாளி அதை வெட்டிக் கொண்டு போகிறபோது ஏற்பட்ட ஏமாற்றமும் கவிஞரிடம் கோபமாக வெளிப்படுகின்றன.

''இதற்கெல்லாம் பழிவாங்காது விடுவாரோ
பதர்களே! உங்கள் பின் தலைமுறைகள்''

என்று வினாவாக அது வெடிக்கிறது.

காலந்தோறும் கண்ணீரில் ஆழ்த்துகிற கான கந்தருவனாகச் சங்ஙம்புழ நிலைத்து நிற்கின்றார்.

## பி. குஞ்ஞிராமன் நாயர் (1905-1978)

சத்தியத்தையும் லட்சியத்தையும் தேடிப்போகிற பயணம், அதில் ஏற்படுகிற இழப்பின் தாக்கம் ஆகியவற்றைக் களி துளும்பும்

கவிதைகளாக ஆக்கித் தந்தவர் குஞ்ஞிராமன் நாயர். இவருடைய கவிதைகளில் மூன்று நிலைகள் சிறப்பானவை.

புனைவியல் மின்னல், படிமங்களின் பெருமழை, இசை நயத்தின் வெள்ளப் பெருக்கு இம்மூன்றுமே அவை. தன்னுணர்ச்சிப் பாடல்களாக அமைந்த கவிதைகளில் மின்னி மிளிரும் சொல்லழகு காட்சி தருகின்றது, படிமங்களின் வரிசைகளுக்கு எடுத்துக்காட்டு:

ஓலைக்குடை உயர்த்திப் பிடிக்கும் கரும்பனை யம்மிணிகள், வாய்க்கால் பூணூல் போட்ட வயல்கள், தலைசாய்த்து வெட்கத்தோடு நிற்கும் ரோஜாப்பூ, காற்றை மட்டும் உண்டு சடையும் தாடியும் நீட்டித் திருநீறு பூசி நிற்கும் ஆலமரம், அம்மாவின் கழுத்தில் கைகோத்துத் தொங்கும் நேந்திரம் வாழை இப்படி படிமப் பல்லக்குகளின் ஊர்வலம் இவர் கவிதையில்.

## பாலாமணி அம்மா (1909-)

தன்னுணர்ச்சிக் கவிதையின் மற்றொரு தரங்கமாகத் திகழ்பவர் பாலாமணி அம்மா. அவருக்குக் குழந்தைகளே தெய்வம், தாய்மையே இதயத்து ரத்தம். 'கூப்பு கை', 'அம்ம', 'குடும்பினி', 'ஸ்த்ரீ ஹ்ருதயம்', 'தர்ம மார்க்கத்தில்', 'பாவனயில்' 'உஞ்ஞாலின் மேல்', என இவரது பல தொகுப்புக்கள் வந்துள்ளன.

தூய்மையான அன்பின் கவிதை இவருடையது. குழந்தையை 'விண்ணகத்தின் சாவியை இறுகப் பிடித்துக் கொண்டு', வரும் தெய்வக் கூறாகவே காண்கின்றார். 'நான் யார் உனக்குக் கற்றுக் கொடுக்க' என்றும் வினவுகின்றார். குடும்ப உறவுகளின் மையத்திலிருந்து இந்த வையத்துக்கே அன்னையாக வேண்டும் என்றும் ஆசைப்படுகிறார்.

''நான் இந்தப் பிரபஞ்சத்தின் அன்னையானால்தான்
உன் பிறப்புக்கே அது கௌரவம் தரும்''

என்கிறார். இந்த விசுவத்தாய் என்ற கருத்தோட்டமே மற்றொரு கவிதையில்,

''எவரது காலில் தைக்கின்ற முள்ளும்
எனது ஆத்மாவையும் குத்தி வருத்தும்''

என உருவெடுக்கின்றது. சின்னச் சின்னச் செய்திகள் கூடத் தாய் மனத்தை நோக வைத்துவிடுகிறது. தன் வேலைக்காரியை வேலைக்காரிதானே என நினைப்பது தவறு என்பதால் அவளை வேலையை விட்டு நீக்கி விடுகிறார். ஆனால் அவள்,

''கண்ணும் கலங்காமல் கால்தொட்டுக் கெஞ்சாமல்
விண்ணளாவும் இந்த வீட்டை விட்டேகிட
என்னையே சபிக்கிறேன் வெறும் அதிகார
வீண் பெருமைக்காக வேதனைப் படுகிறேன்''

என்கிறார்.

விடுதலை உணர்வின் நாதங்களும் இவர் கவிதையில் எழுந் துள்ளன. கூண்டுக்கிளி பேசுகிறது:

''விடுதலை செய்யுங்கள் என்னை நான்
விண்ணில் பறந்து திரிந்திட வேண்டும்
கூட்டில் இருக்கும் கம்பிகள் ஒவ்வொன்றும்
குறுஞ்சிரிப்போ டெனைப் பார்ப்பதாய் நினைக்கிறேன்''

'வெளிச்சத்தில்', 'அவர் பாடுன்னு', 'பிரணாமம்' 'முத்தச்சி', 'ஒரு மழுவின் கதை', 'அம்பலத்தில்' போன்ற சிறு காவியத் தொகுப்புக்களும் வந்துள்ளன. அக்காவியங்களில் வரும் புராணப் பாத்திரங்கள் சமகால நிகழ்வுகளோடு உருவாக்கப்படுகின்றனர். எடுத்துக்காட்டாக விசுவாமித்திரன் அணுவால் உலகைத் தகர்க்கக் கருதும் விஞ்ஞானியாகவும், விசிஷ்டர் அறத்தின் பிரதிநிதியாகவும், அரிச்சந்திரன் சத்தியத்தின் பிரதிநிதியாகவும் உருவகம் பெறு கின்றனர்.

''அணுப்போல் உயிரின் நோவும் என் வேதனை;
அங்கது தீர்ப்பதென் வாழ்வின் பெரும்பணி''

என்னும் தாய்மையே பாலாமணியம்மா அவர்களின் கவிதை களாகப் பரிணமித்துள்ளது.

மேரிஜான் தோட்டம், லலிதாம்பிகா அந்தர்ஜனம் போன்ற பிற பெண் கவிஞரும் குறிப்பிடத்தக்கவர்.

எஸ்.கே. நாயர், கே.என்.எழுத்தச்சன், போன்றோர் கவிஞ ராகவும் தமிழிலக்கியத்திலிருந்து முறையே கம்பராமாயணம், சங்கக் கவிதைகள் ஆகியவற்றை மொழி பெயர்த்தவரும் ஆவார்.

**பாலா நாராயணன் நாயர்**

படைவாள் வீசவும், வீணை மீட்டவும் வல்லன இவர் கவிதைகள் என லீலாவதி குறிப்பிடுகின்றார்.

கேரளத்தின் அகமும் புறமுமான அழகுகளை வர்ணித்து வர்ணித்து ஆசை தீராத கவிஞர் என்றும் கூறுவார்.

''இங்கே பிறக்கின்ற கானகப் புல்லிலும் உண்டு
இவ்வுலகையே மயக்கிடும் எழிலும் சுகந்தமும்
இங்கே கிடக்கின்ற காட்டுப் பாறையிலும் உண்டு
எண்ணற்ற பழமையின் மேன்மைப் படிமங்கள்''

என்று எழுதும் பாலா 'கேரளம் வளருன்னு' என்னும் தொடர் கவிதைப் படைப்பாளியும் ஆவார்.

''பாடுகின்றது என்பது சரியல்ல, கேரளம்
பாடச் செய்யும் என்னை ஆனந்த வீணையில்''

என்று மகிழும் அதே கவிஞர் விடுதலை பெற்ற பிறகு நாட்டின் அவலநிலை கண்டு பொருமுவதையும் பார்க்கிறோம்.

''வெளிச்சத்தில் நன்மை யில்லையே
வந்து மூடிக்கொள் பேரிருட்டே''

என்று நொந்தும் பாடுகின்றார்.

**இடசேரி கோவிந்தன் நாயர் (19C6-1974)**

கவிதை இலக்கியத்துக்குச் சிறுசிறு அன்பளிப்புக்களைத் தந்து வந்தாலும் எம்.பி.அப்பன் போன்றோர் ஓரளவு சிறப்பாகக் கவிதை வடித்தனர். ஆனால் இச்சிறிய கட்டுரையில் அவர்களை விரிவாகக் காண்பதற்கில்லை.

இடசேரி தன் படைப்புக்களில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார். அதனால் பின்வருமாறு கூறினார்:

''என் வேண்டுகோள் இதுதான்
சொல்லாதீர்கள்
இது இன்னொன்றின் வேண்டுகோள் என்று''

'புத்தன் கலவும் அரிவாளும்', 'பணி முடக்கம்' என்னும் இரு சிறந்த படைப்புக்களால் புரட்சிக் கவிஞராகத் தம்மை வெளிப படுத்திக்கொண்டார்.

''குழி வெட்டி மூடுங்கள் வேதனையை
குதித்தேறும் சக்தியைப் பெறுக நாமும்''

என்று பாத்திரங்களின் வாயிலாக உணர்த்தினார். எத்தனை எத்தனையோ வாழ்வியல் கூறுகள் இவர் கவிதைக்குப் பொருளாக அமைந்துள்ளன.

'அளகாவலி,' 'கறுத்த செட்டிச்சிகள்', 'விவாக சம்மானம்' 'தத்வ சாஸ்திரங்கள் உறங்கும்போள்', 'காவிலெப் பாட்டு' 'அந்தித்திரி', 'ஒருபிடி நெல்லிக்க' முதலிய படைப்புக்கள் இவருடையவை.

## வைலோப்பிள்ளி (1911-1985)

புனைவியல் யுகத்தின் கடைசிக் கொழுந்துகளில் ஒருவர் வைலோப்பிள்ளி. ஸ்ரீ என்ற புனை பெயரில் தொடக்கத்தில் எழுதினார். புனைவியலிலிருந்து நடப்பியலுக்கும், சில வேளை யுத்த களங்களுக்கும் என இவர் கவிதை பயணமிட்டது. இவரது புரட்சிப் பாராட்டுக்களிலும் கவித்துவம் வற்றியதில்லை.

மாம்பழம் என்ற இவர் கவிதை புகழ்பெற்றது. என்றாலும் இவரது தனித்துவம் சிறந்த படைப்பு 'குடியொழிக்கல்' ஆகும். குடிவெறியால் தன்னிடம் பணிபுரியும் தொழிலாளி மனைவி-மக்களை அடித்துத் துன்புறுத்தியபோது கவிதையின் நாயகன்

'உன் குடி ஒழியவேண்டும் இல்லையெனில்
உன்னைக் குடிபெயர வைப்பேன் நான்

என மனிதநேயத்தோடு பேசுகின்றான். அவன் மீண்டும் குடித்து வந்தபோது பதில் பேச்சாக வரவில்லை, அடியாக விழுகிறது. அடி கொடுத்தவன் மேலும் பச்சாத்தாபத்தால் விழுந்ததாகப் படுகிறது. குடிகாரன் இவன் காதலியையும் சேர்த்து இகழும்போது அடி பலமாகிறது. குடிகாரன் குடிசைகள் தீயில் எரியும்போது எசமானனே செய்ததாகப் பேசப்படுகிறது. அது உண்மையல்ல. ஆகவே அவன் தானே கத்தி எடுத்துக்

கொடுத்துக் கொண்டு கொள் என்கிறான். குடிகாரன் பேசாமல் போய்விடுகிறான். புரட்சியின் நேரடி அனுபவக் கூறுகளாக இவற்றைக் கவிதை படம் பிடிக்கிறது.

'கன்னிக் கொய்த்து', 'மகரக் கொய்த்து' 'வித்தும் கைக்கோட்டும்', 'விட', 'ஓணப்பாட்டுக்கள்', 'குருவிகள்', 'கடல்காக்ககள்' ஆகிய பல தொகுப்புக்கள் வைலோப்பிள்ளி படைப்புக்களாக வந்துள்ளன.

பாச உணர்வின் பெட்டகங்களான பல கவிதைகளையும் தந்தவர் இவர். வாழ்வே கவிதையின் களம் என்பார்.

''செந்தாமரைப் பொய்கையல்ல, வாழ்வின்
கடலே எங்கள் கவிதையின் மைக்கூடு''

என்று எழுதினார். 'லாடம்' என்றொரு எளிய கவிதை. வீதியில் போகிற கவிஞர் லாடம் போடும் காட்சியை வர்ணிக்கின்றார். தத்ரூபமாக. சட்டென்று நிமிர்ந்த ஆசாரியார் இவரை உற்றுப் பார்த்தார். பார்வையில் ஒரு கேள்வி இருந்தது.

'எந்தா நிங்ஙள்க்கும் வேணோ லாடம்?'

கவிஞர் தமக்குள் சொல்லிக்கொண்டார். 'எனக்கு எதற்கு லாடம்? நிறையப்பேர் காலில் தட்டி இருக்கிறார்களே. எனக்கு வேண்டியது மேலே பறக்க ஒரு ஜோடிச் சிறகுகள்' என்று. சிறிய நிகழ்ச்சியும் அரிய கவிதையாகிறது வைலோப்பிள்ளியிடம். நடையழகு மின்னல் துளிர்போல் விளங்குகிறது. நம் சமகாலத்தின் பெரிய படைப்பாளி வைலோப்பிள்ளி.

## என். வி. கிருஷ்ண வாரியார் (1916-1989)

1942 புரட்சியின்போது வேலையை விட்டு விலகிய தேசபக்தர் இவர்.

அடக்கலாம் குமுறி அலறும்
மலை கடலையெல்லாம்.
அடக்குபவன் யார் எம்நாட்டு சுதந்தர
ஆவேசத்தை?'

என முழங்கும் சுதந்தரக் கவிதையின் படைப்பாளியாக ஆரம்பத்தில் திகழ்ந்தார். புதிய உத்திகள், புதிய கண்ணோட்டங்கள்,

புதிய நடைகளை உருவாக்கியவர். மூடநம்பிக்கைகள், அசுர சக்தி, பிறர் துன்பத்தில் இன்புறும் (Sadist) மனப்பாங்கு இவை களை வீராவேசத்தோடு எதிர்த்து எழுதியவர்.

''தங்கள் பாதங்களைத் தொடர்வதற்கு
உருக்கினால் உருவாகட்டும்
சேனாதிபதி!
எங்கள் நரம்புகள்''

என மகாத்மாவை மனதில் வைத்துப் பாடிய கவிஞர் வாரியர்.

'மதிராசியில் ராத்ரி', 'எலிகள்', 'காந்தியும் கோட்சேயும்'' 'நக்சல்பாரி', 'ஜீவிதவும் மரணவும், போன்ற சிறந்த கவிதைகள் தந்தவர் வாரியர். புனைவியல் கவிதையை நடப்பியல் உலகுக்குக் கொண்டு வந்தவரில் முதன்மையானவர். சமுதாய வேதனை களின் முட்கள் இவர் கவிதையில் துருத்தி நிற்கின்றன.

## எம். கோவிந்தன் (1919 - 1989)

புதுக்கவிதை யுகத்தை மலையாளத்துக்குக் கொண்டு வந்தவர் கோவிந்தன். 'சமீட்சா' என்னும் மலையாள, ஆங்கில இதழ்களை நவீன கவிதை வளர்ச்சிக்கென்று படைத்தவர். தமிழ்ப் புதுக் கவிதையையும் தம் ஆளுமையால் பாதித்தவர். 'ஞானஸ்நானம்', 'அரங்கேற்றம், 'நோக்கு குத்தி', 'நாட்டு வெளிச்சம்', 'ஒரு பொன்னானிக்காரன்டெ மனோராஜ்யம்,' முதலியவை இவரது படைப்புக்கள்.

மலையாளக் கவிதையில் பழைய பாட்டு இலக்கியத் தாக்கம் மேம்பட வேண்டுமெனக் கருதியவர். நாட்டார் வழக்காறுகளைப் பயன்படுத்த வேண்டுமென எண்ணிய இவரது கருத்தோட்டம் 'கடம்மனிட்ட ராமகிருஷ்ணன்' மூலம் நிறைவேறியது என்று கூறலாம்.

இவரது கவிதைப் பாங்குக்கு ஒரு எடுத்துக்காட்டு 'நானும் சைத்தானும்'.

தேவனுக்கு உரியதை தேவனுக்கும்
தேசத்திற்கு உரியதை அதற்கும்
தந்துவிட நான் முன் வந்தபோது
ஒருவன் என்முன் வந்து கூறினான்

'எனக்கு உரியதை என்னிடம் கொடு'
'யார் நீ' என்றேன்
'தெரியாதோ சைத்தானை' என்றான்
'அப்படியானால் கேட்டுக்கொள்
என்னுடையது எல்லாமே எனக்கு மட்டும்
என்பதுவே இன்றுமுதல் எனது வேதம்!'
சைத்தான் உரக்கச் சிரித்தான்
என்னைச் சிக்கென்று கட்டிப் பிடித்தான்
என் காதில் மெல்லச் சொன்னான்
'எனக்கு வேண்டியதைத் தான்
தந்தாய் நன்றி!'

இவ்வாறு சிந்தனையில் புதுமையும் இவரிடம் குடியிருந்த போதிலும் இவரது கவிதை நடையில் நாட்டுப்புறப் பாடல்களின் காலடி ஓசை எதிரொலிப்பதைக் காணலாம்.

இவரது படைப்புக்களைக் காட்டிலும் இவரால் மலையாளப் புதுக்கவிதையை நோக்கித் திசை திருப்பப்பட்ட படைப்பாளிகள் பலர் என்ற செய்தி சிறப்பாகப் பேசத்தக்கது.

## ஜி. குமாரபிள்ளை (1923-)

'தாவித் துளும்பும், திரண்டு துடிக்கும்
ஜீவித சொப்னம் என் சப்த சுரங்களில்'

என்று தன்னை அறிமுகம் செய்துகொள்ளும் இவரது கவிதைக்ளை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம்.

காதல் கனவுகளும், கனவுகளின் தோல்விகளும் நிரம்பி வழியும் ஆரம்ப காலக் கவிதைகள் சங்கம்புழையை நினைப்பூட்டுவன. இரண்டாம் கட்டத்தில் சமுதாய ஒழுங்கீனங்களின் மீதெழும் வெறுப்பும் கசப்பும் தார்மீகக் கோபமாய் உருக்கொள்கின்றன. கூராயணீயம், காயம் குளம், இஷ்டம், நர நாராயணன் போன்ற கவிதைகள் இதற்கு எடுத்துக்காட்டு.

'ஆலிலை' என்ற கவிதையில் ஆலிலை கவிஞருக்குப் பல நினைவுகளைத் தருகின்றது. ஆலிலைமேல் பள்ளிகொள்ளும் கண்ணன், கோபிகைகள், காளிங்க சர்ப்பம், அதனைத் தொடர்ந்து அப்பாம்பு, ஆதாம் ஏவாள் கதையில் பாம்பாகிற

சாத்தான் என எண்ணங்கள் விரிகின்றன. பின்னர் ஓர் ஆலிலை யால் தன்னை மறைக்கிற ஏவாள் வருகிறாள். சட்டென்று நவீன காலத்துக்கு விரைகிறார் கவிஞர். வெட்கத்தை மறைக்காத-ஆலிலை தேவைப்படாத திரைப்பட நடிகைகளைக் காட்டு கின்றார். அதன்பின் தெருவோரம் அனாதைப் பிணம் ஒன்று அம்மணமாய்க் கிடப்பதைச் சுட்டிக் காட்டுகின்றார். யாரவள் என்று தெரியவில்லை.

'யாராயிருந்தாலும் நிர்வாணம் மறைத்திட
நானும் ஓர் ஆலிலை நல்கவில்லை'

என உருக்கமாய் முடிக்கிறார் கவிஞர். இவ்வாறு உள்ளத்தில் ஆணி அறையும் கவிதைகள் பல.

'அரளிப்பூக்கள்', 'மருபூமியுடெ கினாவுகள்' முதலிய தொகுப் புக்கள் இவருடையவை.

ஔப்பமண்ண (1923-)

ஔப்பமண்ண சுப்பிரமணியன் நம்பூதிரி வளமான பொருளா தாரப் பின்புலத்திலிருந்து வறுமை பீடித்த மக்களுக்காக அரங்கில் இறங்கியவர். புரட்சி மனப்பாங்குடன் அடியெடுத்து வைத்த கவிஞர், காலச்சூழலால் அமைதியுற்றார். எனினும் மானுடத் துயரங்களில் இவர் கவிதை என்றும் பங்காளியாகவே தொடர்ந்தது.

'வீண்', கல்ப்பன', 'குளம்படி', 'கிலுங்ஙீன்ன கையாமம்', 'இலத்தாளம்', 'தீத்தைலம்', 'கதா கவிதகள்', 'நங்கேமக் குட்டி', 'ஆனமுத்து' முதலிய பல நூல்களின் ஆசிரியர். புனைவியலி லிருந்து தடம் மாறிய கிருஷ்ணவாரியரின் பாணி இவருடையது. பழமையின் கபட வேடங்களைக் கடிவதில் தீவிரமானவர். பழமைச் சாவி புதுமையின் கதவுகளைத் திறக்காது என்பது இவர் கருத்து.

''பார், பார் பழம்பண்பாடு-
சாதியும் மதங்களும்
ஆயுதம் எடுத்தன
ஒன்றையொன்று குத்திக் கிழிக்க' என்பார் கவிஞர்.

விடுதலை, பணக்காரரின் சொந்தக்காரியான கதையைக் 'கிரீடங்களுடெ கத' எடுத்துரைக்கின்றது.

இவரது மிகப் புகழ்மிக்க கவிதை 'நங்கேமக்குட்டி'. காதலனோடு வெளியேற முடியாமலும், குடும்பத்தால் ஏற்க முடியாமலும், புறக்கணிக்கப்பட்ட நம்பூதிரிப் பெண் கர்ப்பிணியாகிக் குழந்தையை விட்டுத் தற்கொலை செய்து கொள்கிறாள். இக் கவிதையில் சாதி, சம்பிரதாயம், ஆணினத்தன்னலம் அனைத்தும் விமர்சனம் செய்யப்படுகின்றன.

## அக்கித்தம் (1926-)

அன்பை மையமாகக் கொண்ட புரட்சி மனப்பான்மை உடையவர் இக்கவிஞர். மனித நேயம் இவர் கவிதைகளின் அடித்தளம். ஒரு புரட்சிப் போராட்டத்தில் மனித உயிர்களைப் பலியிட்ட பிறகு, 'ஒரு கண்ணீர்த்துளி பிறருக்காய்ச் சிந்தும்போதுதான் ஆத்மாவில் ஆயிரம் சூரிய மண்டலங்கள் உதிக்கின்றன' என்ற உண்மையைத் தலைவன் உணர்கிறான். 'புரட்சிக்கவி' போன்ற படைப்புக்களில் இந்த உண்மை உணர்த்தப்படுகின்றது.

புரட்சியின் பெயரால் நடத்தப்படும் வஞ்சனைகளை எதிர்த்துக் குரல் கொடுக்கின்றார் அக்கித்தம். கட்சி அரசியலை,

'ஒவ்வொரு நிறத்தில் சாயம் புரண்ட
கிழிந்த துணிகளின் வேதாந்தம்'

எனக் கடுமையாகச் சாடுகிறார். எனினும் அவரது பார்வை, துக்கங்களுக்கு நடுவே மலரும் இனிய குடும்ப உறவு, காதல் என்னும் வாழ்க்கைப் பூக்களையும் வருடிச் செல்கிறது.

ஒரு போலீசுகாரரை நேசித்த மாதவிக்குட்டி அவனுக்கு ஏற்கெனவே திருமணமாகி விட்டதை அறிந்து கோபத்தின் கொடுமுடிக்கே போகிறாள். ஆனால் அவனது கண்ணீரைப் பார்த்ததும் மெல்ல மெல்ல சாந்தமடைகிறாள். இத்தகைய வாழ்வின் சித்திரங்கள் அவர் கவிதைகளில் பலப்பல. கண்ணீரில் நனைந்த சிரிப்பு அவர் கவிதையில் நெடுகக் காணப்படுகிறது.

'அரங்கேற்றம்', 'தேசசேவிக்', 'மதுவிது', 'பஞ்சவர்ணக் கிளிகள்', 'இடிஞ்ஞு பொளிஞ்ஞ லோகம்', 'இருபதாம்

நூற்றாண்டின்றெ இதிகாசம்' ஆகியவை இவரது குறிப்பிடத்தக்க நூல்கள்.

### பி. பாஸ்கரன் (1924-)

மலையாளக் கவிதை நடையில் பொன்னும் வைரமும் பூண்டு, சலங்கைகள் குலுங்க நடக்கும் சங்ஙம்புழையைப் பின்பற்றியவரில் பி. பாஸ்கரனும், வயலார் ராமவர்மாவும் குறிப்பிடத்தக்கவர்.

எனினும் இவர்கள் இருவரும் இளமையில், கவிதை மக்களுக்காக என்ற மார்க்சியக் கோட்பாட்டின் அடிப்படையில் எழுதத் தொடங்கினர்.

'வீரம் ததும்பும் வாள்
என் எழுதுகோல்
வீணையல்ல'

என்று அன்று எழுதினார் பாஸ்கரன். அந்த வேகம் மிகுந்த நாட்களில் 'வயலார் கர்ஜிக்குன்னு' என்ற படைப்புப் பிறந்தது. இதற்கு இணையான போராட்ட ஆவேசம் மிகுந்த நூல் வேறேதும் இல்லை எனலாம். 'பிரேதங்களின் பாட்டு', 'ஒற்றக் கம்பியுள்ள தம்பூர்' ஆகிய கவிதைகள் எழுதப்படும் வரை இந்தக் கனல் சுடர் விட்டெரிந்தது. பின்னர் இந்த எரிமலை குளிர்ந்து போயிற்று. அந்த ஈரத்தில் காதலும் அதன் நறுமணமும் பூக்கலாயின.

'ஆமீன்', 'பல்லக்கு சுமக்குற்றவர்', 'ஓடக்குழலும்' போன்ற நூல்களிலும் பழைய புரட்சியின் எதிரொலிகள் கேட்டன. ஆயினும் முன்பு இலக்கியத்துக்கு ஒவ்வாதவை என ஒதுக்கிய காதல், அழகுணர்வு முதலியன அவர் கவிதையில் தனியிடம் பெற்றன. இது அவர் கவிதையின் பரிணாமம்.

மொழியழகும் உணர்வெழிலும் மிக்க அவரது படைப்புக்களில் 'வில்லாளி', 'ரணபேரி', ஞாற்று வேலப் பூக்கள்', 'புழ பின்னேயும் ஒழுகுன்னு', 'ஓர்க்குக வல்லப்போழும்' ஆகியவையும் அடங்கும்.

### வயலார் ராமவர்மா (1928-1975)

அலைகள் மேல் ஓடிவரும் அலைகள் போல் இன்ப அசைவுகள் எழுப்பும் பாட்டு நடையில் மக்கள் மனதைக் கவர்ந்தவர் வயலார்.

'பாத முத்ரகள்' என்னும் முதல் தொகுப்பில் சாந்தி பக்தராக அறிமுகமாகும் வயலார், 'கொந்தயும் பூணூலும்' என்ற தொகுதி வரும்போது மார்க்சியத் தாக்கம் பெற்ற புரட்சிக் கவிஞரானார். அப்போது அவருக்கு வயது 22. மதத்துக்கு எதிராகப் போர்க் குரல் எழுப்பும் வயலார் சமூக கலாசாரத் தளங்களில் மாற்றத்தின் வருகைக்குக் குரல் கொடுத்தார். மூடநம்பிக்கைகளும், கடவுளும் இவரது தாக்குதலுக்கு இரையாயினர். 'இத்தாப்பிரி' என்ற நூலில் மதவாதிகள் சாட்டையடி பெறுகின்றனர்.

எளிய மக்களின் வாழ்க்கைத் துன்பங்களில் இழைந்து கலந்து விடுகிறது இவர் கவிதை. வறுமையின் அலையோசை இவர் வரிகளில் முழங்குகின்றது.

'நாலணாவுக் கொரு குழந்தையை
நாணி விற்றனள் நேற்றை நாள்
ஆறணாவுக் குன் குழந்தையை
யார் வாங்குவார் சந்தையில்?'

என்று குழந்தையையும் விற்கும் கொடுமையைப் பேசுகின்றார்.

'வாழ்க்கையை நுரை பொங்கும்
மதுச்சாலை ஆக்கிய வர்க்கமே!
ரத்தத்தில் தோய்ந்த கொடியேந்தி
இதோ வருகின்றது மனிதப் பட்டாளம்'

என்று எச்சரிக்கை விடுகின்றார் வயலார்.

இடதுசாரி இயக்கக் கவிஞராக அறிமுகமாகிய பி. பாஸ்கரன், வயலார், ஓ.என்.வி. குருப் ஆகிய மூவரும் ஒரு கொடி மலர்களைப் போன்றவர். மூவரும் அரசியலிலிருந்து திரைப்படத்துறையிலும் ஈடுபட்டவராவர். எனினும் புனைவியல் என்ற துருவத்தையும் நடப்பியல் என்ற துருவத்தையும் இணைக்கின்ற தன்மையை வயலாரிடம் காணலாம். வண்ணமயமான சொல்லழகும் கருத்தும் வயலாரின் தனித்துவமாகும். அவரது திரைப் பாடல்களில் இதனைத் தெளிவாகக் காணலாம்.

'சக்ரவர்த்தினீ உனக்கு நானொரு
சிற்பகோபுரம் திறந்தேன்
புஷ்ப பாதுகை புறத்தில் வைத்துநீ
வெற்றுக் காலுடன் உள்ளே வா...'

என இசைமணிகள் குலுங்க எழுதினார் வயலார். அதே சமயம் மக்கள் மனம் கவர்ந்த திரைப்பாடல்களில் தம் லட்சியங்களை முன்வைக்கவும் அவர் தவறவில்லை.

'மனிதன் மதங்களைப் படைத்தான்
மதங்கள் கடவுளைப் படைத்தன
மனிதரும் மதங்களும் தெய்வங்களும் சேர்ந்து
மண்ணைப் பங்கிட்டன,
மனதைப் பங்கிட்டன (மனிதன்)

இந்துவாய் முஸ்லிமாய் கிறிஸ்தவனுமானோம்
நம்மை நமக்கே தெரியவில்லை.
இந்தியா பைத்திய விடுதியாயிற்று
ஆயிர மாயிரம் மனித நெஞ்சங்கள்
ஆயுதக் கூடம் ஆயிற்று
தெய்வம் தெருவில் இறக்கிறது
சாத்தான் சிரிக்கிறது' (மனிதன்)

இவ்வாறு கருத்துச் செறிந்த படைப்புக்களால் வயலார் கேரளீயர் நெஞ்சைக் கொள்ளை கொண்டார். கான கந்தருவனாய்ப் போற்றப்பட்டார்.

## ஒ.என்.வி குரூப் (1931 - )

முற்போக்குச் சிந்தனை மிக்க கவிஞராக அறிமுகமானவர் ஒ.என்.வி.

'மனிதனை வஞ்சிக்காத' இயல்பான மொழிநடைக்குச் சொந்தக்காரர் இவரெனத் தொடக்க காலத்திலேயே அடையாளம் கண்டு அறிமுகம் செய்தார் திறனாய்வாளர் ஜோசப் முண்டசேரி.

'வெந்துயர் முட்களின் வேலிகளிலும்
சிந்துர மலர்களின் சிரிப்பினை நெய்திடத்'

துடிப்பதாக இளம்பிராயத்திலேயே கவிஞர் கனவு கண்டார். பாஸ்கரனையும், வயலாரையும் போன்று மக்கள் இயக்கக் கவிஞராக மலர்ந்து சிறந்தவர் குரூப். 'தாகிக்குன்ன பான பாத்ரம்', 'மாற்றுவின் சட்டங்களெ' போன்ற தொகுதிகளில் கொதிக்கும் ரத்தத்தின் குரலொலிகளைக் கேட்கிறோம்.

இவருடைய இயக்கப் பின்னணியில் எந்த மாறுதலும் ஏற்படவில்லையென்றாலும் கவிதையின் பரிமாணங்களில் மாற்றங்கள் விளைந்தன. புற வாழ்க்கையின் அலைவீச்சுக்களைத் தாண்டி மனிதனின் மெல்லிய மன உணர்வுகளின் சிறகுச் சிலிர்ப்புக்களை இவர் கவிதை படம்பிடிக்கத் தொடங்கியது. இசைத்துள்ளலும் இவர் கவிதையில் ஒலிக்கக் காண்கிறோம். 'ஒரு தேவதையும் ரெண்டு சக்ரவர்த்திமாரும்', 'மருபூமி', 'நீலக் கண்ணுகள்' முதலிய படைப்புக்களில் இதனைக் காணலாம்.

உருக்கமான கவிதைப் படைப்புக்களுக்கு 'அனுஜத்தி', 'சோரக்கிளி' ஆகியவை எடுத்துக்காட்டுக்களாகும். 'சோறூண்', 'மயில் பீலி', 'நீல மத்ஸ்யங்கள்' முதலிய கவிதைகளில் மனித நேயத்தின் சலனங்கள் மணம் கமழ்கின்றன, லீலாவதி குறிப்பிடுவது போன்று சமகால மனச்சாட்சியைத் தட்டியெழுப்பும் கவிதைகள் பல ஓ.என்.வி. எழுதியுள்ளார். பேருந்திலிருந்து வழுக்கி விழுகிறது ஒரு வறுமைக் குடும்பத்துக் குழந்தையின் உணவுப் பாத்திரம்; கவிஞர் சொல்கிறார்:

'குழந்தையின் கண்களில் நீர்ததும்பின;
உச்சிவேளையின் உணவுபோனதால் அல்ல
சோற்றுப் பாத்திரத்தில் நாலைந்து
கிழங்குத் துண்டுகளே இருந்ததை
மற்றவர்கள் பார்த்துவிட்டார்கள் என்பதால்'

இத்தகைய துக்கங்களையும் இவர் கவிதை சித்திரிக்கின்றது.

ஒரு துளி உப்பும் கூட இவருக்கு உறவின் கதையும் உலகின் கதையும் சொல்லிவிடுகிறது. 'கண்ணகி' என்ற கவிதையில் கோபக் கனலோடு வரும் கண்ணகி இன்றைய அதிகாரப் பீடங்களை எரிக்கும் தீயாக உருவகமாகிறாள.

'உப்பு', 'அட்சரம்', 'அக்னி சலபங்கள்' 'கறுத்த பட்சியுடெ பாட்டு', 'பூமிக்கொரு சரமகீதம்' ஆகியவை இவரது தலை சிறந்த படைப்புக்கள்,

திருநல்லூர் கருணாகரன், புதுசேரி ராமச்சந்திரன், புனலூர் பாலன் ஆகியோரின் கவிதைகளும் இந்த வரிசையில் இடம் பெறத்தக்கவை.

பி. பாஸ்கரன், வயலார், ஓ.என்.வி. ஆகிய கவிஞரையும் அவர்களின் சாயலில் எழுதியவரையும் புதுப்புனைவியலாளர் (Neo-romantic) எனக் கூறுவது பொருந்தும். புனைவியலும் சமகாலச் சித்திரிப்பான நடப்பியலும் கலந்த கலவையாக இவர்களது படைப்புக்கள் அமைகின்றன.

## புனைவியல் தேக்கமும் புதுக்கவிதை ஆக்கமும்

இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் பாகம் தொடங்கிய போது புனைவியல் கவிதை மலையாளத்தில் புதுப்புனைவியல், நடப்பியல் தடங்களில் பயணமாகியது.

அதனைத் தொடர்ந்து ஆங்கில இலக்கியத்தில் ஆழ்ந்த ஈடுபாடும், உலக இலக்கியப் போக்குகளைக் கூர்ந்து பார்க்கும் பக்குவமும் கொண்ட கவிஞர் புதுக்கவிதையின் உயிர்ப்புக்கு வழி வகுத்தனர். புதிய வெளியீட்டுப் பாங்கு, திடுக்கிட வைக்கும் பாணி, வசனத் தன்மை, உள்முகநோக்கு, படிமப் பயன்பாடு, குறியீட்டுப் போக்கு, அலங்கார மறுதவிப்பு முதலிய பன்முகப் பண்புகளை ஏந்திய புதுக்கவிதைகள் படைக்கப்படலாயின. இப் போக்கினை வளர்த்தவரில் எம். கோவிந்தன், அய்யப்பப் பணிக்கர் ஆகியோரின் பங்கு வரலாற்றுச் சிறப்புமிக்கது.

மலையாளக் கவிதை இலக்கிய வரலாற்றின் ஆசிரியர் லீலாவதியின் கருத்துப்படி புதுக்கவிதை ஆக்கத்தில் மாதவன் அய்யப்பத் குறிப்பிடத்தக்க இடம் பெறுகிறார். அவருடைய 'ஜீவ சரித்ரக் குறிப்புக்கள்' நகரத்தில் வாழும் ஒரு தனிமனிதனின் சிந்தனையோட்டமாக வெளிப்படுகிறது. தினசரி வாழ்க்கை நிகழ்வுகளும், வெறுமையும், சென்ற கால நினைவுகளும், அந் நினைவுகளில் தாம் புத்தனும், நளனுமாகத் திகழ்ந்தமையும் எனச் சிந்தனை மாறி மாறி இழைகிறது.

நான், அவள், கிளி என்னும் மூன்று குறியீடுகளை உள்ளடக்கிய 'பிரதிபயுடை மும்பில்', 'மணியறையிலேய்க்கு', 'மணியறயில்' முதலிய நூல்களில் ஒரு புதிய படைப்புப் பாங்கு அமைந்திருக்கக் காணலாம். 'நான்'-சரித்திர காலம் முதல் இன்றுவரை தேடலில் ஈடுபட்டுள்ள மனிதன். 'அவள்' இத்தேடலில் உடனாக வந்து,

காணாமல் போய், மீண்டும் கிட்டும் பெண்மை, 'கிளி' வழி காட்டுகிற, இருளில் ஒளியூட்டுகிற அந்தரங்க மனம், இவ்வாறு 'பஸ் ஸ்டாப்பில்' 'அசரீரி', 'சொப்ன சுந்தரி', 'பற', 'ஜாம் பவான்' முதலிய புதிய தொனியில் எழுதப்பட்ட கவிதைகளால் மாதவன் அய்யப்பத் புதுக்கவிதையில் நினைவு கூரத் தக்கவரா கிறார்.

## அய்யப்பப் பணிக்கர் (1930 - )

மலையாளப் புதுக்கவிதை இயக்கத்தின் ஆணிவேர் என்று பணிக்கரைக் குறிப்பிடலாம். வடிவம், மொழிநடை, பாடு பொருள் முதலிய எல்லா நிலைகளிலும் மாறுதலுக்கு வழிவகுத் தவர் இவர். புனைவியல், புதுப்புனைவியல், நடப்பியல் கவிதை களில் 'போலச் செய்யும்' யந்திரத் தன்மை மிகுந்திருப்பதாய்ப் பணிக்கர் உணர்ந்தார். ஆங்கிலப் பேராசிரியராகத் திகழ்ந் தமையால் வெளியுலகக் கவிதையின் மாற்றங்களையும் உட் கொண்டார்.

**'நாளையின் பாடல் நான்**
**பாடினேன் அன்றோ**
**தருக சில்லறை' என்கிறான்**
**உரிமையின் பாடகன்**
**எங்கே யுத்தமுண்டோ**
**அதுக்குறித் தெழுதிக்**
**கவிதையைக் காசாக்கி**
**மக்கள் விருப்பமாம்**
**கவிதையில் வாழ்பவன்'**

என உள்ளார்ந்த, உணர்வுகளை உரமாக்காது எழுதுகிற கவி ஞரைக் கேலி செய்கிறார் ''மிருத்யு பூஜ' என்ற நெடுங் கவிதையில்.

அறுபதுகளில் 'குருட்சேத்திரம்', மேலும் சில தனிக்கவிதை களில் தொடங்கியது இவரது புதுக்கவிதைப் பயணம். தொடக்க காலத்திலிருந்தே புதுமையான வெளிப்பாடு கவிதையின் வடி விலும் வார்ப்பிலும் விளங்கலாயிற்று. புதுக்கவிதை வடிவமைப் புக்கும் மொழிக்கும் இடையிலுள்ள தடைகளை அகற்றியது. படைப்புக்கும் படைப்பாளிக்கும் இடையிலுள்ள உறவை வலுப்

படுத்தியது. செயற்கைக்கும் இயற்கைக்கும் இடையே உள்ள முரண்பாடுகளை ஒழுங்கு செய்தது: நினைவிற்கும் உணர்ச்சிக்கும் இடையில் உண்மையின் பக்கம் நின்றது. பொருட்பரப்புகளிலும், நுணுக்கங்களிலும் கூர்மை கொண்டது. பி.ராஜீவன் ('கலிகாலக் கவித' நூல் முன்னுரை) குறிப்பிடுவது போல் பல தடைகளைப் புதுக்கவிதை தாண்ட வேண்டி இருந்தது. கவிதையை எதையும் இட்டு நிரப்பும் காலிப் பாத்திரமாகக் கருதிய பழைய பாணியை ஒதுக்க வேண்டி இருந்தது. கவிதைப் படைப்பாளனும் படிப்பாளனும் ஒருங்கே அனுபவிக்கும் சூட்சம நிலைக்கு அதனை எடுத்துச் சென்றனர் புதுக்கவிதையாளர்.

மொழியைத் தன்னிலிருந்தே அன்னியமாக்கிக் கவிதையை உள்ளிலிருந்து புறப்பட வைக்காமல் புறத்திலிருந்துதிணிக்கும் படிச் செய்வது மற்றொரு இடையூறாக இருந்தது. இதனால் கோஷங்களாய், தோத்திரமாய், யாந்திரீகமாய்க் கவிதை மாறி விடுகிற அபாயம் நேர்ந்தது. இவ்வாறு தன்னியல்பிழந்து சிதைந்து போன மொழிக்கு ஒரு தனித்துவம் படைத்துத்தர வேண்டி இருந்தது. ஆரவாரத்தை விட மௌனத்துக்கு நெருக்கமான நிதானத்தை அதற்குத் தரவேண்டி இருந்தது. இப்படிப்பட்ட சோதனைகளைச் செய்யத் தூண்டுகோலாய் விளங்கியவரில் முதன்மையானவர் அய்யப்பப் பணிக்கர்.

அவரது 'குருட்சேத்திரம்', டி.எஸ்.எலியட்டின் தரிசு நிலத்தின் பாதிப்பு உடைய புதிய நீள் கவிதை என்பர், 'தற்கால மலையாளக் கவிதைகள்' நூல் ஆசிரியர் ஜெயமோகன். வெறும் முற்போக்கு மோசடிகளைப் பணிக்கர் கிண்டல் செய்வதில் சலிப்பதில்லை. எறும்பு பற்றிய ஒரு கவிதை இதற்கு எடுத்துக்காட்டு:

'இந்த எறும்புகள் எங்கே போகின்றன?
முற்போக்கில்தான், ஐயமில்லை
அவைகளுக்குப் பின்னால் நடக்கும்
திறனில்லையன்றோ?
குளியலறையின் நனைந்த திண்ணை மேல்
அந்தக் கறுப்பு வரிசை
அது முழுவதும் எறும்புகள்தான்
என்ன வர்க்க உணர்வு!

இவை யாரைத் தின்கின்றன?
இவற்றை யார் தின்கின்றனர்?
என்ன தின்கின்றன என்பதைவிட
எப்படித் தின்கின்றன என்பதுதான் முக்கியமாம்!'

ஆயினும் இவரது பார்வையில், வீழ்ச்சியடைந்த மானுடரின் எழுச்சி புறக்கணிக்கப்பட்டதாகப் பொருள்கொள்ள முடியாது. 'தம்புரான்' என்ற கவிதையில் 'க்யூ' வரிசையில் பின்னால் நிற்கும் இன்றைய தம்பிரான் பற்றிக் கூறுகின்றார் :

'என்றன் பாட்டன்மார்களைச்
சாட்டைவாரினால் அடித்துப்
பரலோகத்துக்கு நீ
அனுப்பியது நினைவிருக்கிறதா?
பழிவாங்கும் ஆசை யெனக்கு
இல்லையென்றாலும்
உன் தலை தாழும்போது
எனக்குள் ஓர் திருவிழா நடக்கிறது'

என்று பேசுகின்றார் பணிக்கர்.

வாசகனைத் திடுக்கிட வைத்துச் சிந்திக்க வைக்கும் 'சர்ரியலிஸ்ட்' சித்திரங்களும் அவரிடம் உண்டு.

'என் திண்ணைமேல்
என் கை வரைந்த சித்திரம் பார்
ஏன் விழிக்கிறாய்?
மடையா; கவனமாய்ப் பார்
நாபியிலிருந்தும் கண்களிலிருந்தும்
நீளும் நாடிகள் மூளையில்
தாகமுற்று எரிகின்றன
சுற்றிலும் குடைந்து குடைந்து
பாய்கின்றன
செத்த எரிமலையில் பூத்துச்
சிவந்த கனாக்கள்'

இத்தகைய திடுக்கீடு நிறைந்த சொற்களில் வெளிப்பாடுகளை அமைப்பதற்குக் காரணம் முன்னைய சலித்துப்போன

கவிதைக் கூறுகளிலிருந்து விலகி வருவதற்காகவே: அருவருப்பான செய்திகளையும் சித்திரிப்பது இந்நோக்கின் மற்றொரு கூறாகும்.

'சட்டென்று விழிக்க நிறைந்து கிடந்தன
தொட்டிலில் அங்கே தூங்கும் சவங்கள்'
'ரெண்டரை ரூபாய்க் கணக்குச் சொன்னவள்
துண்டை விரித்துப் படுத்தாள் புல்மேல்'

என்ற வரிகளை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

நடைமுறை வாழ்க்கை மீது வெறுப்பூட்டும் இழப்புணர்வு: சர்வநாசமென்ற சித்தாந்தம், மரணத்தை வரவேற்றல், முன்னைய தத்துவங்களின் பயனின்மை போன்ற சிந்தனைப் போக்குகள் இவரது சில கவிதைகளில் மேலோங்கி நிற்கிறது.

பணிக்கரின் கவிதை முற்றி முதிர்கிற நிலையில் ஆழமான கேலித்தொனி மிக ஆற்றலோடு இடம் பெறலாயிற்று. மோகம், ஷஷ்டி பூர்த்தி, விதி முதலிய தனிக் கவிதைகளிலும், மகாராஜா பற்றிய சிறுகதைக் கவிதைகளிலும் கேலி, கிண்டல், ஏளனப் போக்கு நிறைந்துள்ளன. 'பகலுகள் ராவுகள்' என்ற கவிதைச் சரத்தில் ஒரு பகுதி:

'ஈய்க்கு மணம் நுகரும்
திறன் இல்லாமல் போனபோது
அது ஒரு யானையின் தும்பிக்கையில்
இருப்பிடம் கொண்டது
இனி யானை மணம்நுகர்கையில்
தனக்கும் மணம் கிடைக்கும்
'ஈ' ஆறுதல் கொண்டது
அவ்வாறிருக்கையில்
யானையின் தும்பிக்கையில் புண் சீழாகி
அங்கு நாற்றமாயிற்று
யானை தும்மியபோது
'ஈ' வெளியே வந்தது
தனக்கு மணம் நுகரும் திறன்
இல்லாமல் போனது
எவ்வளவு நல்லதாகப் போயிற்று
என்று இப்போது 'ஈ'ய்க்கு ஆறுதல்,

புதுக்கவிதையின் முதல் அணிவகுப்பை நிகழ்த்தியவர் பணிக்கரென்றாலும், அவரது கவிதையிலும் ஓசையழகுகள், புனைவியல் சாயல்கள் அற்றுப் போயிற்றென்று சொல்ல முடியாது. பொருத்தக் கேடுகள், பாசாங்குகள் இவற்றைக் கண்டு நகைக்கும் பணிக்கர், புதிய நடையில் புதிய பார்வைகளால் வாழ்க்கையை ஊடுருவும் பணிக்கர், மரபார்ந்த ஓசை நடையை உதறாமல் அவசியமான இடங்களில் கையாளுகின்றார்.

மூன்று பாகங்களாக வெளிவந்துள்ள இவரது கவிதைத் தொகுப்புக்களில் இவரது முக்கியப் படைப்புக்களான 'குருட்சேத்திரம்', 'குடும்ப புராணம்,, 'பகலுகள் ராவுகள்', 'மிருத்யுபூஜ', 'புரூரவஸ்', 'ஊர்வசி' முதலிய நெடுங்கவிதைகளும் பல தனிக் கவிதைகளும் அடங்கியுள்ளன.

## என். என். கக்காடு (1927-1986)

'சலப கீதம்', '1963', 'பாதாளத்திற்றே முழக்கம்', 'வஜ்ர குண்டலம்' முதலிய கவிதைத் தொகுப்புக்கள் தந்தவர். புதுக் கவிதைப் படைப்பாளியாகப் போற்றப்படும் இவர் கவிதைகளில் புதுமனிதனும் பழங்கதைப் பாத்திரங்களும் இணைகிற வியப்பைக் காணலாம்.

பழங்காவிய மரபுப் படிமங்களைப் பக்தியோடு கையாளும் கக்காடின் கவிதைப் பாங்குக்குத் 'தீர்த்தாடனம்' எடுத்துக்காட்டாகும். அழியாப் பொருளையும், அழகின் உச்சியையும் தேடும் ஒரு யாத்திரையான இக்கவிதையில் இதனைக் காணலாம். படிமமும் செறிவும் இவர் கவிதையின் இரு சிறகுகள் எனலாம்.

இவரது கவிதையின் இரண்டாம் வரலாற்றுக் கட்டத்தில் புதிய நகர நாகரிகத்தின் அன்னியத் தன்மையும், பாசாங்கும் வெளிப்படுத்தப்படுகின்றன. உணர்ச்சியற்றிருக்கும் யந்திரத் தனமும், அறம் பிழைத்த இன்பத் திளைப்பும் மிக்க நகர நாகரிகம் வேதாளப் படிமங்களுடன் உணர்த்தப்படுகின்றது. மலையாளக் கவிதை இலக்கிய வரலாற்றின் ஆசிரியர் சுட்டிக் காட்டுவது போல இவ்வேதாளம் இரைதேடி, இரை விழுங்கும் ஓய்வற்ற வாழ்வின் படிமமாகிறது.

தட்சகனிடமிருந்து வஜ்ர குண்டலத்தைக் காக்க முயலும் உத்தங்கனின் கதை 'வஜ்ர குண்டலம்'. அறம் காக்க ஆசைப்படும் மனச்சான்றின் உருவகக் கவிதை இது. இன்றைய வாழ்க்கையின் போக்கு விமர்சிக்கப்படுகிறது. 'வழி வெட்டுன்னவரோடு' என்ற கக்காடின் கவிதை புதுநெறி சமைப்போர் படும் பாட்டைச் சொல்லும்.

'பெருவழி கண்முன்னிருக்கையில்
புதுவழி நீ சமைப்பதெனில்
உண்டு பற்பல துயரங்கள்
வழி சமைக்கப் போகின்றவரோ
பல நோன்புகள் நோற்றிடவேண்டும்
பல காலம் தவங்கள் புரிந்து
பல கொடுமைகள் ஏற்றிடவேண்டும்'

என்று அருமையாகக் குறிப்பது போன்றே புதுப்பாதை கண்டார் கக்காடு. இவரது சிறப்புமிக்கப் படைப்பாகக் கருதப்படுவது 'சபலம் ஈ யாத்ர' (நிறைவுறும் இந்தப் பயணம்).

மரணத்தை எதிர் கொள்ளும் தீர உள்ளம் வாழ்ந்த வாழ்வை மாயையென்று கருதாமல் கடைசி நிமிடங்களையும் இயற்கையின் எழில் கொண்டு நுகரக் கருதுகின்றது. 'மனிதனைக் கொல்லலாம்; ஆனால் தோற்கடிக்க முடியாது' என்று காட்டும் ஹெமிங்வேயின் 'கிழவனை'ப் போல் இக்கவிதையும் அமைதியான மன நிறைவை நம்மிடம் மந்திரமாய்ப் பேசுகிறது எனக்கவிஞர் சச்சிதானந்தன் இக்கவிதையைப் போற்றுவார்.

## விஷ்ணு நாராயணன் நம்பூதிரி (1939-)

வழக்கமான புதுக்கவிதையாளரின் பண்புகளான பழமை மறுப்பு, மரண நேயம் ஆகிய எவையும் இவரிடம் இல்லை.

'ஸ்வதந்த்ரத்தெக் குறிச்சொரு கீதம்', பிரணய கீதங்கள்' 'முகமெவிடெ', முதலிய தொகுதிகளை வெளியிட்டுள்ளார்.

சுதந்திரத்தைக் குறித்து ஒரு பாடல் என்னும் இவரது கவிதை நாட்டினைக் குறித்துப் பல நம்பிக்கைகளையும் கனவுகளை யும் தாங்கிய ஒரு படைப்பு. இப்போக்கில் வேறு சில கவிதை களையும் படைத்துள்ளார். புராண மூல உருக்களை இக்கால மனிதர்களோடு இணைப்பதும் இவர் பண்பு. படைகளுக்கிடையே

அகப்பட்ட அபிமன்யுவாக நேருவைச் சித்திரிப்பது இதற்கு எடுத்துக்காட்டு.

மனித வர்க்கத்தின் வரலாற்றுக் கட்டங்களும் இவரது கவிதைகளில் வடிவம் பெற்றுள்ளன. நிஷாத பர்வம், பசுபாலபர்வம் என வரும் தொடர் கவிதைகளாக அவை அமைந்துள்ளன. காதலும், கவிதையும் பிறந்த கதைகளும் இவற்றில் இடம் பெறுகின்றன.

வடமொழிப் பேராசிரியரான இவர் கவிதைகளின் சிந்தனைப் போக்குக்கு ஒரு எடுத்துக்காட்டு: 'கங்கா நாராயணன்'. விலக்கப்பட்டவைகளை உண்டு, தவறான வழி நடந்து, கோவிலில் சூதாடி, கன்னிகையைப் பலாத்காரம் செய்த தீய நடத்தையால் புறக்கணிக்கப்பட்டு 'பிரஷ்டம்' செய்யப்படுகிறான். ஏன் தண்டிக்கப்பட்டோம் என்ற கேள்வியோடு இமயச் சாரலில் அலைகிறான். சாப்பிட்டது உயிரைக்காப்பாற்ற; களத்து வீட்டுக்குத் தீவைத்தது தானியம் திருடித் தன் உடலைக் காப்பாற்ற; சூதாடியது பொழுது போக்க; தந்தைக்குரிய சடங்குகளை மறந்தது முன்னோரும் போன வழிப்பிசகால்; கன்னிகையைப் பலாத்காரம் செய்தது அவள் வீசும் கண்ணடி தாங்காமல் என அவனுள் விடைகள் எழுகின்றன. இறுதியில் கர்மம் தன் சிருஷ்டியல்ல - தான் கர்மத்தின் சிருஷ்டி என்றும் முடிவு காண்கிறான். கடவுளில் ஐக்கியமாகிறான். இதனால் விஷ்ணு நாராயணன் நம்பூதிரி தவறுகளுக்குப் பழைய நம்பிக்கையில் பதில் காண்பதைப் பார்க்கிறோம். நமக்கு அதில் நிறைவில்லை. ஆயினும் புதுக் கவிதையில் இவர் மாறுபட்ட கோணத்தில் சிந்திப்பதை உணர்கிறோம்.

## சுகத குமாரி (1934-)

சமகால மலையாளக் கவிதையில் கவனத்துக்குரிய குரல் சுகதகுமாரியினுடையது.

'கனவுகளுக்கும் சத்தியங்களுக்கும் சந்திப்பு மையமாக இருப்பது சுகதகுமாரியின் கவிதை' என, அவருக்கு வயலார் பரிசு வழங்கிய குழு அறிமுகம் செய்கின்றது. கனவுகளின் உயரங்களை நோக்கிச் சத்தியங்களின முள்ளடர்ந்த பாதைகளில் அவர் கவிதை பயணிக்கின்றது. முடிவில் துக்கங்களைச் சந்திக்கின்றது.

புதுமையின் உயிர்ப்பும் புனைவியல் சிறகும் கொண்டது சுகத குமாரியின் கதை. 'முத்துச் சிப்பி' என்னும் கவிதைத் தொகுப்பின் மூலம் இவரை மலையாள இலக்கிய உலகம் அடையாளம் கண்டுகொண்டது. சமூக அவலங்களிலிருந்தும் துயர இழைகளை எடுத்துக் 'கொலாசஸ்', 'பிகார்', 'விதிதினத்தில்', 'தர்ம என்ன பசு' முதலிய கவிதைகளைத் தந்துள்ளார். அவரே தம் 'இருள் சிறகுகள்' என்ற நூலின் முன்னுரையில் தம் கவிதை தோன்றும் மையத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

''அந்தரங்கமான ஏதோ ஒரு அதிருப்தியின் நெரிசலால் முற்றிலும் தடுமாறிய இதயத்தோடு எதைப்பற்றி எழுதுகிறோம் என்றறியாமலே நான் எழுதத் தொடங்குகிறேன்' என்கிறார் அவர்.

இதய துக்கங்கள் ஆத்மாவின் முட்களாய் உறுத்த எழுந்தவை இவரது கவிதைகள் எனலாம். 'ஸ்வனப்ப பூமி', 'பாதிராப் பூக்கள்', 'முத்துச்சிப்பி', பாவம் மானவ ஹ்ருதயம்'. 'இருள் சிறகுகள்', 'அம்பில் மணி', 'ராத்ரி மழ' என்பவை இவரது முக்கியமான தொகுப்புக்கள். ஓடக்குழல் பரிசு. ஆசான் பரிசு, வயலார் பரிசு எனப் பலபரிசுகள் பெற்ற தொகுப்பு 'அம்பில மணி'.

'கிருஷ்ணா நீ என்னை அறியமாட்டாய்' என்ற கவிதையில் ஆயர் பாடியின் ஏழைக் கோபிகை ஒருத்தியின் மனநிலைகள் பேசப்படுகின்றன. அவள் கிருஷ்ணனோடு கொஞ்சித் திரிந்த கும்பலில் இருந்ததே இல்லை. யாரிடமும் அவனுக்கு அவள் தூது சொல்லியனுப்பியதும் இல்லை. ஆனாலும் அவனை நேசித்தவள் அவள். ஒருநாள் அவன் ஆயர்பாடி நீங்கி மதுரை செல்வதாய் அறிந்து கோகுலமே கலங்குகிறது. அதனால் துயரத்தால் சிலையாகிப்போன அவள், வருந்திக் கிடக்கும்போது கிருஷ்ணனின் ரதம் அவள் குடில்முன் நிற்கிறது. கண்ணீர் வாரும் கண்களோடு கிருஷ்ணன் அவளைப் பார்க்கிறான்.

'கருணையால் நிறைந்த தெய்விகப்
புன்சிரிப்பெனக்குத் தருகிறான்...
கிருஷ்ணா, என்னை அறிவாயோ நீ?
கிருஷ்ணா, என்னை அறிவாயோ நீ!'

எனக் கவிதை நிறைவுறுகிறது. இப்படியொரு தவிப்பும், துக்கமும், ஆழ்ந்த சிந்தனையும், ஆறுதலுமாகச் செல்வது சுகத குமாரியின் கவிதை.

## ஆற்றூர் ரவி வர்மா (1931-)

தன்னை அடையாளம் கண்டுகொள்ளும் ஒரு தேடல் ஆற்றூரின் கவிதைகளில் காணப்படுகின்றது. வாழ்வின் விபரீதக் காட்சிகள் அவரிடம் எழுப்புகின்ற கோபமும், ஆவேசமும், பரிகாசமும் ஆகிய உணர்வுகள் அச்சமும், பரிதவிப்பும், நகைச்சுவையுமான வடிவங்களாக உருக்கொள்கின்றன.

தன்னையறியாத தேடலைச் சொல்லும் 'அர்க்கம்' கவிதையில் ஆற்றூர் சொல்கிறார்:

'தொலைவில் ஆள் நடமாடும்போது
யார் போகிறாரெனத் தெரிகிறது
அருகில் ரகசியம் பேசினாலும்
யார் குரலென்று புரிகிறது
பின்னால் யாரோ கண்ணை மூடுகையில்
யார் கரமென்று விளங்குகிறது
என்றாலும் என்முகம் மட்டும்
எப்படிப்பட்டதெனத் தெரியவில்லை
என்நடை எனக்குத் தெரியவில்லை
என்குரல் மட்டும் எனக்குக் கேட்கவில்லை'

தொடக்க காலத்தில் எழுதிய 'மேகரூபன்' கவிதையில் பாரம்பரியத்தைப் பாராட்டிய கவிஞர் பிற்காலத்தில் எழுதிய 'பித்ரு கமனம்' கவிதையில் அதை ஒரு சுமையாய் உணர்த்துகிறார்.

'ஒவ்வொரு சூரியாஸ்தமனத்திலும்
மகனே இந்த வழியை உபதேசித்து
என் கழுத்தை நெரிக்க
வரும் இரண்டு கிழக்கரங்கள்!
நடு இரவில்
கல்லறைச் சமாதியிலிருந்தெழுந்து
வருவான் அவன்
பகலில் நாம்

வடித்துருவாக்கிய
நெடுந்தொலை முழுவதிலிருந்தும்
ஒரே இழுப்பில்
பின்புறம் தள்ள!'

இன்னும் கடுமையான பழமை எதிர்ப்புக் கவிதை 'சங்கர மணம்'.

'கொஞ்ச நாளாக என்னுள்
ஒருத்தியின் உடலழுகி நாறுகின்றது
விரல்கள் மூக்கில்
திணித்துத் தான் நான் நடக்கிறேன்
என்றாலும்
அருகிலுள்ளோரும் தொலைவிலுள்ளோரும்
விலகிப் போகின்றனர்'

அழிந்து நாறும் பழமையை இதைவிடக் கொடூரமாய் எப்படிச் சித்திரிக்க முடியும்?

குறைவாகவே எழுதிக் குறைவாகவே புகழ் பெற்றிருந்த போதிலும் ஆழமும் அழுத்தமும் மிக்க கவிஞர் ஆற்றூர்.

## கடம்மனிட்ட இராமகிருஷ்ணன் (1935-)

இக்கால மலையாளக் கவிதையில் ஒரு தனிச்சிகரமாக விளங்குபவர் கடம்மனிட்ட. கவிதை மொழிதலில் ஓர் அபூர்வ அனுபவத்தை உருவாக்கி வருபவர் கடம்மனிட்ட. இவரது கவிதைகளில் நாட்டுப்புறப் பாடல்களின் போக்கும், உள்ளார்ந்த ஒரு தாள அமைதியும், உணர்ச்சிப் பாவங்களின் உச்சநிலையும், மனைவியாகவும் தாயாகவும் விளங்கும் இறைவியின் பிம்பமும், ஆதிமனித ஆவேசப் படிமமும் மேலோங்கிக் காட்சி தருகின்றன.

தம்மில் தாமே உள்முகமாகவும் சமூகத்தை ஊடுருவியும் பார்க்கிற கூர்மையும், பச்சை மலையாளம் சதங்கையாகக் குலுங்கும் அழகும், அம்பு தைத்த உணர்வு பீறிடும் கோலமும், அந்தரங்கத்தில் அனல்விடும் சினமும் கடம்மனிட்ட கவிதையின் பாவ ரூப சிற்பங்கள்.

கடம்மனிட்டாவை உருவாக்கிய தாக்கங்கள் பல. 'நெல்லின் தண்டு மணக்கும் வழிகளும் எள்ளின் தளிர்கள் அரும்பும் வயல்

களும், கொண்ட அவரது கிராமம் கடம்மனிட்ட, அவருடைய தந்தையாருக்குக் கைவந்த கலையான 'படையணிப் பாட்டு' என்னும் நாட்டுப்புறக்கலை, 1959 முதல் 1967 வரை சென்னையில் சமீட்சா எம். கோவிந்தனோடு அவருக்கு ஏற்பட்ட இலக்கிய உறவு, 1967இற்குப்பின் திருவனந்தபுரத்தில் புதுக் கவிதை முன்னோடி அய்யப்ப பணிக்கரோடு அமைந்த தொடர்பு, உலகப் புகழ்பெற்ற கவிதைகள் பலவற்றை மொழிபெயர்த்ததால் உருவான அனுபவச் செழுமை ஆகியவை கடம்மனிட்ட இராம கிருஷ்ண மீது செலுத்திய தாக்கம் ஆழமானது.

'சென்னையில் வாழ்ந்த எட்டொன்பதாண்டுகள் வெளியாளாக நின்று என்னையும், என் பாரம்பரியத்தையும் பார்த்துக் கொள்ளும் வாய்ப்பைக் கொடுத்தது. சமீட்சா எம். கோவிந்தனுடன் பரிச்சயப்பட்ட பிறகு கவிதை உருவம் பற்றிய பிரக்ஞை ஏற்பட்டது. திருவனந்தபுரத்துக்கு வந்த பிறகு 'கேரள கவித' பத்திரிகைக்காக அய்யப்பப் பணிக்கர் கேட்டுக்கொண்டபடி இடது சாரிக் கவிஞர்களை மொழிபெயர்ப்பிற்காக ஊன்றிப் படித்த போது நான் கால் வைத்திருக்கிற இடமும், என் கண்கள் பார்க்கிற பொருளின் தன்மையும் புரிந்தன. செசார் வயஹோ, நெரூடா, லோர்கா, பிரக்ட், ஆக்டேவியா பாஸ் இவர்களையெல்லாம் என்னில் ஒருவராகவே இப்போதும் காண்கிறேன். அனுபவ எல்லைகளை ஒருபோதும் தாண்டிச் சென்றதில்லை இவர்கள், அதே சமயம் உள்ளடக்க ரீதியில் எழுத்தச்சன், பூந்தானம். ஆசான், டி.எஸ்.எலியட் இவர்களோடும் சில நிலைகளில் எனக்கு ஈடுபாடுண்டு. கவிதை என்று சொல்லி விடுகதை போடுவதிலும், பிரச்சாரம் செய்வதிலும், சித்தாந்தங்களை நிபந்தனையின்றி ஏற்றுக்கொள்வதிலும் உடன்பாடில்லை'' எனக் கடம்மனிட்ட வானம் பாடி இதழுக்காக, பி.கிருஷ்ணசாமிக்குத் தந்த நேர்முகத்தில் தம் கவிதைக் கோட்பாட்டைத் தெரிவித்துள்ளார்.

'கடம்மனிட்டயுடெ கவிதைகள்' என்ற தொகுப்பில் இவரது முக்கியமான கவிதைகள் அனைத்தும் தொகுக்கப் பெற்றுள்ளன. 'காட்டாளன்' 'கிருத விருத்தம்' 'குறத்தி' ஆகிய கவிதைகளில் பொங்கிவழியும் ஆக்ரோஷமும், ஆவேசமும் ஆதிமனிதப் படிமத்தை முன்நிறுத்தி நவீன வாழ்வியல் வனங்களுக்கும் வாழ்வுக்கும் தரும் அழிவைச் சித்திரிக்கின்றன.

'காடன் நான் காட்டுக் கிழங்கின்
வேரில் முளைத்து முதிர்ந்தேன்
கார்மேக முலைப்பால் நாடிக்
கண்டு விரும்பி அழுதேன்
இரவின் நீல நரம்பை வெட்டி
இரத்தம் குடித்து வளர்ந்தேன்'

என்று தொடங்கும் காட்டாளன் தன் பாட்டுக்கு எதிர்ப்பாட்டாகக் 'காளிமை' தவழ்வதை உணர்கிறான். தாய்மைக்குப் பதில் அவனிடம் காதல் ஓங்குகிறது.

'காளி, காளிமை மிக்கவளே என்
காதலி நீயன்றோ?
நெஞ்சைப் பிடுங்கிப் பச்சிலைமீது
காளி உனக்கு நைவேத்யம்
குடலை அறுத்து மாலைகளாக்கித்
திருவுடல் மீது சாத்துகிறேன்'

என அவன் மொழியும்போது மானுடத்தின் ஆதிக்கணங்கள் நினைவுக்கு வருகின்றன.

'குறத்தி' என்ற கவிதையில் ஆதிக்க வர்க்கத்தை அலைக்கழிக்கும் வினாக்கள் அடுக்கடுக்காய் எழுப்பப்படுகின்றன. ஆதித்தாய் வடிவமான குறத்தி கேட்கிறாள்.

'நீங்கள் எனது கறுத்த மக்களைச்
சுட்டுத் தின்பீரோ?
நீங்கள் அவர்களின் கலங்கும் கண்கள்
துளைத் தெடுப்பீரோ?
நீங்கள் எங்களின் எளிய குடில்களில்
குழி பறிப்பீரோ?
எங்களுக்கு வழிகள் வேறில்லை
நீங்கள் அறிய வேண்டும்
எலும்பு நிமிர்ந்த கோபுரம் போல்
நாங்கள் எழுந்திடுவோம்
கல்லில் சமைத்த கோட்டை போல
நாங்கள் நிமிர்ந்திடுவோம்'

இவ்வாறே 'கிராத விருத்தம்' கவிதையில் வனச் செறிவுகளை அழிக்கும் நகர மனிதர்கள் காட்டு மனிதனின் சீற்றத்துக்கு இரை யாகிறார்கள்.

'வேட்டைக்கு வருபவர் கைகளை
வெட்டுவேன் கல்மழு ஏந்தி
மலை தீண்டி அசுத்தம் செய்தவர்
தலை யின்றி ஆற்றில் போவார்'

என்று வெஞ்சின வஞ்சினம் முழங்குகிறது கவிதை.

கடம்மனிட்டாவின் மற்றொரு முகம், மனித உறவுகளின் குளிர் மையாகச் சுடர் விடுகிறது. 'சாந்தா' என்ற கவிதை இதற்கு எடுத்துக்காட்டு. தம் மனைவியை மையமாக்கி எழுதிய இக்கவிதை யில் புனிதமான அன்பின் அலைகள் எழுகின்றன.

'சாந்தா!
குளியல் முடிந்த ஈரத்தோடு
வார் கூந்தல் கோதிவகிர்ந்து முதுகில் வாரியிட்டு
வளைக்கைகள் மெல்ல அசைத்து
உதாசீன பாவத்தில் கண்ணுக்கு மையிட்டு
அசையும் புருவத்தை மீண்டும் கறுப்பாக்கி
நெற்றியில் கரும்பொட்டிட்டு
விரியும் புன்சிரிப்புச் சுடர் ஏற்றி
வா... என் அருகிருந்து
அந்தி ராககீர்த்தனம் போல்
இனியதாய் எளிதாய்
ஏதாவது நல்ல சொற்கள் நாலைந்து பேசி
நிறைவு தா'

எனத் தொடங்கும் இக்கவிதையில் இழைகிற சுகமும் பிரிய உணர்வுகளும் தனித்தன்மை வாய்ந்தவை.

மனித வாழ்வின் பல்வேறு நிலைகளைப் பற்றிய மன அசைவு கள்தான் 'மத்தங்ங', 'புழுங்ஙிய முட்டைகள்', 'பசுக்குட்டியுடெ மரணம்' ஆகிய கவிதைகளாக உருக்கொண்டுள்ளன.

'புருஷன் நான்
பிரகிருதி ஈசுவரி நீ'

என்று படைப்பின் சிருஷ்டி ரகசியங்களில் துளைந்து பாயும் கம்பீர மான கவிதை 'புருஷ சூக்தம்'.

சுருங்கச் சொன்னால் கடம்மனிட்ட இராமகிருஷ்ணனின் கவிதைகளில் ஈடுபடுவது ஒரு தனி அனுபவம். அவர் கவிதைகளை அவரே சொல்லக் கேட்பது சிலிர்ப்பூட்டும் அனுபவம். சித்திர நுணுக்கங்கள் கற்ற நண்பர் சிலர் பழக்கத்தால் அவரது கவிதை களும் ஓவியப் பண்போடு நம்முன் விரிகின்றன.

**சச்சிதானந்தன் (1946 - )**

'வேனிற்காலத்தின் காய்ந்த மரத்தில்
பட்டையுரிந்துவிட்ட வெறும் கொம்பில்
படர்ந்து சுற்றிக்கொண்டு
தாகமுற்ற நா நீட்டி
பிராண வாயுவால் ஊதப்பட்டு உருவான
முத்துப்படத்தை விரித்து
அசைந்தசைந் தாடி ஏறிப்போகும்
விஷம் மிக்க நீலநாகம் என் பாட்டு'

என்று தம் கவிதையை வருணிப்பார் சச்சிதானந்தன். தம் கவிதைப் பாங்கைப் பற்றிப் பேசும்போது 'பீடன காலம்' என்ற கவிதையில்,

'நான் துயரக்காலத்தின் கவி
சகோதரா,
புரட்சிக் காலத்தின் கவிகள்
எனக்குப் பின் வருகிறார்கள்'

என்று குறிப்பிடுகின்றார். பிறப்பால் நடுத்தர வர்க்கத்தினுடைய தும், லட்சியத்தால் மனித வர்க்கத்தினுடையதும் ஆவன தம் கவிதைகள் என்பது அவர் கருத்து.

காரிருளிலும் நம்பிக்கையை நிலை நிறுத்தும் நோக்கோடு கவிதைகளைப் படைத்துள்ள சச்சிதானந்தன் தொடக்கக் காலத்தில் சங்கம்புழையைப் போல் துக்கம் ததும்பும் புனைவியல் கவிஞ ராகவே விளங்கினார். அறுபதுகளில் வெளிவந்த கவிதைகள் இதற்கு எடுத்துக் காட்டு.

விரைவில் தீவிர மார்க்சிய இயக்கங்களில் ஈடுபாடு கொண்டார் சச்சிதானந்தன். ஆயினும் அவரது கவிதைகளின் கவித்துவம் படிம இறுக்கங்களோடும், விசால உலக மானுட நேயத்தோடும் நெருங்கிய படைப்பாகவே வெளிவந்துள்ளது.

வாழ்வில் மகிழ்ச்சிக்குரிய வாய்ப்புக்களை இளம் வயதில் அவர் பெறவில்லை. இரண்டு சகோதரிகளின் மரணம், பைத்தியம் பிடித்த பாட்டி, பெரியம்மா, இரக்கமற்ற பெரிய மாமா, நாட்டுப்புறங்களின் மக்களற்ற அமைதி இவையெல்லாம் அவர் கவிதையின் சோகங்களாகவும், மரண கீதங்களாகவும் வெளிப்படுகின்றன. நிறைவற்ற நட்பு, தோல்வியுற்ற காதல், நண்பர்களின் தற்கொலை ஆகியவையும் அவரை ஆழமாகப் பாதித்துள்ளன.

'அவன் நேசித்தவர்கள்
வேறு யாரையோ நேசித்தார்கள்
அவனை நேசித்தவர்கள்
அவன் நேசம் கிட்டாமல் இறந்தார்கள்
சிறிது காலம் அவன் இறந்த மனிதரின்
விதி நினைத்து அழுதான்
பிறகு வாழும் மனிதரின்
விதி கண்டு சினந்தான்'

என்று 'ஆசுபத்திரி' என்ற கவிதையில் அவர் பேசுவதைக் காணலாம்.

பூமியில் எங்கும் மனித சுதந்தரம் சுவாசக் காற்றாய் அமைய வேண்டும் எனும் தாகம் அவர் கவிதைகளின் உயிர்ப்பாய் உலவுகிறது. சத்தியங்களை அஞ்சாத துணிவுடன் சொல்வது சச்சிதானந்தன் கவிதை.

'சக்கரவர்த்தி அம்மணமென்று கூவிச் செல்லும்
பழைய கதையில் வரும் குழந்தை நான்
ஒரு வீட்டிற்குள்ளும் அடங்காத அறை நான்
ஒரு உடலுக்குள்ளும் அடங்காத மனம் நான்
ஆற்றலுள்ள ஒரு புத்திரனுக்காக
அலறுகின்ற கர்ப்பப்பை நான்'

என்று அவரது 'சத்ய வாக்குமூலம்' கவிதை கூறுகின்றது.

எந்த அடக்குமுறைக்கும் சச்சிதானந்தனின் எழுத்தைக் கட்டிப் போடும் வல்லமை இருந்ததில்லை. அவசர நிலைக்காலத்தில் ஆவேசத்தைக் கருவில் அடக்கிய மனித சுதந்திர வேட்கைக் கவிதைகள் பல அவரிடம் பிறந்தன. ('ஆசுபத்ரி', 'ஒரு மறுபடி', 'நாவுமரம்', 'நிஷ்பட்சத்', 'ஆராணு சத்ரு', 'வடக்கன் பாட்டு', 'மார்ச் 30, 1976')

'இதோ ஒரு மகத்தான நாடு
ஆக்சிஜன் சிலிண்டர் அருகே
கண் மூடிக் கிடக்கிறது..........
...............................
அதனால் நான் எனது இயற்கை வர்ணனைகளையும்
காதல் கீதங்களையும்
ஒரு நிமிடம் மறந்திருக்கிறேன்
என் பாட்டில் பழைய இனிமை இல்லை
எனினும் மனிதன் மெல்லப் பேசுவதற்கேனும்
முடிகிற காலத்துக்காக நான் பாடுகிறேன்'

('ஒரு மறுபடி')

இக்காலக் கட்டத்தில் சச்சிதானந்தன் 'நாவு மரம்' என்ற அருமை யான கவிதையையும் எழுதினார். அப்போதைய சட்டங்கள் மனிதனின் பேச்சுரிமையையும் அழித்த கதைதான் 'நாவு மரம்'.

'நடைவழியில் பெருமனையில்
நாட்டிலெல்லாம் தொற்றுநோய்
நாட்டம்மா நல்லதேவி
கோட்டையிருந் தாணையிட்டாள்
ஊரிலுள்ள நாக்கெல்லாம்
கட்டிவைத்துப் பலி செய்ய'
குருவானோர், நாவரிந்தார்
மருமகனின் நாவரிந்தார்
எதிரிகளின் நாவரிந்தார்
செய்திகளைக் கூவிச்சொல்லும்
சிறுவனது நாவரிந்தார்
சுவர்களிலே கரிகொண்டு
எழுதும் பிள்ளை நாவரிந்தார்

புகை குடித்துப் பொன் விதைக்கும்
பணியாளர் நாவரிந்தார்

முடிவில் அரிந்த நாக்கு ஒன்று முளைவிட்டு விரைவில் 'நாவுமரம்' பந்தலிட்டது. அறுக்க அறுக்கத் துளிர்விட்டது. இந்த நாட்டுப் புறக் கதைப் பாணிக் கவிதை சச்சிதானந்தனின் உறுதிகொண்ட நெஞ்சின் வெளிப்பாட்டுக்கு ஓர் எடுத்துக்காட்டு.

அண்மைக் காலங்களில் தீவிரவாதம் அவரிடம் ஓய்ந்து காணப் படுகிறதெனினும், அடிநாதமான மனிதத் துயரங்களிலிருந்து விடுதலை என்ற குரல் நின்று நிலைக்கிறது.

சச்சிதானந்தன் கவிதைகளில் மனித மன நிலைகள் நிறங் களாகவும் எழுத்துக்கள் சிற்பங்களாகவும் மாறுகின்றன என் கிறார் நரேந்திர பிரசாத். இதற்கு எடுத்துக்காட்டு ''அஞ்சு சூர்யன்'. என் ரத்தத்தில் சிவப்புச் சூரியனும், என் கண்களில் நீலச் சூரியனும், என் எலும்பில் மஞ்சள் சூரியனும், என் நாடியில் வெள்ளைச் சூரியனும் என் உயிரில் கறுப்புச் சூரியனும் உண் டென்று கவிஞர் பேசுகின்றார். இதற்குப் பல விளக்கங்கள் கூறப் பட்டுள்ளன. எனினும் கவிஞர் தம் அனைத்துக் கவிதைகளுக்கும் ஓர் அறிமுகமும், தம் உள்ளுணர்வுகளின் ஒரு படிம வடிவமும் ஆகும் என எடுத்துரைக்கின்றார்.

மரணம் திரும்பத் திரும்ப இவர் கவிதைகளி பாடு பொருளா கின்றது. வாழ்வின் அழிவுக்கு ஒரு மாற்றாகவும், ஒரு புது நட வாகவும் மரணம் அவருக்குத் தோன்றுகிறது. இதன் மூலம் தியாகம் எளிதாகச் சாத்தியமாகிறது. இதனால்தான், 'அரண் மனையை விட்டு வெளியேறிய ராஜகுமாரனைத் திரும்பி வரும்படி அழைக்காதீர்கள்,' ('பனி') என்றும், 'என்றேனும் இம்மண்ணில் துளிர்க்கும் பச்சையின் அடியில் எங்கோ என் உப்பின் ஒரு துளியும் இருக்கலாம்' ('சத்ய வாக்குமூலம்') என்றும் கவிஞர் குறிப்பதாக நரேந்திர பிரசாத் எழுதுகின்றார்.

மிக எளிதாக நம்மை ஏமாற்றும் ஆதிக்க வர்க்கத்தைக் 'கோழிப் பங்கு' என்ற கவிதையில் சுட்டிக்காட்டுகின்றார்.

'என் கோழியை நீங்கள் பங்கிட்டுக்கொள்ளுங்கள்
ஆனால் கூரிய அலகை எனக்குத் தாருங்கள்
என் கோழியை நீங்கள் பங்கிட்டுக் கொள்ளுங்கள்

ஆனால், சிவந்த பூக்கொண்டை எனக்குத் தாருங்கள்'
குன்றிமணிக் கண்ணெனக்குத் தாருங்கள்

என்று தொடர்ந்து சொல்லி, கோழியின் எப்பகுதியையும் பிறருக்குத் தராமல் ஏமாற்றும் விளையாட்டை இக்கவிதை பேசுகின்றது.

உலக இலக்கியச் சாளரங்கள் திறந்து பார்த்துப் பெற்ற அனுபவங்களும், இந்தியச் சமுதாயத்தை ஊடுருவிக் கண்ட கூர்மையும், சென்ற காலத்து இலக்கியங்களில் பெற்ற செழுமையான படிமங்களும், வியப்பூட்டும் மொழித்தேர்ச்சியும் சொற் பயன்பாடுகளும் சச்சிதானந்தனைப் படைப்புக் கலையின் உச்சியை நோக்கி வழியனுப்புகின்றன.

,கவிதை எதையும் நிகழ்த்தாமல் இருக்கலாம்
ஆயினும் சட்டங்களால் அடைத்து மூடமுடியாத வாய் அது
எல்லாரும் உறங்குகையில் விழித்திருக்கும் கண் அது'

என்று பேசும் சச்சிதானந்தன் கவிதையில் போப்பாலின் விஷவாயு வெள்ளமும் தெரிகிறது; ரோம் நகரின் மழையில் நட்சத்திரங்களின் மரணமும் புலனாகிறது. பழனிக் குதிரை வண்டிக்காரனும் வருகிறான்; கோணார்க்கின் பிச்சைக்காரனும் தெரிகிறான்.

'கொப்புளிக்கும் ஜ்வாலையின் உருவத்தில் தான் நம் யுகத்தில் சத்தியம் அவதரிக்கும். புல்லாங்குழலிலிருந்து உடுக்கைக்கு, சுருள் கூந்தலிலிருந்து சடைமுடிக்கு, பட்டாடையிலிருந்து புலித்தோலுக்கு, திருமண்ணிலிருந்து சுடலைச் சாம்பலுக்கு, கௌஸ்துப மணி மாலையிலிருந்து பாம்புக்கு, நம் அழகியல் மாறுகிறது.'

என்று கூறும் சச்சிதானந்தனின் கவிதை வான்விரிவு; இமய உயரம்; வாழ்க்கையின அடி காணமுடியாத ஆழம்.

## செம்மனம் சாக்கோ (1926-)

கேலியும் கிண்டலும குத்தலும் நிறைந்த (Satire) கவிதைகளை எழுதுவதில் தனித்திறமை படைத்தவர் செம்மனம். 'கனகாட்சரங்கள', 'நெல்', 'இன்னு', 'புத்தரி', 'ஆவநாழி', 'அஸ்த்ரம்', 'ஆக்னேயாஸ்த்ரம்', 'ராஜபாத', 'தாக ஜலம்' முதலிய பல கவிதைத் தொகுப்புக்கள் வெளிவந்துள்ளன.

சமுதாய, அரசியல், பண்பாட்டுத் தளங்களில் காணப்படும் வேடிக்கைகளையும், விபரீதங்களையும் நையாண்டி செய்து, உண்மைகளின் பால் நம் கவனத்தை ஈர்க்கும் பணியைச் செம்மனத்தின் கவிதைகள் செய்து வருகின்றன.

வாழ்வின் அவலங்களைக் கண்டு சிலர் அழுது புலம்புகின்றனர். சிலர் கோபம் கொண்டுத் தீப்பந்தங்கள் எடுக்கின்றனர். சிலர் கோபத்தையும் தாபத்தையும் உள்ளடக்கிய சிரிப்பு வெடிகளை வீசுகின்றனர். இவர்களில் மூன்றாவது வரிசையைச் சேர்ந்தவர் செம்மனம் என்கிறார் எம். லீலாவதி.

'ஜாத' என்ற கவிதையில் தலைமைச் செயலகக் கோப்புகள் ஊர்வலம் போகின்றன. மக்களுக்கு நன்மை செய்ய அனுமதியுங்கள் என்று முழங்குகின்றன. இறுதியில் அமைச்சர் தன் செயலாளரிடம் கேட்கிறார்; 'என்னையா எல்லா ஃபைல்களுமா ஊர்வலம் போய்விட்டன? என் பயணப்படி ஃபைலுமா போய் விட்டது?' என்று.

பால் வழங்குதலில் கோளாறு பற்றி ஆராய ஒரு குழு (பால் கமிஷன்) நியமிக்கப்படுகிறது. மூன்று மாதம் குழு வெளிநாடும் சென்று ஆராய்கிறது. பல லட்சங்கள் செலவான பின் ஒவ்வொரு வீட்டுக்கும் குழாய் பொருத்திப் பால் விநியோகம் செய்யப் பரிந்துரைக்கிறது. இந்த வேடிக்கையை ஒரு கவிதை கூறுகின்றது.

தொடக்கவிழா ('உல்காடனம்') பற்றிய ஒரு கவிதையில் அமைச்சர் தன் பணக்கார நண்பரின் மனைவிக்குப் பிரசவத்தைத் தொடங்கி வைப்பதாகக் கவிஞர் கேலி செய்கிறார். 'பாவி சூர்யன்மார்' என்ற கவிதை எடுத்ததெற்கெல்லாம் வேலை நிறுத்தம் செய்யும் மாணவரைக் கிண்டல் செய்கிறது. ஏழு மணிக்குச் சூரியன் உதிப்பதைப் தடுக்க வேண்டும் என்று கிளர்ச்சி செய்கின்றனர். கடைசியில் பேச்சுவார்த்தையில் யாரையும் தண்டிப்பதில்லை என்ற உறுதிமொழி பெற்றுப் போராட்டத்தை விலக்கிக் கொள்கின்றனர்!

கத்தியால் கீறுவதை விடச் சொற்களால் கீறி அறுவை மருத்துவம் செய்கிறார் செம்மனம் சாக்கோ.

## குஞ்ஞுண்ணி (1927-)

மலையாள மொழியில் மட்டுமன்றி இந்திய மொழிகளிலும் குஞ்ஞுண்ணி போன்ற ஒரு கவிஞரைக் காண்பது அரிது. சின்னச் சின்ன வரிகளில் பனித்துளியில் உலகைக் காட்டுவது போல் காட்டுகின்ற அழகு, பழமொழிக் கவிதைகள் என்னும் புதிய உத்தி, கூர்மையான அங்கதம் ஆகியவற்றுக்கு இவர் கவிதைகள் அடையாளம்.

லிமெரிக்ஸ் என்னும் ஆங்கிலக் கவிதைகளில் காணப்படும் அங்கதம் இவரைத் தூண்டியதால் 'நான்சென்ஸ் கவிதைகள்' என்னும் வேடிக்கையான கவிதைகளை எழுதினார். தமிழிலும் மஹாகவி 'குறும்பா' என்னும் லிமெரிக் கவிதைகள் படைத்துள்ளதை இங்கு நினைவு கூரலாம்.

'இந்த உலகைப் பார்க்கும் போது
எனக்குக் குமட்டல் வருகிறது
ஆனால் வாந்தியெடுக்க முடியாது
என் முகத்தில் படும்'

என்னும் கவிதையில் வாழ்வில் நம் அனைவரையும் சுற்றியே வக்கிரங்கள் இருப்பதைச் சுட்டுகின்றார். இவரது குட்டிக் கவிதைகளுக்குச் சில எடுத்துக்காட்டுகள்:

'எனக்குண்டோர் உலகம்
உனக்குண்டோர் உலகம்
நமக்கில்லை ஓர் உலகம்'

'காட்டிக் கொடுக்க ஆளுண்டு
சூட்டிக் கொள்ள முள்முடியுண்டு
அறைவதற்குச் சிலுவையுண்டு
கிறிஸ்து ஆவது இதோ கணத்தில்'

'பிறக்கும் நிமிஷம் முதலென் மகன்
இங்கிலீஷ் படிக்க வேணும்
அதனால் மனைவியின் பிரசவத்தை
இங்கிலாந்திலேயே வைத்துக்கொண்டேன்'

'முன்பு இளைஞனுக்கு
அவனது அப்பம் வியர்வையிலிருந்து
இன்று அப்பனிடமிருந்து'

'ஆணின் அம்மா பெண்
பெண்ணின் அம்மாவும் பெண்ணோ!
இதென்ன நியாயம்,
இதென்ன நீதி!''

**வளரும் கவிதை**

இவ்வாறு வளர்ந்து வரும் மலையாளக் கவிதைக்கு வளமும் வனப்பும் புதுமையும் பூரிப்பும் நல்கி வருகின்ற கவிஞர் பலர்.

ஆர். இராமச்சந்திரன், எம். என். பாலூர், கே. வி. இராமகிருஷ்ணன், என். கே. தேசம், டி. விநயசநதிரன், கே. ரமேசன் நாயர், யூசப் அலி கேச்சேரி, கே. ஜி. சங்கர நாராயணன், பி. நாராயண குரூப், காவாலம் நாராயணப் பணிக்கர், பாலச்சந்திரன், சுள்ளிக்காடு ஆகியோர் இன்றைய கவிஞரில் குறிப்பிடத் தக்கவர்.

அடர்ந்து செறிந்த வனப்பகுதியில் பூத்தும், மணந்தும், காய்த்தும், கனிந்தும் காணப்படும் வகை வகையான செடிகளையும், கொடிகளையும் மரங்களையும் போல இவர்கள் மலையாள மொழிக்கு வலிவும் ஒளியும் பொலிவும் ஊட்டி வருகின்றனர்.

கல்லிடைப் பிறந்து போந்து
கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லையில் மறைகளாலும்
இயம்பரும் பொருளீ தென்னப்
பல்பெருஞ் சமயம் சொல்லும்
பொருளும் போல் பரந்த தன்றே

—கம்பர்

# தமிழ், மலையாளக் கவிதைகள் - ஒரு குறிப்பு

பருந்துப் பார்வையாக ஒரு விரைவு வீச்சில் மலையாளக் கவிதையின் வளர்ச்சி நிலைகளை இதுவரை கண்டோம். தமிழ்க் கவிதைகளோடு மலையாளக் கவிதைகளை ஒப்பிட்டுப் பார்த்தால் சில சுவையான உண்மைகளைச் சந்திக்க முடிகிறது.

1. இரண்டாயிரம் ஆண்டு நீண்ட இடைமுறியாத பாரம் பரியம் தமிழ்க் கவிதைக்கு உண்டு. மலையாளம் தனிமொழியாய் உருக் கொள்ளுமுன் தமிழ் இலக்கியமே இரு மொழியாளருக்கும் பொதுச் சொத்தாக அமைகிறது எனலாம்.

2. சிலப்பதிகாரம், சேரமான் பெருமாள் நாயனார் பாடல் கள், குலசேகராழ்வார் பாடல்கள் என்பன சேர நாட்டுச் செந்தமிழ் இலக்கியங்கள், கேரளீயருக்கும், மலையாளம் உருவாகுமுன் எழுந்த சொந்த இலக்கியங்களாகவே இவை கொள்ளத்தக்கன.

3. மலையாளம் தனி அடையாளம் பெற்ற பின் எழுந்த காவி யங்கள் அனைத்தும் இராமாயணங்களாகவும், பாரதங்களாகவும் தான் தொடக்கத்தில் அமைந்தன. தமிழிலக்கியம் பௌத்த,

சமணத் தாக்கங்கள் பெற்ற ஆழம் பண்டைய மலையாளத்தில் இல்லை.

4. தமிழில் நாடகங்கள் வளர்ச்சி பெறாது போன நிலையில் நாடகக் கூறுகளை உள்ளடக்கிய கதகளி இலக்கியங்கள் மலையாளத்தில் குறிப்பிட்டுச் சொல்கிற அளவு வளர்ச்சி பெற்றன.

5. இக்கால மலையாளக் கவிதை 'கவிமூவ'ரான ஆசான், வள்ளத்தோள், உள்ளூர் ஆகிய மூவரால் பழைய செவ்வியல், புதுச் செவ்வியல் (Classical and neo-classical) பாதைகளை உதறி எழுந்தது. தமிழில் இம்மூவரின் பொறுப்பையும் ஒருங்கே ஏற்றவர் பாரதியார். பாரதியாரின் புனைவியல் எழுச்சியே பாரதி தாசன், கவிமணி, நாமக்கல் கவிஞர் என்ற அடுத்த மூவகைப் புனைவியல் கவிஞரை உருவாக்கித் தந்தது.

6. புனைவியல் கவிதையின் செழிப்புக்கு மலையாளக் கவிதை மேல்நாட்டு இலக்கியச் செல்வாக்கை மட்டுமே நம்பவில்லை. வளமான நமது புராண இலக்கியத்தைப் புதிய பார்வையில் படைத்தளிக்கவும் செய்தது. வள்ளத்தோளின் 'அச்சனும் மகளும்', 'கணபதி', 'பந்தனஸ்த்தனாய அநிருத்தன்' முதலிய படைப்புக்களும், ஆசானின் 'சிந்தாவிஷ்டயாய சீத' நெடுங்கவிதையும், உள்ளூரின் 'கர்ண பூஷண'மும் இதற்கு எடுத்துக்காட்டுக்கள்.

பாரதியார் மட்டும் 'பாஞ்சாலி சபதம்' என்ற பழமரபுக் கதைக் காவியம் ஒன்றைப் படைத்தார். அதன்பின் பாரதிதாசன் காலத்திலும் பின்னரும் திராவிட இயக்க வளர்ச்சி-தமிழ்க் கவிதை மேல் ஏற்படுத்திய புராண மறுப்புத் தாக்கம் காரணமாக இத்தகைய கவிதைகள், காப்பியங்கள் தமிழில் மிகுதியாகத் தோன்றவில்லை. மனித உறவுகளை நயமாகப் பின்னும் 'கண்ட காவிய' மரபு தமிழில் வேரற்றுப் போனது ஒரு பேரிழப்பாகும்.

7. தமிழில் புதுக்கவிதை வளர்ந்த நிலையிலும் புராணப் படிமங்களைப் பயன்படுத்துவது சில திறனாய்வாளரால் பிற்போக்கு என எள்ளி நகையாடப்பட்டது. இன்று அந் நிலைமாறி வருகிறது.

மலையாளத்தில் பண்டைய புராண மரபுக் கதைகளும் 'பின் வந்த புனைவியல் 'கண்ட காவியங்'களும் புதுக் கவிதையில் பழ மரபுப் படிமங்களைச் செழுமையாக்கி உள்ளன.

ஒரு குறிப்பு

அய்யப்பப் பணிக்கர், கடம்மனிட்ட, சச்சிதானந்தன், ஆற்றூர் போன்ற கவிஞரிடம் இதனைக் கூர்மையாகக் காண முடியும். எழுத்தச்சன் இராமாயணம், தம்மை உருவாக்கிய சக்திகளில் ஒன்று எனக் கவிஞர் சச்சிதானந்தன் தெரிவிக்கின்றார்.

8. தமிழில் புதுக் கவிதை 1921இற்கு முன்னரே பாரதியார் கவிதைகளில் முளைவிட்டு அடையாளம் காட்டி விட்டது. முப்பது களில் 'மணிக் கொடி' யுகம் புதுக்கவிதைக்கு நாற்றுப்பண்ணையாக வளர்ந்து விட்டது. அறுபதுகளில் முறுக்கேறிய புதுக்கவிதைப் படைப்புக்கள் உருவாகி விட்டன. ந. பிச்சமூர்த்தி, பசுவய்யா, வைதீஸ்வரன், சிவராம் முதலாகப் பலர் அடியெடுத்து வைக்க, எழுபதுகளில் நடைபோட்டு எண்பதுகளில் மரபுக் கவிதை பெரிதும் காணாமல் போய்விட்டது.

மலையாளத்தில் புதுக்கவிதை ஐம்பதுகளின்தான் தொடங்கு கின்றது. எம். கோவிந்தன், அய்யப்பப் பணிக்கர் முதலியோர் தொடங்கி வைக்க மலையாளப் புதுக்கவிதை வளர்ந்து வரு கின்றது.

9. தமிழ்க் கவிதை வரலாற்றில் யாப்பு வழிக் கவிதை தகர்ந்துவிட்ட ஒரு காலக் கட்டம் எழுபதுகளும் எண்பதுகளும் எனலாம். செவ்வியல் மரபு முற்றிலும் அழிந்து விட்டது. புனை வியல் ஆங்காங்கே புதுக் கவிதையில் தலைகாட்டுகிறது. எனினும் முற்றிலுமாக யாப்பு, அதன் வழியிலெழும் ஓசை ஆகியவற்றைத் தமிழ்க்கவிதை துறந்துவிட்டது.

ஆனால் ஜெயமோகன் குறிப்பிடுவது போன்று, 'மலையாளக் கவிதைகள் தங்களுக்கு முந்தைய கிளாஸிகல், ரோமாண்டிக் கவி மரபுகளின் பாதிபபிலிருந்து விடுபட்டு முற்றாகத் தங்களைத் துண்டித்துக் கொள்ளவில்லை.' இதற்குக் காரணம் மலையாளத்து மக்கள் தங்கள் கலாச்சாரப் பின்புலத்தில் இறுக்கமாக ஈடுபாடு கொண்டிருப்பதுதான். இசை கலந்த ஓசை நயத்துடன் தான் எதுகை மோனையில்லாத, புதுக்கவிதை கூடக் கவிஞரால் அரங்குகளில் படைக்கப்படுகிறது; பாடப்படுகிறது.

10. தமிழ்ப் புதுக்கவிதையின் ஒரு கணிசமான பகுதி தமிழ் மரபு அறியாத ஆங்கில மரபு மட்டுமே அறிந்த கவிஞரால் படைக்கப் படுகிறது. இதனால் தமிழ் வாசகர்களுக்கே ஓர் அந்நியத் தன்மை புலனாவதைக் காண்கிறோம்.

மலையாளப் புதுக்கவிதை, உலக இலக்கியத் தாக்கங்கள் பெற் றாலும் தன்னைத் தானே தன் வேரிலிருந்து அந்நியப்படுத்திக் கொள்ளவில்லை. இடவப்பாதி மழையும், பாலைப் பூக்களின் மணமும் கவிதைகளை விட்டு விலகவே இல்லை. எந்தப் புதுமை யும், 'கைத'ப் பூக்களைச் சாகடிக்கவில்லை. 'பகவதி'ப் படி மத்தை நொறுக்கவில்லை.

11. நெடிய கவிதைகளைப் பெரிதும் தமிழ்ப் புதுக் கவிதையில் காண முடியவில்லை. சிறிய கவிதைகளும் துணுக்குக் கவிதைகளும் தமிழில் பெருகியுள்ளன.

மலையாளத்தில் நெடுங் கவிதைகள் இயல்பாக உள்ளன. கடம்மனிட்ட, சச்சிதானந்தன், பணிக்கர் கவிதைகள் பல நீண்டு நீண்டு செல்லும் போக்குடையவை. இது மலையாள வாசகரை அலுப்படையச் செய்யவில்லை.

12. தமிழ்ப் புதுக்கவிதையாளரில் சிலர் படிமம், குறியீடு ஆகியவற்றின் துணையோடு இருண்மை உத்தியைக் கையாளுகின்றனர். இதனால் தேர்ந்த தமிழ் வாசகனுக்குக்கூடப் புதுக் கவிதை புரியாமை நிலை ஏற்படுகிறது. புதுக்கவிதையாளரோ தாங்கள் உயரத்தை எட்டி விட்டதாகச் சொல்லிக் கொள்கின்றனர்.

மலையாளப் புதுக்கவிதையில் இருண்மை நிலை பெரிதும் இல்லை. வாசகனை விட்டு விலகாதப் போக்கை இதனால் கவிதை பெற்றிருக்கிறது.

13. கவியரங்கக் கவிதைகள் எனத் தமிழில் படைக்கப்படுபவை பெரும்பாலும் கவிதைகள் அல்ல. நேரத்துக்கும் நிகழ்ச்சிக்கும் ஏற்றபடித் தலைப்புக்கள் கொடுத்து எழுதப்படும் ஒரு செயற்கைத் தன்மை அவற்றில் உண்டு. கேட்பாளரின் சுவைக்குத் தன்னை 'விதூஷக'னாக்கிக் கொள்வதும் உண்டு.

வானம்பாடியின் 'கவிராத்திரி'களும், ரகுமானின் 'ஏதேன்' கவிமொழிதலும் இதனை மாற்ற முயன்ற முயற்சிகளில் சில.

மலையாளத்திலும் கவியரங்குகள் உண்டென்றாலும் அதில் தாமே இயற்றிய தனிக் கவிதைகள் சில்வற்றைக் கவிஞர் படிப்பது தான் வழக்கம், அவ்வாறு செய்வதிலும கவிதைகளின் சிறப்பு குறைவுபடுவதாகச் சச்சிதானந்தன் கூறுவார். கவியரங்குக்கு எளிமை, ஓசைநயம், நகைச்சுவை எல்லாம வேண்டும். ஆனால் நல்ல கவிதைக்குச் சிறப்ப ஒழுங்கும், உள்ளார்ந்த அமைதியும், குறிப்புப் பொருளும் வேண்டும். கவியரங்குகள் கவிதையைப் பிரபலப்படுத்துகின்றன என்பதன்றிக் கவிதையோ வாசகனையோ உயர்த்துவதில்லை என்பதும், போலி நாடகத் தன்மை அவற்றில் ஆட்சி செய்கிறது என்பதும சச்சிதானந்தன் கருத்து.

14. தமிழ்ப் புதுக்கவிதையின் ஆரம்பகால வளர்ச்சி வேகமானது. எனினும் அதன பன்முகச் சாதனைகள் இந்த நூற்றாண்டின் இறுதியிலும் இன்னும் தெளிவாகவில்லை தடவி ஊர்ந்து கொண்டிருக்கின்ற பயணமாகவே அமைந்துள்ளது. அண்மைக் காலத்தில் ஒரு தேக்க உணர்வும் காணப்படுகிறது.

மலையாளப் புதுக்கவிதை அவ்வாறின்றி 'அதிரத மகாரத' சாரதிகளைப் பெற்றுள்ளதாகத் தோன்றுகின்றது. முற்றிலும் மாறுபட்ட அடி நாதங்களைக் கொண்ட கடம்மனிட்ட, சச்சிதானந்தன், அய்யப்பப பணிக்கர் குஞ்ஞுணணி போன்ற படைப்புக் கலைஞரின் பன்முகப் பாச்சறையாக மலையாளக் கவிதையுலகம தோன்றுகினறது.

# துணை நூல்கள்


அய்யப்பப் பணிக்கருடெ கவிதகள் 1 & 2; டி, சி. புக்ஸ், 1988

ஆறுகவிதா சமாகாரங்கள்; செம்மனம் சாக்கோ; என் பி எஸ் 1989

கடம்மனிட்ட யுடெ கவிதகள்; டி. சி. புக்ஸ்; 1983

கேரள கவித; கவித சச்சிதானந்தன்; பரப்பனங்காடி

கைரளீ சமட்சம்; சூர நாடு குஞ்ஞன்பிள்ள; கே பாஸ்கரன் நாயர் திருவனந்தபுரம்; 1979

சச்சிதானந்தன்ரெ கவிதகள்-1965-82; அட்சரம், கோட்டயம்; 1983

தற்கால மலையாளக் கவிதைகள்; ஜெய மோகன்; ஆல்பா; திருப்பூர்; 1990

மலையாள இலக்கிய வரலாறு; பி. கே. பரமேசுவரன் நாயர்; சாகிதய அகாடமி, 1984

மலையாள கவிதா சாகித்ய சரித்ரம், எம். லீலாவதி; சாகித்ய அகாடெமி, 1985

மலையாள சாகித்ய சர்வஸ்வம்; செங்காரம் பள்ளி நாராயணன் போற்றி; கேரள சாகித்ய அகாடமி, 1987

Brief survey of Malayalam Literature; K.M. Tharakan; NBS; 1990

History of Malayalam Literature; Krishna Chaitanya; Orient Longmen; 1971.

Malayalam Poetry Today, Kerala Sakitya Akadami; 1984.

# சிறப்புச் சொல்லகராதி

அக்கித்தம் 62
அச்சன் நம்பூதிரி 31
அச்சுத மேனோன் 42, 90
அதங்கோட்டாசான் 5
அந்தர்ஜனம் 55
அநந்தபுர வர்ணனம் 15
அப்பன், எம்.பி. 6
அம்பில்மணி 75
அய்யப்பப் பணிககர் 67-69,78,91
அரங்கேற்றம் 59, 62
அழகத்து பத்மநாபக் குறுப்பு 33
அளகாவலி 57
அனுஜத்தி 66
அஷ்டபதி 27
ஆசன்ன மரண சிந்தா சதகம் 33
ஆசான் 35-39,90
ஆசான் பரிசு 75
ஆதி காவியம் 7
ஆமீன் 63
ஆராதகன் 53
ஆற்றூர் 77, 91
ஆற்றூர் கிருஷ்ணப் பிஷாரடி 6, 47
ஆற்றூர் கோதவர்மா 3
ஆற்றூர் ரவிவர்மா 76
ஆனமுத்து 61
இட்டாரிச்ச மேனோன் 28
இடசேரி கோவிந்தன் நாயர் 56
இடைப்பள்ளி ராகவன் பிள்ளை 51
இரயிம்மன் தம்பி 28, 31
இராமாயணச் சம்பு 20
இளங்கோ 5, 89
உண்ணாயி வாரியர் 27
உமாகேரளம் 33, 44
உள்ளூர் 19, 33, 36, '4, 45, 90
எழுத்தச்சன், கே. என் 17, 22, 23, 55
ஓ.என்.வி. 48, 64-67
ஓடக் குழல் 4), 63
ஓடாட்டில் கேசவ மேனன் 33
ஓணப் பாட்டுக்கள் 58
ஓவாடுதுறை அய்யப்பிள்ளை 20
கக்காடு 73
கங்கா நாராயணன் 74
கடம்மனிட்ட 59, 77-81, 91, 92
கடம்மனிட்டயுடெ கவிதகள் 78
கண்ணசராமாயணம் 7
கதகளி 27, 30
கதா கவிதகள் 61
கம்பராமாயணம் 7, 55
கர்ணபூஷணம் 45, 90
கவித்ரயம் 36
கவிமணி 90
கவியரங்கக் கவிதைகள் 92
கன்னடியன் போர் 11
காகளி 7
கார்த்த வீரிய விஜயம் 29
காவிலெப் பாட்டு 57
கிர்மீரவதம் 27
கிராத விருத்தம் 80
கிருத விருத்தம் 78
கிருஷ்ண காத 18, 19
கிருஷ்ண சைதன்ய 2, 3
கிருஷ்ண பிள்ளை, என். 17
கிருஷ்ண லீல 25
கிருஷ்ண வாரியார், என்.வி. 58, 61

கிருஷ்ண வாரியார், பி.வி. 47
கிருஷ்ணன் தம்பி, வி. 33
கிருஷ்ணனாட்டம் 27
கிளிப் பாட்டு 7, 23
கீசகவதம் 28
குஞ்சன் நம்பியார் 28
குஞ்ஞிகுட்டன் தம்புரான் 32
குஞ்ஞி ராமன் நாயர் பி, 53
குஞ்ஞுண்ணி 87, 92
குட்டமத்து கே பி. கறுப்பன் 33
குமாரபிள்ளை, ஜி. 60
குருட்சேத்திரம் 68, 69, 72
குற்றிப்புறத்து கிட்டுண்ணி நாயர் 47
கூடியாட்டம் 27
கூராயணீயம் 60
கேசவப்பிள்ளை 33
கேசவன் நாயர் 47
கேரள கவித 78
கேரள சாகித்ய அகாடமி 48
கேரள பாணினியம் 3
கேரளம் வளருன்னு 56
கேரள வர்ம ராமாயணம் 25
கேரள வர்மா வலிய கோயில் தம்பிரான் 32
கையறுநிலை 35
கொச்சுண்ணித் தம்புரான் 32
கோட்டயத்துத் தம்புரான் 27
கோயித்தம்பிரான் 28
கோவிந்த கீர்த்தனங்கள் 25
கோவிந்தன், எம். 59,67,78,91
சங்க இலக்கியம் 4, 5, 55
சங்கரப் பணிக்கர் 16, 17
சங்கம்புழ 30,50-52,60,81
சச்சிதானந்தம் 73, 81-85, 91, 92
சடங்குப் பாட்டுக்கள் 11
சம்பு 14
சாக்கியர் கூத்து 30
சாகித்ய கௌதுகம் 48
சாகித்ய மஞ்சரி 41
சாகுந்தல 32
சீராமகவி 6
சுகதகுமாரி 74
சுப்பிரமணிய போற்றி சி.எஸ். 35
செம்மனம் சாக்கோ 85, 86
செறுசேரி நம்பூதிரி 18
சேரமான் பெருமாள் நாயனார் 5, 89
தத்வ சாஸ்திரங்கள் 57
நாகன் கே. எம். 2, 3, 27
தாகூர் 49
திருநல்லூர் கருணாகரன் 66
திருநிழல் மாலை 7
துள்ளல் 30
தூது 15
தெக்கன் பாட்டுக்கள் 10, 11
தொல்காப்பியம் 4
நங்கேமக் குட்டி 61, 62
நளசரிதம் 27
நாட்டுப்புற நாடகங்கள் 26
நாட்டுப்புறப் பாடல்கள் 8
நாமக்கல் கவிஞர் 90
நாயர், எஸ். கே. 55
நாராயண கீர்த்தனங்கள் 25
நாராயணகுரு 36
நாலப்பாடு நாராயண மேனன் 47
நிரணம் கவிகள் 16, 21
பகவத் கீதை 16

படையணிப்பாட்டு 78
பணிக்கர் கே. எம். 47,71,72,92
பத்மநாபபிள்ளை, ஜீ. 33
பதிற்றுப்பத்து 5
பரமேசுவரன் நாயர், பி. கே. 3, 12, 18, 28
பழமொழிக்கவிதைகள் 87
பள்ளத்துராமன் 47
பாகவதம் 27
பாஞ்சாலி சபதம் 90
பாரதம் 21, 23, 24
பாரதிதாசன் 90
பாரதியார் 90, 91
பால கிருஷ்ணப் பணிக்கர், வி.சி. 35
பாலாமணி அம்மா 54, 58
பாஸ்கரன், பி. 63-67
பாஸ்கர ரவிவர்மன் 13
பிச்சமூர்த்தி, ந. 91
புத்தசரிதம் 39
புதுக் கவிதைகள் 67
புதுசேரி ராமச்சந்திரன் 66
புருஷோத்தமன் நாயர், எம், எம், 7
புறப்பொருள் வெண்பா மாலை 5
புன்னசேரி நம்பி 32
புனம் 20, 21
புனலூர் பாலன் 66
பூந்தானம் 25, 26
பூரப் பிரபந்தம் 31
பெருங்கடுங்கோ 5
மகன் நமபூதரி 31
மணிக் காஞ்சி 7
மணிக் கொடி 91
மலையாளக் கவிதா சாகித்ய சரித்திரம் 3
மழமங்கலம் நம்பூதிரி 20, 21
மாதவப் பணிக்கர் 16
மாதவன் அய்யப்பத் 67, 68
மாப்பிள்ளைப் பாட்டுக்கள் 11
மூலூர் பத்மநாபப் பணிக்கர் 33
மேகசந்தேசம் 33
மேரிஜான் தோட்டம் 55
யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரல் 5
ரகுமான் 92
ராமசரிதம் 6, 7, 19, 24
ராமசாமிப் பணிக்கர் 16, 17
ராமனாட்டம் 27
ராவண விஜயம் 21, 28
ராஜராஜவர்மா, எம். எம். 35
ராஜராஜவர்மா ஏ. ஆர். 3, 32, 33, 35
ராஜா கே. கே. 48
ராஜீவன், பி. 69
லலிதாம்பிகா 55
லீலாதிலகம் 4, 6 21
லீலாவதி 3,16 28,51,56.66,67,86
வடக்கன் பாட்டுக்கள் 10
வடக்கும் கூர்ராஜராஜ வர்மா 47
வயலார் 63-67
வயலார் பரிசு 75
வள்ளத்தோள் 33, 35, 36, 40-48, 90
வால்மீகி 2, 17, 44
விடுகதைகள் 12
விறலி விடு தூது 14
விஷ்ணு நாராயணன் நம்பூதிரி 73
வெண்மணி இயக்கம் 32
வைலோப்பிள்ளி 57, 58
ஜாம்பவான் 68
ஜார்ஜ் கே. எம். 3
ஜெயதேவர் 27
ஜெயமோகன் 69, 91

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

டி. டி. டி. ஐ (அஞ்சல்), தரமணி, சென்னை-600 113


## அறக்கட்டளைச் சொற்பொழிவு வெளியீடுகள்

| | |
|---|---|
| இஸ்லாம் வளர்த்த தமிழ் | 15-00 |
| தமிழரின் தாயகம் | 10-00 |
| உ. வே. சா. சங்க இலக்கியப் பதிப்புகள் | 10-00 |
| இனிக்கும் இராசநாயகம் | 50-00 |
| பாவாணரும் தனித்தமிழும் | 12-00 |
| தேவநேயப் பாவாணரின் சொல்லாய்வுகள் | 10-00 |
| உ. வே. சா. காப்பியப் பதிப்புகள் | 10-00 |
| விவிலியம் திருக்குறள் சைவசித்தாந்தம் | 20-00 |
| அகலமும் ஆழமும் | 12-00 |
| செக்கிழுத்த செம்மல் சிதம்பரனார் | 15-00 |
| உ. வே. சா. இலக்கணப் பதிப்புகள் | 15-00 |
| மகாமதிப்பாவலர் | 11-00 |
| உலக முதன் மொழி தமிழ் | 12-00 |
| மறைமலையடிகளார் தனித்தமிழ்க் கொள்கை | 15-00 |
| தமிழ் தந்த வ. உ. சி. | 15-00 |
| உ. வே. சா. ஒரு தமிழ் வாழ்வு | 15-00 |
| வண்ணக் களஞ்சியப் புலவரின் குத்பு நாயகம் | 15-00 |
| மு. வ. புதினங்களில் தமிழ்—தமிழினம் | 20-00 |
| பாவாணர் ஆய்வு நெறி | 25-00 |
| சிற்த்தவமும் தமிழகமும் | 15-00 |
| நாமக்கல் கவிஞர் கவிதைகள்-தேசியம், காந்தியம் | 16-00 |
| தமிழில் அறிவியல்-அன்றும் இன்றும் | 25-00 |
| இதழாளர் ஆதித்தனார் | 26 00 |
| காந்தியப் பெருந்தலைவர் காமராசர் | 20-00 |